# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2015 - 2016

### மானியக் கோரிக்கை எண்–49

**மருத்துவர் எஸ். சுந்தரராஜ்**
விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

# <u>அட்டவணை</u>


| படல எண் | முகவுரை | பக்க எண் |
|---|---|---|
| | முகவுரை | 1 |
| 1. | தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் | 16 |
| 2. | திறன் கண்டறிதல் | 32 |
| 3. | விளையாட்டுத் திறன் மேம்படுத்துதல் | 40 |
| 4. | பயிற்சித் திட்டங்கள் | 56 |
| 5. | விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் | 67 |
| 6. | உதவித் தொகை, விருதுகள் மற்றும் உயரிய ஊக்கத் தொகை | 102 |
| 7. | விளையாட்டுக் கட்டமைப்பு | 116 |
| 8. | முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம் திட்டம் | 130 |
| 9. | இளைஞர் நலத் திட்டங்கள் | 135 |
| 10. | தகவல் மற்றும் ஆவணப்படுத்துதல் | 139 |
| 11. | தேசிய மாணவர் படை | 142 |
| 12. | நாட்டு நலப்பணித்திட்டம் | 164 |
| 13 | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் | 176 |
| | <u>பின் இணைப்பு</u><br>தமிழ்நாட்டில் தற்போது உள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் | 189 |

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## முகவுரை

விளையாட்டு பரஸ்பர மரியாதை, நியாயமானபோக்கு, போட்டி மனப்பான்மை, குழுப்பணி, விளையாட்டுத் திறன், உடற்தகுதி, மன மற்றும் உடல் உறுதி ஆகிய மதிப்புகளைக் கற்பிக்கிறது. மனித இனத்தைப் போன்றே விளையாட்டும் மிகப் பழமையானது, மனித இனத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுடன் விளையாட்டும் வளர்ந்து வருகிறது. வலுவான மற்றும் ஆரோக்கியமான மக்களைக் கொண்ட வளர்ச்சியடைந்த முழுமையான குடிமக்களை உருவாக்குவதே இதன் முக்கிய குறிக்கோளாகும். விளையாட்டு நமது உடலை வலுவாக்கி, செயல்களை வேகப்படுத்தவும் அறிவைக் கூர்மைப்படுத்தவும் செய்கிறது.

"**விளையாட்டல்லாத முழு வேலை ஜேக்–ஐ (Jack) ஒரு அறிவுகுன்றிய சிறுவனாக்கும்**". விளையாட்டு செயல்பாடுகள் மற்றும் ஆர்வம், குழந்தைகள் மற்றும் பிறருக்கும் பல நேர்மறை வாய்ப்புகளை வழங்கும். விளையாட்டில் பங்குபெறுதல் குழந்தைகளின் பள்ளிச்சாதனைகளை அதிகரிக்கும் என நம்பப்படுகிறது.

இந்த போட்டி உலகில், சவாலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றல், குழந்தைகள் போட்டி சமூகத்தில் செயல்பட கற்பிக்கிறது. ‘ஸ்போர்ட்ஸ்’ (SPORTS) என்ற வார்த்தைக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| S | → | Social skills | (சமூகத் திறன்) |
| P | → | Physical Fitness | (உடற்தகுதி) |
| O | → | Obedience | (கீழ்ப்படிதல்) |
| R | → | Resourcefulness | (வளம் பொருந்தியது) |
| T | → | Team work | (குழுப்பணி) |
| S | → | Stress Tolerance | (மன அழுத்தத்தை தாங்குதல்) |

விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகள், விளையாட்டு அரங்கங்களில் வெற்றி மட்டுமல்லாது நமது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் வெற்றி அளிக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகள், வெளிப்புற, உட்புற மற்றும் தடகள விளையாட்டுகளை உள்ளடக்கியதாகும்.

- விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகள் மக்களின் மனம் மற்றும் உடல் வளர்ச்சியினை அதிகரிக்கும் வழிகளாகும்.
- விளையாட்டு, மக்களிடையே நற்குணங்கள் ஏற்படுத்தி ஆற்றல் வலிமை அளிக்க உதவுகிறது.
- விளையாட்டு மக்களிடையே நட்புணர்வையும், குழுமனப்பான்மையும் வளர்க்க உதவும். மேலும் மக்களின் மனம் மற்றும் உடல் உறுதியினை மேம்படுத்த உதவும். விளையாட்டு உடலினை வடிவமைத்து உறுதியாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்திருக்கும்.
- சோம்பல் மற்றும் சோர்வினைத் தவிர்க்க மக்கள் விளையாட்டில் சுறுசுறுப்பாய் ஈடுபட வேண்டும். ஏனெனில் விளையாட்டு இரத்த ஓட்டத்தையும் உடல் நலனையும் மேம்படுத்தும்.
- விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகள் வாழ்வில் கடினமான சூழலை எவ்வாறு சமாளிப்பது என்பதை கற்பிக்கிறது.

தமிழகத்தை விளையாட்டில் முதல் மாநிலமாக உருவாக்க 'மாநில விளையாட்டுக் கொள்கை' உருவாக்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு முதலமைச்சரின் ஆற்றல் மிகு தலைமையின் கீழ், இளைஞர் மற்றும் அனைவரது நலனுக்காக விளையாட்டு மற்றும் உடற்தகுதிக்கு மிகப் பெரிய உந்துசக்தி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு**

**முதலமைச்சரின் தொலைநோக்கு–2023–ன்படி முன்னோக்கிச் செல்வது தமிழக மாநிலத்தை உலகத்தின் விளையாட்டு மையமாக இடம்பெறச் செய்யும்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியதாகும்.

i. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
ii. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்
iii. தேசிய மாணவர் படை
iv. நாட்டு நலப்பணித் திட்டம்

தமிழ்நாட்டில் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட உயரிய அமைப்பான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டு தொடர்பான திட்டங்கள் மற்றும் பல்வேறு கொள்கை முடிவுகளை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் விளையாட்டுப் பல்கலைக் கழகம் ஆகும். கற்பித்தல், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகள் மூலம் உடற்கல்வியியலை மேம்படுத்துவதில் இப்பல்கலைக்கழகம் முக்கிய பங்காற்றி வருகிறது.

தமிழ்நாடு தேசிய மாணவர் படை, இளைஞர்களை இந்திய நாட்டின் பொறுப்புள்ள ஒழுக்கமுள்ள குடிமக்களாக உருவாக்கி மேம்படுத்துகிறது.

தமிழ்நாடு நாட்டு நலப்பணித் திட்டம், இளைஞர்களிடையே தலைமைப் பண்பை புகட்டுதல் மற்றும் கீழ்மட்ட மக்களின் துயர்களை ஆற்றும் பொறுப்புள்ளவர்களாக மாற்றவும் தன்னலமற்ற சமூக சேவை ஆற்றவும் இளைஞர்களை ஊக்குவிக்கிறது.

நேரு இளையோர் மையம் மத்திய அரசின் கீழ் இயங்கும் ஒரு இளைஞர் அமைப்பாகும். மாநில அரசு பல்வேறு இளைஞர் செயல்பாடுகளுக்கு இளையோர் மையத்திற்கு உறுதுணையாக உள்ளது.

## உடற் தகுதி

ஒட்டு மொத்த உடற்தகுதியே விளையாட்டில் சாதிப்பதற்கான அடித்தளமாகும். பெரும்பாலும் வளர் இளம் பருவத்தில் உள்ள உடற்தகுதியே ஒருவரது வயது முதிர்ந்த காலத்தின் உடற்தகுதி மற்றும் நலனைத் தீர்மானிக்கும். இளம் வயதினரின் உடற்தகுதியை மேம்படுத்துதல், இறப்பு மற்றும் நோய் பாதித்தலைக் குறைப்பது மட்டுமல்லாது,

விளையாட்டு மற்றும் ஆற்றலை பேணி வளர்க்கும் வெகுமதி அளிக்கக் கூடிய செயல்முறையாகும். இதன் முக்கிய கூறுகள் உடற் தகுதியை மதிப்பிடுதல் மற்றும் உடற்தகுதியை அதிகரிப்பதற்கான பயிற்சியளித்தல் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும்.

“வாட்டர்லூ போர் ஏடன் விளையாட்டு களத்தில் வெல்லப்பட்டது” என்ற வாக்கியமானது விளையாடுதல் மற்றும் விளையாட்டு மனப்பான்மை, 100 சதவீத உடற்தகுதியினை மேம்படுத்துவதுடன் நல்ல வீரர்கள் மற்றும் நல்ல போராளிகள் ஆகிய அழியாத மதிப்பினை கற்பிக்க உதவும் என்பதைத் தெரிவிக்கிறது.

- ஆரோக்கியமான உணவு மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கை முறை மக்களது வாழ்வியல், மனது மற்றும் உடலில் நல்ல விளைவுகளை அளிக்கும்.
- சர்க்கரை வியாதி, அதிக கொழுப்பு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய், மூட்டுவலி, பக்கவாதம் மற்றும் இதர தீவிர நோய்களுக்கு மக்களை ஆளாக்கும் சுகாதாரக் குறைவான பழக்க வழக்கங்களை பொழுது போக்கு நடவடிக்கைகள் நீக்கும்.
- மாணவர்கள் உடற்தகுதியுடன் இருப்பின், அவர்கள் கல்வியிலும் அதிகமாக சாதனை புரிவர்.

அனைத்து மக்களும் ஆரோக்கிய வாழ்வினை அடையும் நோக்கில், ‘‘முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம்’’ என்ற திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**<u>உடற்கல்வியியல்</u>**

உடற்கல்வியியல் கல்வியுடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும். அது உடல், மனம் மற்றும் சமூக குணாதிசயங்களை வளர்க்கும் நோக்குடையதாகும்.

விளையாட்டு இல்லாத கல்வி முழுமையடையாது. வாழ்வில் அதன் மதிப்பினைக் கருத்திற் கொண்டு, பள்ளிகளில் குழந்தைகளுக்கு மிக இளம் வயதிலேயே சிலவகை விளையாட்டுகள் கற்பிக்கப்படுகின்றன. இந்நாட்களில் விளையாட்டு கல்வி பாடதிட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அவை குழந்தைகளது உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு உதவுகிறது. குணாதிசயங்கள் உருவாக்குவதில் அவை பங்களிக்கிறது. நல்ல மதிப்புகளை குழந்தைகளுக்கு கற்பிக்கிறது.

சிறந்த வீரர்கள் தோல்வியடைந்தாலும் விளையாட்டினை விட்டுவிடாது, சிறப்பாக விளையாடுவர். சிலவற்றில் வெற்றியும் சிலவற்றில் தோல்வியும் அடைவர் என்பதை அவர்கள் அறிவர். தங்களைத் தாங்களே ஒழுக்கமாக

வைத்துக் கொள்வர். விளையாட்டில் தேவையான திறனுக்காக முழுமூச்சுடன் முறையாகப் பயிற்சி பெறுவர்.

அனைத்து இடங்களிலும் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளை ஊக்குவித்தும், விளையாட்டு திடல்கள், தேவையான உபகரணங்கள் இதர வசதிகள் மற்றும் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசாங்கம் வெகுமதி வழங்கி மற்றவர்களையும் விளையாட ஊக்குவிப்பதன் மூலம் சமூகம் பல வழிகளில் பலன்களைப் பெறுகிறது என்பது சமூகவியலாளர்களின் கருத்து. சரியான மனப்பாங்கு மற்றும் அணுகுமுறை விளையாட்டுத் திடலில் மேம்படுத்தப் படுவதால், குற்ற வரைபடம் தாழ்நிலையில் உள்ளது, அதாவது பொதுவான குற்றங்கள் நிகழ்வது குறைகிறது.

## இளைஞர் நலன்


இளைஞர்கள் மாநிலத்தின் மக்கள் தொகையில் மிக முக்கியமான மற்றும் ஆற்றல் வாய்ந்த மிக மதிப்பு மிக்க மனிதவளமாவர். இளைஞர் நாட்டின் நம்பிக்கை மற்றும் எதிர்காலமாக உள்ளனர். அனைத்து சமூக தீமைகளுக்கு எதிரான சமூக உணர்வினை வலுப்படுத்தியும், வளர்த்தும் நாட்டை ஒற்றுமை மற்றும் செழிப்பிற்கும் வழிநடத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றனர்.

**இளமைக்காலத்தின் உயர்வான மதிப்பினை கணக்கிடவும் விவரிக்கவும் முடியாது. இளமைக்கால வாழ்க்கை வாழ்வின் மிகவும் விலை மதிப்பற்ற காலமாகும். இளமைக் காலம் ஒரு சிறந்த காலம். இந்தக் காலத்தை நீ பயன்படுத்தும் விதமே உனக்கு முன்பாக இருக்கும் வரப்போகும் வருடங்களின் தன்மையைத் தீர்மானிக்கும் என்பது சுவாமி விவேகானந்தரின் கூற்றாகும்.**

நமது இளைஞர் முதலில் உறுதியாக இருக்க வேண்டும் என்பது சுவாமி விவேகானந்தரின் நம்பிக்கை. **“எனது இளைய நண்பர்களே, திடமாயிருங்கள், இதுவே உங்களுக்கான என்னுடைய அறிவுரை. மதசம்மந்தமான புத்தகங்களைப் படிப்பதைக் காட்டிலும் விளையாட்டின் மூலம் நீங்கள் சொர்க்கத்தின் அருகில் இருப்பீர்கள்”** எனக் கூறியுள்ளார். உடல் உறுதியாக இருப்பின், மனது ஆரோக்கியமாக இருந்து, உலகினைச் சிறப்பாக புரிந்து கொள்ளும் எனக் கருதினார். அவர் அருளித் தந்த ஞானத்தைத் தவிர வேறு எதிலும் உண்மை இல்லை.

இளைஞரது அதிகப்படியான ஆற்றலானது பயனுள்ள விதத்தில் உபயோகப்படுத்தப்படுமானால், ஒழுக்கம், கூட்டுமுயற்சி, குழுப்பணி, விளையாட்டுத் திறன், பிறருடன் இணைந்து பொதுவான இலட்சியத்தை அடைய ஈடுபடுவதன்

தேவைகளை முழுமையாக உணர்ந்த மக்களைக் கொண்ட ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க அடித்தளம் அமைக்கும் <u>**சிறந்த வெற்றியாளர்களாய் மட்டுமல்லாது தோல்வியுறும் போதும் எவ்வாறு சேர்ந்து பணியாற்றுவது**</u>




<u>**ஆகிய முக்கியமான தகுதியை வளர்க்க கற்றுக் கொள்கிறார்கள். இளைஞர் மற்றும் அவரது சேவையை அங்கிகரிக்கும் வகையில் அரசானது தமிழக இளைஞர்களுக்கென “இளைஞர் கொள்கையை” உருவாக்கி வருகிறது.**</u>

விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆற்றல்மிகு சீரிய தலைமையின் கீழ் தமிழக அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் ஆகியவற்றிற்குப் பெரிய அளவில் உத்வேகம் அளித்து வருகிறது. பல்வேறு புதிய புதுமைத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. துறையின் நிதி ஒதுக்கீடு இதுவரை இல்லாத அளவிற்கு **2015–2016** ஆம் ஆண்டில் ரூ.**149.69** கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிதி ஒதுக்கீட்டில் ரூ.**98.73** கோடி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கும், ரூ.**4.50** கோடி தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்கும் மற்றும் ரூ.**45.11** கோடி தேசிய மாணவர் படைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## <u>தொலைநோக்கு</u>

சமூகம் மற்றும் மாநிலத்தின் நலனுக்காக ஆரோக்கியம், அமைதி, நேர்மறை மற்றும் மதிப்பு மிக்க சுற்றுச்சூழலை உறுதிப்படுத்தி, தமிழகத்தின் இளைஞர்களின் ஆற்றலை மேம்படுத்துதல்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டில் பேரார்வத்தை ஏற்படுத்துதல்.

ஒவ்வொரு திறன் வாய்ந்த குழந்தையும் தங்களது தகுதிகளுக்குட்பட்டு மேம்படுத்தப்பட்ட உயரிய நிலை அடைய சரிசமமான வாய்ப்புகளை அளித்தல்.

**குறிக்கோள்**

மாநிலத்திலும் வெளியிலும் சுறுசுறுப்பான மற்றும் செயல்திறன் மிக்க வாழ்விற்காக கல்வி அறிவு, திறன், மதிப்புகளால் மேம்பாடு, அறிவு, உயர்நிலை அடையும் குணநலன் ஆகியவைகளைப் பெறும் பொருட்டு தமிழகத்தின் இளைஞர்களுக்கு உதவி செய்வதே இதன் குறிக்கோள் ஆகும்.

சர்வதேச அரங்கில் விளையாட்டில் முழுமையான உயர்நிலையை அடைவதற்கு தேவைக்கேற்ப உதவியும் நிதி ஆதாரங்களுக்கு உட்பட்டு ஈடுபடுத்தி ஒவ்வொரு நிலையிலும் பங்கேற்கும் அனைவருக்கும் உறுதுணையாக இருத்தல்.

இத்தொலைநோக்கினை அடைவதற்காக இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளின் தரத்தினை உயர்த்தி பரந்த அளவிலான மக்கள் பங்கேற்பதற்கான முனைப்புடன் ஒரு தொடர்ச்சியான

மற்றும் பயனளிக்கக்கூடிய அடித்தள அளவில் விளையாட்டு மற்றும் உடற்தகுதி மேம்படுத்தும் பிரச்சாரம் தேவை. இது விளையாட்டு அமைப்புகளிடையிலும் பிற பிரிவுகளாகிய கல்வி, சுகாதாரம், பள்ளிகள், பொழுது போக்கினை அளிப்பவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களோடும் ஒருங்கிணைத்து பங்காற்றுதலை வளர்ப்பதை உள்ளடக்கியதாகும்.

**<u>நோக்கம்</u>**

அனைவருக்கும் உடற்தகுதி மற்றும் விளையாட்டை அடித்தள அளவில் அறிமுகப்படுத்தி விரிவான அடித்தளம் அமைப்பதே இதன் முக்கிய இலட்சியம் ஆகும்.

1. விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி திட்டங்கள், கல்வி முறையில் ஒரு முக்கியமான அங்கமாகும். இதனை அடைய விளையாட்டு திட்டங்கள் மற்றும் இளைஞர்களுக்கான பயிற்சிகள் நடைமுறைப் படுத்துதல்.
2. மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் விளையாட்டுப் போட்டிகளில் மேன்மையை ஊக்குவித்தல் மற்றும் விளையாட்டு தரத்தை உயர்த்த, ரொக்க ஊக்கத்

தொகை மற்றும் வெளிப்படையான தேர்வு முறை மேற்கொள்ளுதல்.

3. வயது, பாலினம், சாதி, மதம் ஆகிய பாகுபாடில்லாத அனைத்து குடிமக்களுக்கும் சமமான வாய்ப்பளித்து தேசிய உணர்வினை மேம்படுத்தி விளையாட்டுகள் மற்றும் இளைஞர் செயல்பாடுகளில் ஈடுபடுத்துதல்

4. குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் முதியோரிடையே நேர்மை மற்றும் மதிப்பினை அடிப்படையாகக் கொண்டு விளையாட்டினை ஊக்குவித்தல்.

5. உள்ளாட்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், விளையாட்டு அமைப்புகள், ஊடகம் மற்றும் விளையாட்டு நிறுவனங்களிடையே ஒருங்கிணைப்பு மற்றும் இணைந்து பங்காற்றுதல்.

## படலம் – 1

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தமிழக அரசின் விளையாட்டிற்கான அதிகாரம் சார்ந்த அங்கமாகும். அரசு, விளையாட்டுக் கழகங்கள், விளையாட்டில் ஆர்வமுள்ள நன்கொடையாளர்கள், நிறுவனங்கள் மற்றும் விளையாட்டு மற்றும் உடற்தகுதியில் ஈடுபாடு உடையவர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் ஆதாரங்களைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியை ஊக்குவிப்பது இதன் பங்காகும். இம்முயற்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தனது கவனத்தை திறமையாளர்களைக் கண்டறிவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல், அவ்வாறு கண்டறியப்பட்ட திறமையாளர்களின் திறனை மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் உயர்த்துதல், போட்டி கலாச்சாரத்தை மாநிலம் முழுவதும் ஏற்படுத்தி அதன் மூலம் உடற்தகுதியை ஊக்குவித்தல், திறமையாளர்களைக் கண்டறிதல், போட்டி மனப்பான்மை மற்றும் சகோதரத்துவம் ஏற்படுத்துதல், விளையாட்டு கட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் அதில்

தனியாரை ஈடுபடுத்தி பெருமளவிலான தேவைகளுக்கு அதாவது சமூக அளவிலான போட்டிகளிலிருந்து பன்னாட்டுப் போட்டிகள் வரை ஈடுபட செய்ய ஊக்குவித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. தமிழக அரசின் நிலையான வழிமுறைகள் மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் அதிவேகமாக மேம்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ஆணையத்தின் தலைவர் ஆவார்.

## 1.1 <u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் குறிக்கோள்</u>

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. மாநிலத்தில் விளையாட்டை ஊக்குவித்து மேம்படுத்துதல், விளையாட்டை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துதல் மற்றும் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளின் தரத்தை உயர்த்துதல்.

2. மாநிலத்தில் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளை ஊக்குவிக்கவும், அவைகளின் தரத்தை மேம்படுத்தவும் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களை செயல்படுத்துதல்.

3. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்களை தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிகரமாக பங்கேற்கச் செய்தல்.

4. தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மென்மேலும் உயர்ந்த அளவில் சாதனைகள் அடைய, பல்வேறு ஊக்க உதவித் தொகை மற்றும் விருதுகளை அளித்து ஊக்குவித்தல்.

5. மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க திட்டமிட்டு ஏற்படுத்துதல்.

6. விளையாட்டு மேம்பாடு தொடர்பான ஆராய்ச்சிகளைத் துவக்கி, மேற்கொண்டு, ஆதரவு தந்து, ஊக்குவித்து உற்சாகமளித்தல் மற்றும் விளையாட்டு தொடர்பான மருத்துவம், உயிர் வேதியியல், உளவியல் மற்றும் அதைச் சார்ந்த இதர அறிவியல் துறைகளை மேம்படுத்துதல்.

7. மாற்றுத் திறனாளிகளின் சிறப்புத் தேவைகளை அங்கீகரித்து, விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளில் பங்கேற்க வசதி செய்தல்.

8. மாநிலத்தில் வீர சாகச விளையாட்டுகளை ஊக்குவிக்கும் பொருட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

9. தற்போது இயங்கி வரும் அல்லது புதிய விளையாட்டு நிறுவனங்கள் நிறுவி, நடத்தி, மேற்பார்வை மற்றும் நிர்வாகம் செய்தல் மற்றும் அத்தகைய நிறுவனங்களின் நடவடிக்கைகள் மற்றும் பணிகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மேற்கொள்ளுதல்.

10. பல்வேறு விளையாட்டுகள் மற்றும் போட்டி விளையாட்டுக்களுக்கு மேம்பட்ட பயிற்சியளித்தல்.

11. பொதுமக்களிடையே உடற்பயிற்சியின் அவசியத்தை உணரச் செய்வதன் மூலம் விளையாட்டு மற்றும் ஆரோக்கியத்தின் மீது கவனம் கொள்ளச் செய்து, அவர்களை விளையாட்டில் தொடர்ந்து ஈடுபடச் செய்வதன் மூலம் தமிழ்நாட்டை ஆரோக்கியமான மற்றும் வலிமையான மாநிலமாக உருவாக்குதல்.

தமிழ்நாடு, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சில தனிநபர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் குழுப் போட்டிகளில் முன்னணியில் சிறந்து விளங்குகிறது. தமிழக அரசு விளையாட்டு வீரர்களை கௌரவிக்கும் வகையில் தமிழகத்தில் மிகச் சிறந்த விளையாட்டுக் கட்டமைப்புகள், பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்க தொகைகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் விளையாட்டினை மேம்படுத்தி வருகிறது.

## 1.2 விளையாட்டில் சிறப்பான நிலையினை அடைந்திட திறன் வாய்ந்த செயல்முறை

éisah£L Åu®fŸ விளையாட்டில் சிறந்த சாதனையைப் படைத்து அவர்களின் விளையாட்டிற்கு ஏற்றவாறு வேலைவாய்ப்புகளில் தகுதி பெறுவதற்கும் இவ்விளையாட்டு வீரர்கள் தங்களது படிப்பைத் தொடரவும் வழிவகுக்கிறது. இத்தகுதி தேசிய அளவில் அங்கீகாரம் பெற்று எந்நேரத்திலும் உடனடியாக வேலைவாய்ப்பு பெறும் விதத்தில் அமைந்துள்ளது. பாடத் திட்ட கால அளவினை பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை. முழு ஆற்றலுடன் விளையாட்டில் உயர்நிலை அடையவும், சாதனை படைப்பதில் உயர் இலட்சியத்தை அடைய நினைக்கும் விளையாட்டு

வீரர்களுக்கானதாகும். இத்திறன் விளையாட்டு வீரரின் விளையாட்டு மற்றும் வேலை தொடர்பானது மற்றும் திறன் மற்றும் வேலைவாய்ப்பினை மேம்படுத்தும் தகுந்த உறுதியான வாய்ப்புகளை வழங்கும். தெளிவாக வரையறுக்கப்பட்ட நீண்டகால உத்தி, ஐந்து பல்வேறு நிலையினைக் கொண்ட பிரமிடு முறையிலான செயல் திட்டத்தினைக் கொண்டுள்ளது. இவ்வாறான பிரமிடு வரிசையில் நிலை–1, அடித்தள திறன் கொண்ட அளவிலும், நிலை–5, அதிகபட்ச திறன்கொண்ட அளவிலுமாக உள்ளது.

**நிலை – 1 மக்கள் திரள் பங்கேற்பு மற்றும் பரந்த அடித்தளம்**

விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கு இம்மாதிரியை இந்தியாவின் விளையாட்டு அமைப்புகள் பின்பற்றுகின்றன. விளையாட்டுச் செயல்பாடுகளில் திரளான மக்கள் பங்கேற்பதை உறுதி செய்தல், விளையாட்டில் பரந்த அடித்தளத்தின் முக்கியமான அம்சமாகும். இந்நோக்கத்தை அடைய சீனா, “1995–ல், சீன மக்கள் குடியரசின் உடல் சுகாதாரச் சட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்தச் சட்டம் சீன மக்கள் ஒவ்வொரு

நாளும் குறைந்தபட்சம் ஒரு விளையாட்டிலாவது பங்கேற்க ஊக்கப்படுத்துகிறது. மேலும், அத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில், போதுமான கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏறக்குறைய **6,20,000** விளையாட்டு அரங்கங்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள் பெரும்பாலும் பொதுமக்களின் உபயோகத்திற்காக சீனாவில் திறக்கப்பட்டன. நகர்புற சமூகங்களில் திறந்தவெளி உடற்பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு நிதி திரட்ட விளையாட்டு லாட்டரி என்ற திட்டத்தினை அறிமுகம் செய்தது. சமூக ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதியினை மேம்படுத்தும் நோக்குடன் சீனாவில் விளையாட்டுக் கலாச்சாரத்தைக் கற்பிப்பதில் இம்முயற்சி முக்கிய பங்காற்றுகிறது.

விரும்பும் முடிவைப் பெறுவதற்காக, இந்தியாவின் விளையாட்டுச் சூழலை மாற்றுவது தேவை எனக் கருதப்படுகிறது. விளையாட்டு வாழ்வின் விருப்பமிகு வேலையாக இந்தியாவில் இன்றளவும் கருதப்படவில்லை. விளையாட்டு வாழ்வின் அதிகமான காலம், விளையாட்டு வாழ்வின் மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த நோக்கு, கிரிக்கெட் வீரரல்லாத விளையாட்டு வீரர்களையும்

அங்கீகரித்தல், விளையாட்டு மற்றும் கல்விக்கிடையேயான தொடர்பு ஆகியவை விளையாட்டினை விருப்பமிகு வாழ்வாக ஏற்றுக் கொள்ள இந்தியாவின் இளைஞர்களை ஊக்குவிக்கும் காரணிகளாகும். நிச்சயமாகவே, தமிழகத்தில் திறனாளர்களுக்கு குறைவு இல்லை. தடகள விளையாட்டு வீரர்களின் எதிர்காலத்தை பாதுகாக்கும் பொருட்டு அவர்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக ஒரு முழுமையான அணுகுமுறையானது ஏற்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:–

1. வேலைவாய்ப்பு சந்தையில் எதிர்கால வாய்ப்புகளை கண்டறியும் நோக்குடன் ஒரு ஆலோசனை மையம் ஏற்படுத்துதல்.

2. ஊடகம், மேடைப் பேச்சு, தலைமைப் பண்பு, நிதி திட்டமிடல், கால மேலாண்மை ஆகியனவற்றில் பயிற்சி அளிப்பதன் மூலம் ஆளுமைத் திறனை மேம்படுத்துதல்.

3. பல்கலைக்கழக கல்வி முறை மூலம் கல்விக்கான வழிகாட்டல்.

இந்தியாவில் விளையாட்டுப் பரவலை ஏற்படுத்த இந்த மூன்று கோட்பாடுகளையும் செயல்படுத்த இயலும்.

வாழ்க்கை வழிகாட்டியுடன் இணைந்து ஒரு ஒருங்கிணைந்த திட்டமானது நாட்டில் உள்ள இளைஞர்கள் விளையாட்டை ஒரு தொழில் சார்ந்த விருப்பமாகத் தேர்வு செய்ய தூண்டும் மற்றும் விளையாட்டில் அதிகமானோர் பங்கேற்பது விளையாட்டுக் கலாச்சாரத்தை ஏற்படுத்தும். இத்திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பது மற்றும் செயல்படுத்துவதில் அரசின் பங்கு முக்கியமானதாகும். சமூக ஆரோக்கியம் மற்றும் உடற்தகுதியை மேம்படுத்தவும், பன்னாட்டு விளையாட்டு அரங்கங்களில் சிறப்பான சாதனை அடையவும், இந்தியாவில் விளையாட்டை பரவலாக்குவதில் அரசு உத்வேகத்துடன் பங்காற்றும் என எதிர்பார்க்கலாம்.

இதனை அடிப்படையாகக் கொண்டு கிராம இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இராஜிவ் காந்தி கேல் அபியான் திட்டத்தின்கீழ் விளையாட்டுப் போட்டிகள் ஊராட்சி ஒன்றிய அளவில் மக்கள் திரளாக பங்கேற்பதற்காக நடத்தப்பட்டன. மக்கள் திரளாக பங்கேற்பதற்கு மாநிலம் முழுவதும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

மிகச்சிறந்த திட்டங்களில் ஒன்றான உலகத் திறனாய்வு திட்டத்தின்கீழ் உடற்திறன் தேர்வு அனைத்துப்

பள்ளிகளிலும் **6**, **7** மற்றும் **8–**ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வேகம், வலிமை, திண்மை, சுறுசுறுப்பு மற்றும் அளப்பரிய ஆற்றல் ஆகியவற்றைக் கண்டறியவும், எதிர்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் உருவாவதற்கும் திறமையை மதிப்பிடவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் தமிழகத்தின் முதன் முறையாக **2002–**ம் ஆண்டு இத்திட்டமானது துவக்கப்பட்டது.

முதன் முறையாக, கிராம மக்களிடையே பெரும்பாலானோர் கலந்து கொள்ளும் வகையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பல்வேறு வகையான கிராம விளையாட்டுப் போட்டிகள் **12,524** கிராம ஊராட்சிகளிலும் நடத்தப்பட்டன.

**நிலை – 2 மாவட்ட அளவு**

மாநிலத்தில் விளையாட்டுத் திறனை உறுதிபடுத்தும் வகையில் தமிழக அரசு விளையாட்டிற்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டங்களைத் தவிர, அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் **400** மீ. ஓடுதளப் பாதை மற்றும்

கால்பந்து விளையாட்டுத் திடல் கொண்ட திறந்தவெளி மாவட்ட விளையாட்டு அரங்கங்கள் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. 23 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. படிப்படியாக அனைத்து மாவட்டங்களிலும் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறை மூலமாக பல்வேறு வயது பிரிவினருக்கும் மாவட்ட அளவில் விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. பிற மாவட்டங்களிலும் வசதிகள் துரிதமாக படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**நிலை –3** <u>**மாநில அளவு**</u>

இந்தியா பெருமளவில் இளைஞர்களைக் கொண்ட நாடாகும். இளைஞர்களை விளையாட்டில் ஈடுபடுத்தி அவர்களின் விளையாட்டுத் தரத்தினை பன்னாட்டு அளவில் மேம்படுத்தி விளையாட்டை பரவலாக்குவதற்கு உதவும். இது நம் நாட்டிற்கு சாதனை படைக்கும் வகையில் கிடைத்த ஒரு வாய்ப்பாகும். 1982–ம் ஆண்டு முதல் விளையாட்டினை மேம்படுத்தி உயர்த்துவதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய தீவிர

முயற்சிக்குப் பின்னும், இந்தியா பன்னாட்டு விளையாட்டு அரங்கங்களில் குறைந்த அளவிலான வெற்றியையே எய்துள்ளன. விளையாட்டில் உயர்ந்த நிலையை அடைவதற்காக நம் நாட்டில் விளையாட்டுக் கலாச்சாரத்தை கற்பிக்க ஒரு ஒருங்கிணைந்த கொள்கையின் முக்கியத்துவத்தை அடையாளம் காட்டுகிறது. இதன் அடிப்படையில், சென்னை, கோயம்புத்துூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் பல விளையாட்டுப் பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மற்ற மாவட்டங்களிலும் படிப்படியாக விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

முதலமைச்சர் கோப்பைக்கான மாநிலப் போட்டிகளை 10 விளையாட்டுக்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு பாலருக்கும் நடத்தப்பட்டு வெற்றி பெறும் அணியைச் சார்ந்த ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் போதிய பரிசுத் தொகை வழங்கப்படுகின்றன. இதனைத் தவிர, மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு பல்வேறு மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்திட நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

## நிலை – 4 மற்றும் நிலை – 5 தேசிய மற்றும் பன்னாட்டு அளவு

தமிழக அரசின் சீரிய முயற்சியால், தமிழக வீரர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அங்கு தொழில்நுட்ப நிபுணர்களால் பயிற்சி அளிக்கப்பட்டதன் முலம் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெற்றனர். மேற்குறிப்பிட்ட வாய்ப்புகளின் அடிப்படையில், தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்து பந்து, கூடைப்பந்து, டென்னிஸ், ஸ்குவாஷ், கபாடி, நீச்சல், வாள்வீச்சு, மேசைப்பந்து, சதுரங்கம் ஆகிய விளையாட்டுக்களில் தமிழக வீரர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்று தனித்துவமாக திகழ்ந்து வருகிறார்கள்.

## 1. 3. ஊக்கத்தொகைத் திட்டங்கள்

தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் தகுதி வாய்ந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ள நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையினை தமிழக அரசு வழங்கி வருகிறது. சர்வதேச மற்றும் ஒலிம்பிக்

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையினையும் தமிழக அரசு கணிசமாக உயர்த்தியுள்ளது. எனவே, ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவருக்கு ரூ.2.00 கோடி மாநில அரசால் வழங்கப்படும்.

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கான தகுதியினைக் கொண்ட தடகளம், மேசைப்பந்து, நீச்சல் மற்றும் பாய்மரப் படகோட்டுதல் ஆகிய விளையாட்டுகளைச் சேர்ந்த 5 உயர்மட்ட விளையாட்டு வீரர்களுக்கு தங்களுடைய திறமையை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஆண்டுதோறும் தலா ரூ.25 இலட்சம் வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கி இத்திறனாளர்களை ஊக்குவித்து ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கச் செய்யும் திட்டத்தினை தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது.

பயன்பாட்டில் உள்ள உலகத் தரத்திலான விளையாட்டு வசதிகள் மற்றும் மான்யத் தொகையினைக் கொண்டு சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. கடந்த 2013 நவம்பர் மாதம் விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் மாக்னஸ் கார்ல்ஸன் ஆகியோருக்குமிடையே பெருமைமிகு பிடே உலக சதுரங்க வாகையர் போட்டி நடத்திட ரூ.29.15 கோடியினை

மாநில அரசு அனுமதித்து வழங்கியது. சமீபத்தில் தமிழக அரசு, 2016–ம் ஆண்டு ரியோ–டி–ஜெனிரோ நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கான 7–வது ஆசிய ரக்பி தகுதி முன் போட்டி ஆண்கள் மற்றும் பெண்களுக்கு 2015 மார்ச் மாதம் 6–ம் தேதி முதல் 8–ம் தேதி வரை சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்த ரூ.1.00 கோடி வழங்கியது.

# <u>படலம் – 2</u>

## <u>திறன் கண்டறிதல்</u>

விளையாட்டை மேம்படுத்தவும் உயர்ந்த நிலைகளில் பதக்கங்களை வெல்லவும் தமிழகத்தில் அடிமட்ட அளவில் உள்ள சிறந்த திறனாளர்களைக் கண்டறிவதே சாம்பியன்களை உருவாக்குவதற்கான முக்கியமான செயல்முறைகளில் ஒன்றாகும். இதனை அடைவதற்கு கீழ்க்கண்ட நான்கு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. உலகத் திறனாய்வுத் திட்டம்
2. விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு
3. சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு
4. முதன்மை நிலை விளையாட்டு விடுதிகளில் சேர்வதற்கான தேர்வு

### 2.1 உலகத் திறனாய்வுத் திட்டம்.

### 2.1.1. உடல்திறன் தேர்வுப் போட்டிகள்

தமிழக அரசு முன்னோடி திட்டமான உலக திறனாய்வுத் திட்டத்தின்கீழ், தமிழகத்தின் 6,7 மற்றும் 8–ம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தேர்வுகள் நடத்தி வேகம், வலிமை, திண்மை, சுறுசுறுப்பு மற்றும் அளப்பரிய ஆற்றல்

ஆகியவற்றை கண்டறிந்து எதிர்காலத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களாக உருவாகுவதற்கு திறமையை மதிப்பிடவும் அறிமுகப்படுத்தியது. தேர்வுகள் நடத்தி இதற்கான மதிப்பீடு அட்டைகளை ஒவ்வொரு மாணவ, மாணவியர்களின் சாதனைகளை குறிப்பிட்டு மதிப்பெண்கள் வழங்கி வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பெற்றோர்களை ஊக்கப்படுத்தியும் வருகிறது. பள்ளி நிர்வாகிகள் தேர்வு முடிவு விவரங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும். அவர்கள் அவ்வறிக்கையினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும். 2014–15ம் ஆண்டு இந்த உலகத் திறனாய்வுத் திட்டத்தினை செயல்படுத்திட அரசு ரூ.14.38 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

உலகத் திறனாய்வுத் திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களுக்கு கல்வி மாவட்டம் மற்றும் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு சிறப்பான திறன் மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஆற்றலுக்கேற்றவாறு பல்வேறு சிறப்பு அகாடமியில் சேர்க்கப்படுகின்றனர். இந்த சிறப்பு அகாடமியில் அவர்களுக்கு அறிவியல் ரீதியான

பயிற்சி அளிக்கப்பட்டு போட்டிகளுக்கு தயார்படுத்தப் படுகின்றனர்.

### 2.1.2 வளரும் திறனாளர்களுக்கான உதவித் தொகை வழங்கும் திட்டம்

உலகத் திறனாய்வுத் திட்டத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் முதல் பத்து இடங்களைப் பெற்ற வீரர்களை, வீராங்கனைகளை ஊக்குவிக்க ரூ.1,94,40,000/– (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று நான்கு லட்சத்தி நாற்பதாயிரம் மட்டும்)–ஐ வழங்கியது குறிப்பிடத்தக்கது. 3,240 விளையாட்டு வீரர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.500/– வீதம் 12 மாதங்களுக்கு தலா ரூ.6,000/– ஊக்க உதவித் தொகை வழங்கப்பட்டது.

## 2.2 கல்வி மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான திறனாளிகளைக் கண்டறிதல்.

இந்தியாவில் விளையாட்டின் மீதான பேரார்வத்திற்குக் குறைவில்லை. கட்டமைப்பு வசதிகள் மற்றும் விளையாட்டினை தொழில் சார்ந்த விருப்பத்திற்கான

வழிகாட்டுதல் அளித்து இப்பேரார்வத்தை தொழில் முறையாக மாற்றுவதே அவசியமாகும். இந்நோக்கினை அடைய இந்தியாவில் விளையாட்டின் பெரும்பான்மை பங்குதாரர்கள் முக்கிய பங்காற்றுவார்கள் என எதிர்பார்க்கலாம். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாநிலம் முழுவதிலும் 67 கல்வி மாவட்டங்களில் தடகள விளையாட்டுப் போட்டிகள் நடத்தி வருகிறது. இதில், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் சுமார் 500 சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள் பங்கேற்கிறார்கள். ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் அருகருகே உள்ள கல்வி மாவட்டங்களுடன் ஒன்று சேர்ந்து மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள்.

ஒவ்வொரு மண்டல அளவிலான போட்டிகளில் தலையாய திறனுடன் செயலாற்றுபவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு 5 நாட்கள் இருப்பிடம் அல்லாத பயிற்சி முகாம் நடத்தி, இதனைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு 15 நாட்கள் இருப்பிட சிறப்பு பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி முகாம்களில் சிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மாநில அளவிலான தேர்வுகளுக்கு கண்டறியப்படுவர். அவ்வாறு கண்டறியப்பட்ட சிறந்த திறன்

மிக்கவர்கள் ஒவ்வொரு வருடமும் தொடர் பயிற்சிக்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்பட்டு மற்றும் விருப்பமிகு திறனாளர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறப்பு திட்டமான விளையாட்டு விடுதிகளில் செயற்திறனை மேம்படுத்தும் பொருட்டு சேர்க்கப்படுகிறார்கள்.

## 2.3 விளையாட்டு விடுதிகளுக்கான தேர்வு (இரண்டு அடுக்கு)

விளையாட்டு விடுதிகள் விளையாட்டுத் திறனை ஒட்டுமொத்தமாக மேம்படுத்துவதற்காக சிறப்பு பயிற்சி திட்டத்தினை வடிவமைப்பதின் அவசியத்தை உணர்த்துகிறது. இப்பயிற்சித் திட்டம் திறனை வளர்ப்பதற்கு தேவையான முக்கிய பகுதிகளில் கவனம் செலுத்தி வருகிறது.

விளையாட்டு விடுதிகளில் 7, 8, 9 மற்றும் 11வது வகுப்புகளில் பயிலும் மாணவ / மாணவிகள் மாவட்ட மற்றும் மாநில அளவிலான தேர்வுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். 28 விளையாட்டு விடுதிகளில் மொத்த அனுமதிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை 2060 ஆகும். அவர்கள் வழக்கமான

பள்ளிகளிலும் பயிலுகிறார்கள். அவர்களுக்கு சத்தான உணவு, விளையாட்டுச் சீருடை, விளையாட்டு உபகரணங்கள், தகுதியான பயிற்றுநர்களால் சிறந்த விளையாட்டுப் பயிற்சிகள் வழங்குவதோடு போட்டிகளில் பங்கேற்பதற்கான அனைத்து தேவைகளும் மொத்தமாக கவனித்துக் கொள்ளப்படுகிறது.

## 2.4 ஆண்கள் / பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிக்கான தேர்வு

தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பதக்கம் பெறும் திறமை வாய்ந்த கல்லூரிகளில் பயிலும் மாணவர்களிலிருந்து பல்வேறு பிரிவுகளில் விளையாட்டு வீரர்களை சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்ப்பதற்கான தேர்வுப் போட்டிகள் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதிகள் முறையே ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் மற்றும் நேரு உள் விளையாட்டரங்கம் ஆகியவற்றில் செயல்பட்டு வருகின்றன. ஆண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதியில் 80 வீரர்களும், பெண்களுக்கான சிறப்பு விளையாட்டு விடுதியில் 60 வீராங்கனைகளும் உள்ளனர்.

## 2.5 முதன்மை நிலை விளையாட்டு மையத்திற்கான தேர்வு

தங்களது ஆற்றலை உணர்வதற்குத் தேவையான உடல் மற்றும் மன ரீதியிலான திறமைகளை வளர்க்க உதவுவதே நமது முதன்மையான நோக்கமாகும். சிறந்த விளையாட்டு வீரர்களாகவும், சிறந்த மனிதர்களாகவும் விளையாட்டு வீரர்களின் முன்னேற்றம் என்பது விளையாட்டின் ஒரு பகுதியில் வெற்றி பெறும் வாய்ப்பு குறைவாக இருப்பினும் தொலைநோக்கில் இது ஒரு சிறந்த வீரரை உருவாக்கி உயர்நிலைப் பள்ளியிலும் அதற்கு மேலும் தங்களது முழு ஆற்றலை உணர்வதற்குரிய சிறந்த வாய்ப்பினை அளிப்பதும் காலத்தின் தேவையாகும். (சிறந்த வீரர்களாக தலைசிறந்து விளங்க பள்ளிகளில் பயிலும் நேரம் போக இதர) சிறந்த விளையாட்டு வல்லுநர்களால், 10 முதல் 14 வயதிற்குட்பட்ட மிகச் சிறந்த திறன்வாய்ந்த 75 சிறுவர்கள் மற்றும் 50 சிறுமியர்கள் மாவட்ட மற்றும் மாநில அளவிலான தேர்வுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட திறமையான சிறுவர், சிறுமியர் சென்னை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் துவங்கப்பட்டுள்ள முதன்மை நிலை விளையாட்டு மையத்தில் அனுமதிக்கப்பட்டு சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## <u>படலம்– 3</u>

## <u>விளையாட்டுத் திறன் மேம்படுத்துதல்</u>

விளையாட்டு வீரர்களின் திறனை மதிப்பிட்டு மேம்படுத்துவது திறன் வளர்ச்சி முன்னேற்றத்தின் பகுதியாகும். அதன்படி, திறமையை சுயமதிப்பீட்டிற்கான கூறானது ஏழு பிரிவுகளின்கீழ் விரிவாகச் செயல்படுத்தப்படும். பல்வேறு திறமைகளை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த திட்டங்கள் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்த தத்ரூபமான வாய்ப்புகளை வழங்குகிறது. அவையாவன முதன்மை நிலை விளையாட்டு மையம், சிறப்பு அகாடமிகள், விளையாட்டு விடுதிகள், கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள், சிறப்பு மேம்பாட்டு மையங்கள், பயிற்சி மையங்கள் மற்றும் வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்.

### 3.1 முதன்மை நிலை விளையாட்டு மையம்

கடந்த 2012ஆம் ஆண்டு 10 முதல் 14 வயதுடைய 25 சிறுவர்கள் மற்றும் 25 சிறுமியர்களைக் கொண்டு சென்னையில் முதன்மை நிலை விளையாட்டு மையம் துவங்கப்பட்டது. அவர்களது திறமைகளை மேம்படுத்தும்

வகையில், அவர்களுக்கு ஊட்டச்சத்தான உணவு வகைகளும், முறையான அறிவியல்பூர்வமான பயிற்சி முறைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. பயிற்சி பெறுபவர்கள் நகரின் சிறந்த பள்ளிகளில் சேர்த்து விடப்பட்டு, அவர்களது திறமைகளை வளர்ப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்படுகின்றன. இதுபோன்ற மையங்கள் மொத்தம் 5 உள்ளன.

| வ. எண். | முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ள இடம் | விளையாட்டு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை (சிறுவர்கள்) | தடகளம் | 25 |
| | | இறகுபந்து | |
| | | படகோட்டுதல் | |
| | | பாய்மரப் படகோட்டுதல் | |
| 2 | நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை (சிறுமியர்) | தடகளம் | 25 |
| | | இறகுபந்து | |
| | | படகோட்டுதல் | |
| | | பாய்மரப் படகோட்டுதல் | |
| 3 | திருச்சி (சிறுவர்கள்) | இறகுபந்து | 25 |
| | | டேக்வாண்டோ | |
| 4 | திருநெல்வேலி (சிறுவர்கள்) | குத்துச்சண்டை | 25 |
| | | நீச்சல் | |
| | | டென்னிஸ் | |
| | | ஜிம்னாஸ்டிக்ஸ் | |
| 5 | ஈரோடு (சிறுமியர்) | நீச்சல் | 25 |
| | | ஜிம்னாஸ்டிக்ஸ் | |

## 3.2 சிறப்பு விளையாட்டு அகாடமி

அகில உலக அளவில் தங்குமிடம் அல்லாத விளையாட்டு அகாடமிகள் உள்ளன. தமிழகத்தில் பல்வேறு இடங்களில்

அரசு சிறப்பு அகாடமிகளை ஏற்படுத்தி உள்ளது. நடத்தப்படும் தேர்வுகளில் உலகத் திறனாய்வுத் திட்டத்தின்கீழ் 10–க்கு 10, 9 மற்றும் 8 மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள், மாணவிகள் அழைக்கப்பட்டு, வல்லுநர்களால் நடத்தப்படும் தகுதித் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் திறன் மற்றும் தகுதி அடிப்படையில் இச்சிறப்பு அகாடமிகளில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களுக்கு அந்தந்தப் பிரிவுகளில் சர்வதேச விளையாட்டு வீரர்களாலும், அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்களாலும், விஞ்ஞான ரீதியாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த அகாடமிகளில் பயிற்சி முகாம்கள் நடத்திட அரசு ரூ.80.00 இலட்சம் வழங்கியுள்ளது. கீழ்க்குறிப்பிட்டவாறு பல்வேறு சிறப்பு அகாடமிகள் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண். | அகாடமி பெயர் | பயிற்சி முகாம் நடத்தப்படும் இடம் |
|---|---|---|
| 01 | குறுந்தூர ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி | சென்னை |
| 02 | நீச்சல் குள வளாகத்தில் டைவிங் அகாடமி | சென்னை |
| 03 | சிறுவர், சிறுமியருக்கான வளைகோல்பந்து அகாடமி | சென்னை |
| 04 | சந்திரா மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 05 | ஏ.கே.ஜி. மேசைப்பந்து அகாடமி | சென்னை |
| 06 | டால்பின் நீச்சல் அகாடமி | சென்னை |
| 07 | தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி | சென்னை |
| 08 | ஆண்களுக்கான கால்பந்து | நாகப்பட்டினம் |

| | | |
|---|---|---|
| | அகாடமி | |
| 09 | எறிதல் அகாடமி | திருச்சி |
| 10 | மிததுார அகாடமி | திருவண்ணாமலை |
| 11 | நெடுந்துார அகாடமி | திருவண்ணாமலை |
| 12 | பெண்களுக்கான கால்பந்து அகாடமி | சிவகங்கை |
| 13 | மேசைப்பந்து அகாடமி | மதுரை |

மேற்கண்ட அகாடமிகளில் சுமார் 1,200 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சிறப்பு அகாடமிகள் நிறுவப்பட்ட பின்னர் இதில் பயிற்சி பெறும் மென்மேலும் திறன்வாய்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு நமது மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

### 3.2.1 விளையாட்டு விடுதிகள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில், 2011–2012–ஆம் ஆண்டு வரை மொத்தம் 12 விளையாட்டு விடுதிகள் மதுரை, திருநெல்வேலி, சென்னை (3), கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, நாமக்கல், திருச்சி, ஈரோடு (2) மற்றும் கடலூர் (என்எல்சி) ஆகிய இடங்களில் 860 மாணவ / மாணவியர்களைக் கொண்டு இயங்கி வந்தன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டு விடுதிகள் படிப்படியாக துவங்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, முதற்கட்டமாக, 5 புதிய விளையாட்டு விடுதிகள் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் துவங்கப்பட்டன. 2–ம் கட்டமாக, 2012–2013–ஆம் ஆண்டில், 6 புதிய விளையாட்டு விடுதிகள் நாமக்கல், அரியலூர், பெரம்பலூர், சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் தேனி ஆகிய இடங்களில் ஒரு விளையாட்டு விடுதிக்கு தலா 60 மாணவர்கள் வீதம் துவங்கப்பட்டுள்ளன. 3–வது கட்டமாக, 2015–2016ஆம் ஆண்டில், இராமநாதபுரம், உதகமண்டலம், விழுப்புரம், புதுக்கோட்டை மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் ஒரு விடுதிக்கு 60 மாணவர்கள் வீதம் துவங்கப்பட்டுள்ளன. 2015–16ஆம் ஆண்டில் மேற்படி 28 விளையாட்டு விடுதிகளிலும் மொத்தம் 2060 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விளையாட்டு விடுதிகளில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் சத்தினை அதிகப்படுத்தும் பொருட்டு உணவிற்கான செலவினம் நாளொன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.250/– வீதம் உயர்த்தி கடந்த 22.01.2014 அன்று அரசு ஆணையிட்டவாறு

வழங்கப்படுகிறது. ஊட்டச் சத்துணவு நிபுணர்களின் அறிவுரைகளின்படி, விடுதியில் உள்ள மாணவ / மாணவிகளுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது, ஒரு ஆண்டில் 320 நாட்களுக்கு ஒவ்வொரு மாணாக்கருக்கும் நாள் ஒன்றுக்கு தலா ரூ.250/– வீதம் உணவுச் செலவினம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர கூடுதலாக ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மாணாக்கருக்கும் விளையாட்டுச் சீருடைகளுக்காக ரூ.1800/–, விளையாட்டு உபகரணங்களுக்காக ரூ.400/– மற்றும் சேவைக் கட்டணமாக ரூ.300/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் கீழ்க்காணும் விளையாட்டு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.


| வ. எண். | விளையாட்டு விடுதி | விளையாட்டுக்கள் |
|---|---|---|
| 1 | விளையாட்டு விடுதி, ஒய்.எம்.சி.ஏ விளையாட்டு விடுதி, சென்னை | குத்துச்சண்டை, கால்பந்து மற்றும் வளைகோல்பந்து |
| 2 | என்.எல்.சி விளையாட்டு விடுதி, நெய்வேலி | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 3 | விளையாட்டு விடுதி, அண்ணா விளையாட்டு அரங்கம், திருச்சிராப்பள்ளி | தடகளம், கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல், கையுந்துபந்து மற்றும் குத்துச்சண்டை |
| 4 | விளையாட்டு விடுதி, ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம், மதுரை | தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கையுந்துபந்து மற்றும் வளைகோல்பந்து |
| 5 | விளையாட்டு விடுதி, அண்ணா | தடகளம், வளைகோல்பந்து, நீச்சல், |

| | | |
|---|---|---|
| | விளையாட்டு அரங்கம், திருநெல்வேலி | கையுந்துபந்து, கால்பந்து மற்றும் கூடைப்பந்து |
| 6 | மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி, வ.ஊ.சி. விளையாட்டரங்கம், ஈரோடு | தடகளம், கால்பந்து மற்றும் கையுந்துபந்து |
| 7 | மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி, பாரதி வித்யா பவன், திண்டல், ஈரோடு | கூடைப்பந்து |
| 8 | விளையாட்டு விடுதி (சிறுவர்கள் / சிறுமியர்கள்), செல்வம் மேனிலைப்பள்ளி, நாமக்கல் | தடகளம் (சிறுமியர்), வாள்சண்டை (சிறுவர் / சிறுமியர்) |
| 9 | விளையாட்டு விடுதி, அரசு மேனிலைப்பள்ளி, புதூர், சென்னை | கிரிக்கெட் |
| 10 | மகளிர் விளையாட்டு விடுதி, திருவண்ணாமலை | தடகளம், கூடைப்பந்து, கைப்பந்து மற்றும் வளைகோல்பந்து |
| 11 | விளையாட்டு விடுதி, கிருஷ்ணகிரி (சிறுவர்) | தடகளம், கைப்பந்து, டேக்வாண்டோ மற்றும் கால்பந்து |
| 12 | மகளிர் விளையாட்டு விடுதி, நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை | கையுந்துபந்து மற்றும் டென்னிஸ் |
| 13 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), கோயம்புத்தூர் | தடகளம், கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் கையுந்துபந்து |
| 14 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), கடலூர் | இறகுபந்து, தடகளம் மற்றும் டேக்வாண்டோ |
| 15 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), தஞ்சாவூர் | கூடைப்பந்து, பளுதூக்குதல் மற்றும் கையுந்துபந்து |
| 16 | விளையாட்டுவிடுதி, (சிறுமியர்), திண்டுக்கல் | தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து |
| 17 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), நாகர்கோவில் | தடகளம், கையுந்துபந்து மற்றும் பளுதூக்குதல் |
| 18 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), சிவகங்கை | தடகளம் மற்றும் கால்பந்து |
| 19 | விளையாட்டுவிடுதி, (சிறுவர்), தூத்துக்குடி | தடகளம் மற்றும் கூடைப்பந்து |
| 20 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), நாமக்கல் | கால்பந்து மற்றும் கபாடி |
| 21 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), பெரம்பலூர் | தடகளம் மற்றும் கைப்பந்து |
| 22 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), | வளைகோல்பந்து, கைப்பந்து மற்றும் |

| | | |
|---|---|---|
| | அரியலூார் | பளுதூாக்குதல் |
| 23 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), தேனி | கூடைப்பந்து மற்றும் கபாடி |
| | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), தேனி | கையுந்துபந்து |
| 24 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), இராமநாதபுரம் | கிரிக்கெட், வளைகோல்பந்து |
| 25 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), உதகமண்டலம் | கால்பந்து, தடகளம் |
| 26 | விளையாட்டு விடுதி, (சிறுவர்), விழுப்புரம் | கபாடி, கைப்பந்து மற்றும் நீச்சல் |
| 27 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), புதுக்கோட்டை | தடகளம், பளுதூாக்குதல் மற்றும் வளைகோல்பந்து |
| 28 | விளையாட்டு விடுதி, (சிறுமியர்), தருமபுரி | இறகுபந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து |

**தற்போது விளையாட்டு விடுதிகளில் 2060 மாணவர்கள் / மாணவியர்கள் உள்ளனர்.**

<u>**விளையாட்டு விடுதி மாணவர்களின்**</u>




**(வருடம்)**

### 3.2.2 மாணவ, மாணவியருக்கான சிறப்பு விளையாட்டு விடுதிகள்

மாணவர்களுக்கு சிறப்பு விளையாட்டு விடுதி சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கிலும், மாணவிகளுக்கு சென்னை நேரு உள் விளையாட்டரங்கிலும் செயல்பட்டு வருகின்றன. இந்த விடுதிகளில் மாணவர்களுக்கு நவீன விளையாட்டுப் பயிற்சிகளும், சத்தான உணவு வகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மட்டுமே இச்சிறப்பு விளையாட்டு விடுதிகளில் சேரத் தகுதி உடையவர்கள் ஆவர். இம்மாணவர்களுக்கு அனுபவமிக்க பயிற்றுநர்களைக் கொண்டு கீழ்க்காணும் விளையாட்டுக்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | விளையாட்டு விடுதி | விளையாட்டு | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | சிறப்பு விளையாட்டு விடுதி, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை (மாணவர்கள்) | தடகளம் | 15 | 80 |
| | | கூடைப்பந்து | 24 | |
| | | குத்துச்சண்டை | 10 | |
| | | கையுந்துபந்து | 24 | |
| | | டேக்வாண்டோ | 07 | |
| 2 | சிறப்பு விளையாட்டு விடுதி, நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை (மாணவியர்கள்) | தடகளம் | 20 | 60 |
| | | கால்பந்து | 20 | |
| | | கையுந்துபந்து | 20 | |
| மொத்தம் | | | | 140 |

## 3.3 இணை விளையாட்டு மேம்பாட்டு மையம்

போதுமான விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகள் உள்ள கல்லூரிகளில் இணை விளையாட்டு மேம்பாட்டு மையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநில, தென் மண்டல / அகில இந்திய பல்கலைக் கழகங்களுக் கிடையேயான போட்டிகள், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாகச் செயல்படும் தலைசிறந்த கல்லூரி மாணவர்களில் நபர் ஒருவருக்கு தலா ரூ.6000/– வீதம் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

கடந்த 2012–2013ஆம் ஆண்டில் 23 கல்லூரிகளைச் சேர்ந்த 219 தலைசிறந்த விளையாட்டு வீரர்களும், 2013–2014ஆம் ஆண்டில் 37 கல்லூரிகளைச் சேர்ந்த 328 தலைசிறந்த விளையாட்டு வீரர்களும் பயனடைந்துள்ளனர்.

## 3.4 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையம்

திறன் மேம்பாட்டு மதிப்பீட்டாளர் அனைவரும் பயிற்சி, மேம்படுத்தல் மற்றும் விளையாட்டில் உயர்நிலை அடைய கண்காணித்தல் ஆகியவற்றில் இன்று வரையிலான நல்ல அனுபவத்தைப் பெற்று அவர்கள் விளையாட்டில் வீரர்களின் பங்கினையும், அதனை மதிப்பீடு செய்யும் அலகுகளுக்கு முக்கியத்துவத்துவம் அளிப்பர். இத்திட்டத்தின்கீழ் கல்வி

நிறுவனங்களின் நிறுவன எல்லைகளுக்கு அப்பாற்பட்டு, நிறுவனம் அமைந்த பகுதி மற்றும் சமூகத்திற்குட்பட்டு, விளையாட்டுத் திறனை மேம்படுத்த திறன் மேம்பாட்டு மையம் நிறுவப்படுகிறது. அக்கல்வி நிறுவனம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றினை கையெழுத்திட வேண்டும். 15 விளையாட்டுத் திறன் மேம்பாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட கடந்த ஆண்டு ரூ.15.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

## 3.5 சிறப்பு மேம்பாட்டு மையங்கள்

உடற்கூறு தகுதிகள், விரிவான அனுபவ அறிவு, காயத் தடுப்பு முறை அறிதல், ஊட்ட உணவு வழிமுறைகள், தந்திரோபாயங்கள் மற்றும் தகுந்த விளையாட்டு உளவியல் ஆகியவைகளை வழங்கக் கூடிய முழுமையான அறிவு மற்றும் அனுபவமிக்க உயரிய பயிற்சி மையமே சிறப்பு மேம்பாட்டு மையமாகும். அதனடிப்படையில், கடந்த 1997–ஆம் ஆண்டு வேலூர் சத்துவாச்சாரியில் பளுதூக்கும் சிறப்பு விளையாட்டு மேம்பாட்டு மையம் துவக்கப்பட்டது. இங்கு 30 பளுதூக்கும் வீரர்களுக்கும், 12 வீராங்கனைகளுக்கும் (மாணவர்கள் மற்றும் மாணவரல்லாதோர்கள்) பயிற்சி

அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை, இம்மையம் செயல்படுவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.3.00 இலட்சம் வழங்கப்பட்டது. தற்போது கூடுதலாக ரூ.4.89 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சிறப்பு மேம்பாட்டு மையம் பல தேசிய பதக்கம் வெல்பவர்களை உருவாக்கியுள்ளது. சமீபத்தில், கடந்த 2014 ஆகஸ்ட் மாதம் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற திரு. சதீஷ்குமார் சிவலிங்கம் அவர்கள் இம்மையத்தில் பயிற்சி பெற்றவர் ஆவார்.

அதே போன்ற ஒப்புமையோடு, வளைகோல்பந்து விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில் தஞ்சாவூரில் ஒரு சிறப்பு மேம்பாட்டு மையமும், நாகப்பட்டினத்தில் கூடைப்பந்து சிறப்பு மேம்பாட்டு மையமும் தலா 30 மாணவர்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திற்கும் ஆண்டொன்றுக்கு தலா ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 3.6 பயிற்சி மையங்கள்

### 3.6.1 நீச்சல் பயிலகங்கள்

'நீச்சல் கற்றுக்கொள்' பயிற்சியானது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து நீச்சல் குள வளாகங்களிலும் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு நபர் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் பயிற்சி பெறுவதன் மூலம் 12 நாட்களில் நீந்தக் கற்றுக்கொள்கிறார். 2013–14 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 22 மையங்களில் 11,519 நபர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். 2014–15 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள 23 மையங்களில் 8,176 நபர்கள் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். இத்திட்டமானது இளவயதினரிடையே மிகவும் பிரபலமான நிரூபிக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

### 3.6.2 கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடங்கள்

மாநிலம் முழுவதும் விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளை உயர்த்துவதற்காக கிராமங்களில் பிரபலமாக விளங்கும் குறிப்பிட்ட விளையாட்டினை மேம்படுத்தும் வண்ணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை நீங்கலாக) கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடம் நிறுவப்பட்டுள்ளது. இது விளையாட்டினை

மேம்படுத்துவது மற்றும் விளையாட்டை தொலைதூர கிராமங்களுக்கும் கொண்டு செல்லும் நோக்கத்தை உடையது. இத்திட்டத்தின்கீழ் ஒரு மாவட்டத்தில், ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு தேவையான விளையாட்டுத் திடல் வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இக்கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடங்களுக்கு வழங்கப்பட்டு, கண்டறியப்பட்ட விளையாட்டில் முறையான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை **31** கிராமங்களில் கிராம விளையாட்டு வளர்ச்சி வளர்ப்பிடங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

## 3.7 வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், **20** வயதிற்கு குறைவான தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டியிடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த, திறமை மற்றும் தகுதி வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் மானியம் மற்றும் உதவி வழங்குகிறது. எதிர்கால வெற்றியாளர்களை உருவாக்குவதற்காக, வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய அளவில் தங்கப் பதக்கம் வெல்லும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள்.

இத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட வெற்றியாளர்கள் சென்னை மற்றும் அவர்கள் பயிற்சி செய்ய விரும்பும் மாவட்டங்களில் உள்ள நவீன விளையாட்டு அரங்கங்களை பயன்படுத்த அவர்களுக்கு இலவச அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது. மேலும் அவர்களுக்கு ஒரு வருடத்திற்கு தேவைப்படும் ஊட்டச்சத்து மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக ரூ.**2.00** இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவும், மேலும் அங்கு பயிற்சி மேற்கொள்ளவும் அவர்கள் விமான பயணச் செலவைப் பெறத் தகுதியுடையவராவார். இச்செலவினங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சுழல் நிதி வட்டித் தொகையிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. தற்சமயம் இத்திட்டத்தில் **264** வெற்றியாளர்கள் பல்வேறு விளையாட்டுகளில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

## <u>படலம் – 4</u>

## <u>பயிற்சித் திட்டங்கள்</u>

விளையாட்டு வீரர்களின் தொழில் சார்ந்த விருப்பத்தை உருவாக்குவதில் பயிற்றுநர்கள் முதுகெலும்பாய் இருந்து முக்கிய பங்காற்றுகிறார்கள்.

சிறந்த தரமான பயிற்சியாளர்களை பல்வேறு நிலைகளில் போதுமான எண்ணிக்கையில் வைத்திருப்பது விளையாட்டு மேம்பாட்டின் முக்கிய செயல் முறையாகும். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பல்வேறு விளையாட்டுக்களில் மொத்தம் 131 பயிற்றுநர்கள் உள்ளனர்.

| வ. எண். | விளையாட்டுக்கள் | பயிற்றுநர்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தரப் பணி | ஒப்பந்தம் | | மொத்தம் |
| | | | பட்டயப் படிப்பு | சான்றிதழ் படிப்பு | |
| 1. | அனைத்து விளையாட்டுக்கள் | 100 | 18 | 13 | 131 |

## 4.1 பயிற்றுநர்கள் திறன் கட்டமைப்பு

சிறந்த அறிவு, விஞ்ஞான ரீதியிலான பயிற்சிக்கான அறிவு மற்றும் சிறந்த அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களே

சிறந்த முடிவுகளைக் கொடுக்க இயலும். மேலும் பயிற்றுநருக்கு பயிற்சி அளிக்க போதுமான கவனம் செலுத்தி அவர்களது செயல்பாடுகள் உன்னிப்பாக கண்காணிக்கப் படுகிறது. இதற்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒவ்வொரு விளையாட்டிற்கும் தனித்தனியாக கண்காணிப்பு அலுவலரை நியமித்துள்ளது. குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் அவர்களது செயல்திறன் மற்றும் தரத்தினை நிர்ணயம் செய்வதற்காக வழிகாட்டுதல் மற்றும் பயிற்றுநர்கள் பங்கு, அவர்களது பயிற்சியாளர்கள் குறிப்பாக மாணவிகளுக்கு பயிற்சி அளிப்பதில் செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை ஆகியன குறித்த விரிவான அறிவுறுத்தல்கள் கொண்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உடற்கல்வி இயக்குநர்கள், பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு திறன்களை மேம்படுத்தும் பொருட்டு, கருத்தரங்குகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இது மட்டுமில்லாமல் சிறந்த பயிற்றுநர்களைத் தேர்வு செய்து வெளியிட பயிற்சி மையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

பயிற்றுநர்களின் திறன், முன்னேற்றம் மற்றும் அறிவை மேம்படுத்த சான்றிதழ் படிப்பு, பயிற்சி வகுப்புகள் பல்வேறு விளையாட்டுகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

சர்வதேச கூட்டமைப்பு பயிற்றுநர்களின் பயிற்சி படிப்புகளான கையுந்துபந்து இணையம் உதவியுடன் (FIVB) நிலை I மற்றும் நிலை II பயிற்சி வகுப்புகள், அகில இந்திய டென்னிஸ் நிலை பயிற்சி வகுப்பும், (ASCA) நீச்சல் பயிற்சி வகுப்பு நிலை III , அகில இந்திய கால்பந்து '**சி**', 'Ã', மற்றும் 'V' லைசன்ஸ் சான்றிதழ் பயிற்சி, சர்வதேச கூடைப்பந்து இணையம் (FIBA) நிலை I பயிற்சி வகுப்பு ஆகியவை அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு தேசிய அளவிலான கால்பந்து பயிற்சி வகுப்பு இத்தாலியின் இன்டர்மிலன் கிளப் பயிற்றுநரால் நடத்தப்பட்டது.

**பன்னாட்டு அளவிலான பயிற்றுநர்கள் பயிற்சித் திட்ட விபரங்கள்**

| வ. எண் | விளையாட்டு | பெயர் மற்றும் பயிற்சி நிலை | வகுப்பு நடத்தியது | மொத்த பங்கேற்–பாளர்கள் | செலவு த் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.** | கையுந்துப்பந்து | FIVB- நிலை– I | இந்திய கையுந்துபந்து சம்மேளனம் | **10** | **4,91,000/–** |
| 2. | கையுந்து பந்து | FIVB- நிலை – II | தமிழ்நாடு மாநில கையுந்துபந்து சங்கம் | 3 பெண்கள் | 30,000/- |
| 3. | டென்னிஸ் | AITA- நிலை -1 | அகில இந்திய டென்னிஸ் சங்கம் | 4 | 53,043/- |
| 4. | வளைகோல்பந்து | வளைகோல்பந்து | வளைகோல்பந்து இந்தியா | 14 | 75,625/- |
| 5. | நீச்சல் | ASCA- நிலை - 3 | அமெரிக்க சங்கம், பெங்களூரு | 12 | 2,50,000/- |
| 6. | கூடைப்பந்து | FIBA- நிலை -1 | BFI & TNBA | 14 | 1,33,258/- |
| 7. | கால்பந்து | AFC 'C' லைசன்ஸ் | அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பு | 2 | 17,460/- |

## பிற பயிற்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | நீச்சல் பயிற்சி | நீச்சல்குள ஆப்பரேட்டர் பயிற்சி | தமிழ்நாடு மாநில நீச்சல் சங்கம் | 42 | 2,67,308/- |
| 9. | கால்பந்து | கால்பந்து கிளினிக் | இன்டர்மிலன் FC- இத்தாலி | 17 | 51,500/- |
| 10. | நீச்சல் | நீச்சல் கிளினிக் | திரு.பிரேம் குமார், இந்திய பயிற்றுநர் | 18 | 21,455/- |

## பன்னாட்டு அளவிலான பயிற்றுநர்கள் பயிற்சித் திட்ட விபரங்கள் – 2014–2015

| வ. எண். | விளையாட்டு | பெயர் மற்றும் பயிற்சி நிலை | வகுப்பு நடத்தியது | மொத்த பங்கேற் பாளர்கள் | செலவுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கூடைப்பந்து | FIBA- நிலை–2 | BFI & TNBA | 7 | 53,441/– |
| 2 | இறகுப்பந்து | இறகுப்பந்து பயிற்றுநர்கள் கல்வி திட்டம் | இந்திய இறகுப்பந்து சங்கம் | 4 | 30,000/– |
| 3 | கால்பந்து | AFC “A” லைசன்ஸ் | ஆசிய கால்பந்து கூட்டு சம்மேளனம் | 1 | 67,050/– |
| பிற பயிற்சிகள் | | | | | |
| 4 | கால்பந்து | கால்பந்து கிளினிக் | தமிழ்நாடு கால்பந்து சங்கம் | 4 | 35,000/– |
| 5 | நீச்சல் | பயிற்றுநர்கள் கிளினிக் | தமிழ்நாடு மாநில நீச்சல் சங்கம் | 17 | 25,000/– |

## 4.2 நீச்சல்குள ஆப்பரேட்டர்கள் மற்றும் உயிர்காப்பாளர்களுக்கான பயிற்சி

நீச்சல்குள ஆப்பரேட்டர்களுக்கு நீச்சல் குளங்கள் பராமரிப்பு தொடர்பாக சிறப்பு பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. அதைத் தவிர நீச்சல்குள உயிர்காப்பாளர்களுக்கு நீச்சல் பயிற்சி பெறுபவர்களின் பாதுகாப்பிற்கான உயிர் காக்கும் தொழில் நுட்பங்கள் குறித்தும் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

## 4.3 உடற்கல்வி ஆசிரியர்கள் / இயக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம்

சிறுவர்கள் முதல் உயர்நிலைப்பள்ளி வரை படிக்கும் மாணவ, மாணவியர் இடையே சிறந்த உடற்பயிற்சியினை மேம்படுத்தக் கூடிய சவால்கள் மற்றும் விளையாட்டுகளை உடற்கல்வி ஆசிரியர்கள் நடத்துகின்றனர். இவர்களின் அடிப்படை நோக்கம் சிறுவர்கள் முதல் உயர்நிலைப்பள்ளி வரை படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு முறையான பயிற்சி மற்றும் உணவுப் பழக்கங்களை உருவாக்குவதாகும். உடற்கல்வி ஆசிரியர்களையும் பயிற்சியாளராக உருவாக்குவது மற்றும் விளையாட்டின் நுணுக்கங்கள் பற்றிய அறிவுத் திறனை வளர்த்திடவும் மற்றும் விளையாட்டு நிகழ்வுகளை செய்முறைப் பயிற்சியாக அளித்திடவும் இந்த பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது. வளர்ந்து வரும் விளையாட்டு உலகில், புதிய உபகரணங்களை பயன்படுத்திடவும் மாறி வரும் விளையாட்டு விதிமுறைகளை தெரிந்து கொள்ளவும் இந்த பயிற்சி முகாம் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கு நடத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டம் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் இயக்குநர்களுக்கு பல்வேறு விளையாட்டுக்களைப் பற்றிய பயிற்சி பெற்றிட அரசின் சார்பாக முகாம் நடத்திட

2014 – 15 – ம் ஆண்டிற்கு ரூ.14.50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.4 கோடைகால பயிற்சி முகாம்கள்

ஒவ்வொரு ஆண்டும் 16 வயதிற்குட்பட்ட மாணவர் மற்றும் மாணவியருக்கு தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து மற்றும் மாவட்டங்களில் பிரபலமாக உள்ள பிற விளையாட்டுகளில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கோடைகால பயிற்சி முகாம்கள் மாவட்ட தலைமையிடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி முகாம் 21 நாட்கள் நடைபெறும். கடந்த ஆண்டில் இப்பயிற்சி முகாமில் 5327 மாணவர்கள் மற்றும் 2775 மாணவிகள் உட்பட மொத்தம் 8102 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

கோடைகால பயிற்சி முகாம்கள் சென்னையில் உள்ள அனைத்து நவீன விளையாட்டு அரங்கங்கள், நேரு பூங்கா விளையாட்டு வளாகம் மற்றும் விளையாட்டு திடல் வசதியுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களில் நடத்தப்படுகிறது. இப்பயிற்சி முகாமானது இரண்டு கட்டங்களாக பதினைந்து நாட்களுக்கு நடத்தப்படுகிறது. அதில் கடந்த ஆண்டில் 1392 மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## 4.5 கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள்

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இப்பயிற்சி முகாம்கள் மாநிலத்தில் உள்ள 67 கல்வி மாவட்டங்களிலும் 5 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த முகாம்களில் பல்வேறு விளையாட்டுக்களின் அடிப்படை திறன்கள் கற்றுக் கொடுக்கப்பட்டு, அவரவர் திறன் ஆற்றலுக்கு ஏற்ப பல்வேறு விளையாட்டுகளில் கலந்துகொள்ள வழிவகுக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 30,000 மாணவ / மாணவியர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

## 4.6 மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்

ஒவ்வொரு கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாமில் திறமையான 60 மாணவ/மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம் 15 நாட்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பங்கு பெறும் மாணவர் / மாணவியர் உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் வாயிலாக அவர்களது செயல்திறன் அடிப்படையில்

தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கடந்த வருடம் இப்பயிற்சி முகாமில் **4436 (**சிறுவர்**–2588,** சிறுமியர்**–1848)** சிறுவர், சிறுமியர்கள் கலந்து கொண்டனர்.

## 4.7 வார இறுதி பயிற்சித் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலின்படி **2011–2012** ஆம் ஆண்டில் நான்கு மாவட்டங்களில் தொடங்கி வைக்கப்பட்ட வார இறுதி பயிற்சித் திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள திறனாளர்களை கண்டறிந்து முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது. மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த திறனாளர்கள் கண்டறியப்பட்டு **5** விளையாட்டுகளில் ஒவ்வொரு விளையாட்டிலும் தலா **20** நபர்களுக்கு முறையான பயிற்சி இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு உணவு, தங்கும் வசதி, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் ஆகியவற்றுக்கு ரூ.**63.20** இலட்சம் மான்யமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 4.8 தினப்பயிற்சித் திட்டம்

தினப் பயிற்சி திட்டத்தினைப் பத்து மையங்களில் செயல்படுத்த அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தில் விளையாட்டில் சிறந்து விளங்கக்கூடிய திறன் ஆற்றல் மிக்க

10 முதல் 14 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவியர்கள் ஒவ்வொரு விளையாட்டிலும் தலா 20 நபர்கள் விளையாட்டுத் திறன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களுக்கு காலை மற்றும் மாலை வேளைகளில், வாரத்தில் ஐந்து நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக உணவு, போக்குவரத்து செலவு, சீருடை, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ளும் செலவினங்களுக்கு ரூ.18.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட மாவட்டங்களில் தினசரி பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | விளையாட்டுகள் | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கன்னியாகுமரி | 1) தடகளம்<br>2) நீச்சல் | 20 நபர்கள்<br>20 நபர்கள் |
| 2. | காஞ்சிபுரம் | 3) நீச்சல்<br>4)வளைகோல் பந்து | 20 நபர்கள்<br>20 நபர்கள் |
| 3. | நீலகிரி | 5)கால்பந்து | 20 நபர்கள் |
| 4. | சேலம் | 6) தடகளம் | 20 நபர்கள் |
| 5. | விழுப்புரம் | 7) தடகளம் | 20 நபர்கள் |
| 6. | தருமபுரி | 8) இறகுப்பந்து | 20 நபர்கள் |

| | | | |
|---|---|---|---|
| 7. | சென்னை–மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கம் | 9) வளைகோல் பந்து | 20 நபர்கள் |
| 8. | சென்னை | 10) கால்பந்து | 20 நபர்கள் |

## படலம் – 5

## விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

### 5.1 கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்

தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது தமிழக சட்டப்பேரவை விதி எண்.110–ன் கீழான அறிவிப்பின்படி, தமிழகத்தில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் கிராம விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ரூ.25.05 கோடி அரசு ஒப்பளித்துள்ளது. கிராம மக்களிடையே விளையாட்டை ஊக்குவிக்கும் வகையில் தடகளம், கையுந்து பந்து, கபாடி மற்றும் கால்பந்து ஆகிய விளையாட்டுக்களை இரு பாலருக்கும் முதன்முறையாக கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும், கிராம இளைஞர் மேம்பாட்டு விளையாட்டுத் திட்டத்தின்கீழ், கிராம ஊராட்சிகளில் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டு உள் கட்டமைப்பு வசதிகளை முறையாக பயன்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலை உறுதிப்படுத்துவதற்காக கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 5.2 மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

விளையாட்டுப் போட்டிகள் என்பது விளையாட்டில் பங்கேற்பதற்கான அறிவுபூர்வ விரிவாக்கம் மற்றும் விளையாட்டு வளர்ச்சிக்கான பாதையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். அதிகப்படியான போட்டி விளையாட்டின் முடிவானது, ஒவ்வொரு தடகள விளையாட்டு வீரர்கள் தங்களது தகுதிகளையும் (அதாவது திறன், செயல்பாடு முதலியன) மற்றும் அளவியலினையும் (அதாவது நேர மேம்பாடு, விளையாட்டுகள் மற்றும் போட்டி வெற்றிகள் முதலியன) செயலினை ஒப்பீடு செய்ய உதவும் முன்னேற்றத்திற்கான அளவீடாகும்.

இந்த விளையாட்டுப் போட்டிகள் தொடர்ச்சியாக வீரர்கள் விளையாட்டுக்களில் பங்கேற்க ஊக்கப்படுத்துவதற்காக உதவும் அல்லது போட்டிகளில் தவறான பயன்பாடு அல்லது முறையற்ற உருவகம் ஆகியன இருப்பின் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டு பங்கேற்பில் இருந்து போட்டியாளரை விலகச் செய்யும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு வயது பிரிவினரிடையே தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, வாள்சண்டை, கால்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ், கைப்பந்து, வளைகோல்பந்து, கபாடி, கோ–கோ, நீச்சல், டேக் வோண்டோ மற்றும்

கையுந்துப்பந்து ஆகியவற்றில் மாதாந்திர விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அரசு மான்யமாக ரூ.25.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.3 அண்ணா சைக்கிள் போட்டி**

சாலையில் நடைபெறும் பந்தயத்தில் தகுந்த திண்மை, மிதிவண்டி கையாளுதல், திறன் மற்றும் தந்திரோபாயங்களை அறிந்துக் கொள்ளுதல் ஆகியன தேவை. முதலில் பந்தயத்தினை அறிந்து ஓட்டுநரின் தகுதி மற்றும் போட்டிகளின் போது சரியான பாதையினைப் பின்பற்றுதல் ஆகியன வெற்றி அளிக்கும். இதனை மனதிற் கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15–ம் நாள் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பங்கேற்பவர்களுக்கும், வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஒவ்வொரு வருடமும் ரூ.1.00 லட்சம் அரசு ஒப்பளிப்பு செய்து வருகிறது.

**5.4 ராஜிவ் காந்தி கேல் அபியான் திட்டத்தின் கீழ் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்**

விளையாட்டின் மூலம் வாழ்க்கையை மாற்றுவதை கருத்தில் கொண்டு மத்திய அரசு ராஜிவ் காந்தி கேல் அபியான் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, அத்திட்டத்தின் கீழ் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், பல்வேறு விளையாட்டுக்கள் ஊரகப் பகுதியினைச் சார்ந்த 16 வயதிற்குட்பட்ட கிராம சிறுவர் / சிறுமியர்களுக்காக ஊராட்சி, மாவட்ட மற்றும் மாநில அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## ராஜிவ் காந்தி கேல் அபியான் விளையாட்டுப் போட்டிகளின் கால அட்டவணை:

| | | |
|---|---|---|
| அ | ஊராட்சி கோட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் | ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் 20 –ம் தேதிக்கு முன்னர் நடத்தப்பட்டு வருகிறது. |
| ஆ | மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் | ஒவ்வொரு வருடமும் நாடு முழுவதும் தேசிய விளையாட்டுத் தினமான ஆகஸ்ட் 29ம் தேதி நடத்தப்பட்டு வருகிறது. |

| | | |
|---|---|---|
| இ | மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் | ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாத இறுதியில் நடத்தப்பட்டு வருகிறது. |
| ஈ | தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் | ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதம் நடத்தப்பட்டு வருகிறது (பிரிவு வாரியாக) |

## ராஜிவ் காந்தி கேல் அபியான் திட்டத்தின் கீழ் 2013–14–ம் ஆண்டில் நடைபெற்ற 6–வது தேசிய அளவிலான போட்டிகளில் தமிழக அணிகளின் சாதனைகள் விவரம்

| | | |
|---|---|---|
| பளுதூக்குதல் | சிறுவர்கள் | 1 வெள்ளி மற்றும் 1 வெண்கலம் |
| பளுதூக்குதல் | சிறுமியர்கள் | 1 தங்கம் மற்றும் 2 வெண்கலம் |
| ஜுடோ | சிறுவர்கள் | 2 வெண்கலம் |
| ஜுடோ | சிறுமியர்கள் | 1 வெண்கலம் |
| மேசைப்பந்து | சிறுவர்கள் | தங்கம் |
| மேசைப்பந்து | சிறுமியர்கள் | தங்கம் |
| இறகுப்பந்து | சிறுமியர்கள் | தங்கம் |
| குத்துச்சண்டை | சிறுவர்கள் | 3 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் |
| குத்துச்சண்டை | சிறுமியர்கள் | 1 வெள்ளி மற்றும் 5 வெண்கலம் |
| கூடைப்பந்து | சிறுவர்கள் | தங்கம் |
| கூடைப்பந்து | சிறுமியர்கள் | வெள்ளி |

## 5.5. தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள் 2014–2015

பெண்கள் விளையாட்டுப் போட்டிகள், பெண்களிடையே விளையாட்டுத் திறமைகளை மேம்படுத்தவும், விளையாட்டுக் கலாச்சாரம் மற்றும் விளையாட்டினை பிரபலப்படுத்தவும் சிறந்த விளையாட்டு வீராங்கனைகள் மற்றும் குழுவினை நிர்ணயிக்க நடத்தப்படுகின்றன. மாநில அரசு ராஜிவ் காந்தி கேல்

அபியான் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் போட்டிகளில் கீழ்மட்ட அளவிலான (மாவட்ட / மாநில அளவில்) போட்டிகள் **2014–15** ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள ஒவ்வொரு வருடமும் டிசம்பர் **31** ஆம் தேதி அன்று **25** வயதிற்குட்பட்ட பெண்கள் தகுதியுடையவராவர்.

பெண்களுக்கான தேசிய அளவிலான போட்டிகளில் கீழ்குறிப்பிட்டவாறு **12** விளையாட்டுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

| வ.எண் | பிரிவு | விளையாட்டு |
|---|---|---|
| 1. | பிரிவு – 1 | கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் நீச்சல். |
| 2. | பிரிவு – 2 | கைப்பந்து, வளைகோல்பந்து மற்றும் டென்னிஸ் |
| 3. | பிரிவு – 3 | தடகளம், இறகுப்பந்து மற்றும் மேசைப்பந்து |
| 4. | பிரிவு – 4 | கபாடி, கோ – கோ மற்றும் கையுந்து பந்து |

இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தும் தேசிய அளவிலான பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் பிரிவு I, II, III மற்றும் IV- ல் கலந்து கொள்வதற்கு முன்னர் கோட்ட, மாவட்ட மற்றும் மாநில அளவில் தேர்வு போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**2014–2015ம் ஆண்டிற்கான தேசிய அளவிலான பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி வீராங்கனைகளின் சாதனை விவரம்.**

**தேசிய அளவிலான பெண்கள் விளையாட்டுப் போட்டிகள் 2014–15**

| | | |
|---|---|---|
| நீச்சல் | தனி நபர் / குழு | 7 தங்கம், 1 வெள்ளி மற்றும் 6 வெண்கலம் |
| இறகுப்பந்து | தனி நபர் / குழு | 3 தங்கம் மற்றும் 1 வெள்ளி |
| மேசைப்பந்து | தனி நபர் | 1 தங்கம் |
| தடகளம் | தனி நபர் | 1 வெண்கலம் |
| கையுந்து பந்து | குழு | 1 வெண்கலம் |
| கூடைப்பந்து | குழு | 1 வெண்கலம் |

### 5.6 மாநில விளையாட்டுக் கழகங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள்

பல்வேறு மாநில விளையாட்டுக் கழகங்களுக்கு மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை நடத்துவதற்கும் தமிழகத்தின் சார்பில் தேசிய அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டு அணிகளை பங்கேற்கச் செய்வதற்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருதன் மூலம் உயரிய அளவில் சாதனை புரிய திறமையான இளைஞர்களுக்கு உதவுகிறது.

### 5.7 பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழகத்தில் நடத்துதல்

பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான முக்கிய காரணம் பல்வேறு நாடுகளைச் சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு இடையே ஒரு பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நட்புறவை வளர்த்திடவும் ஆகும். தமிழக அரசு பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் / தமிழகத்தில் நடத்திட மாநில மற்றும் தேசிய விளையாட்டுக் கழகங்களுக்கு தகுதியான நிதியுதவி வழங்கி ஊக்குவித்து வருகிறது.

(1) ஏ.டி.பி. சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள்

(2) ஆசிய ரக்பி போட்டிகளுக்கான முன்தகுதி போட்டிகள்

**5.7.1 ஏ.டி.பி. சென்னை ஓப்பன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள்**

டென்னிஸ் விளையாட்டு ஆர்வலர்களது ஆர்வம், ஆதரவு மற்றும் உற்சாகத்தினை பூர்த்தி செய்யும் வகையில், ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் பெருமை மிக்க சென்னை ஏர்செல் ஓப்பன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டு அரங்கில் நடத்தப்பட்டு வருகிறது.

இப்போட்டிகளில் உலக முன்னணி டென்னிஸ் விளையாட்டு வீரர்களான போரிஸ் பெக்கர், பெட்ரிக் ரேஃப்டர், ரபேல் நடால், கார்லஸ் மோயா, ஸ்டானிஸ்லஸ் வாவ்ரின்கா, ஜங்கோ டிப்சரேவிக் மற்றும் பல முன்னணி வீரர்கள் மற்றும் முன்னணி இந்திய விளையாட்டு வீரர்களான லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி, ரோஹன் கோபண்ணா மற்றும் சோம்தேவ் தேவ்வர்மன் ஆகியோரும் இப்போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர். இதனால் இந்த சர்வதேச சென்னை டென்னிஸ் ஓப்பன் போட்டிகளின் தகுதி உலகின் தலைசிறந்த டென்னிஸ் போட்டிகளில் ஒன்றாக விளங்குகிறது. இந்த வருடம் நடைபெற்ற 20வது ஏ.டி.பி. சென்னை (ஏர்செல்) ஓப்பன் டென்னிஸ் 2015 போட்டிகள் இந்தியாவில் நடைபெற்ற இரண்டாவது நீண்ட வருடாந்திர பன்னாட்டு விளையாட்டு நிகழ்ச்சி ஆகும்.

தமிழ்நாடு அரசு இப்போட்டிகளை நடத்த 2005ஆம் ஆண்டிலிருந்து முன்னோடி பிளாட்டினம் ஆதரவாளராக விளங்குகிறது. இந்த அரசு இப்போட்டிகளை நடத்திட 2013ஆம் ஆண்டு முதல் தனது பங்களிப்பினை ரூ.1 கோடியிலிருந்து ரூ.2 கோடியாக உயர்த்தியுள்ளது. இவ்வருடம் தமிழ்நாடு அரசு போட்டிகள் நடப்பதற்கு முன்னதாக சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு

விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டு அரங்கத்தினை புனரமைப்பு மற்றும் மேம்படுத்துவதற்காக ரூ.4.50 கோடியினை ஒப்பளிப்பு செய்துள்ளது.

புனரமைப்பு பணிகள் முடிந்தபின் இந்தப் பெருமைமிகு சர்வதேச தரத்திலான சென்னை நுங்கம்பாக்கம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் ஜனவரி 5, 2015 முதல் ஜனவரி 11, 2015 வரை வெற்றிகரமாக சென்னை (ஏடிபி) டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டன.

## 2015–ம் ஆண்டு நடைபெற்ற சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரம்

| | | | |
|---|---|---|---|
| ஒற்றையர் | முதலிடம் | திரு.ஸ்டானிஸ்லஸ் வாவ்ரின்கா, சுவிட்சர்லாந்து | பரிசுத் தொகை – 73,400 டாலர் |
| | இரண்டாமிடம் | திரு.பெடினி அல்சாவ், சுலோவேனியா | பரிசுத் தொகை – 38,650 டாலர் |
| இரட்டையர் | முதலிடம் | திரு.லுா என் – உசூன், சீனா தைப்பெ மற்றும் திரு.ஜோனாதன் மேரி, ஐக்கியப் பேரரசு | பரிசுத் தொகை – 22,300 டாலர் |
| | இரண்டாமிடம் | திரு. ரவீன் காசன்,தென் ஆப்ரிக்கா மற்றும் திரு.லியாண்டர் பயஸ், இந்தியா | பரிசுத் தொகை – 11,720 டாலர் |

### 5.7.2 ரக்பி போட்டிகள்

தமிழகத்தில் ரக்பி விளையாட்டினை உயர்த்தும் வகையில், **2016 –** ம் ஆண்டு ரியோ நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கான 7–வது ஆசிய தகுதி முன் போட்டி ஆண்கள் மற்றும் பெண்களுக்கு **2015** மார்ச் மாதம் **6–**ம் தேதி முதல் **8–**ம் தேதி வரை சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் நடத்தப்பட்டது. தென் இந்தியாவிலேயே தமிழகத்தில் பன்னாட்டு அளவிலான ரக்பி போட்டிகள் முதன் முதலாக நடத்தப்பட்டு இப்போட்டிகளில் கீழ்க்காணும் பத்து நாடுகள் பங்கேற்றன.

1. ஐக்கிய அரபு நாடுகள்
2. பிலிப்பைன்ஸ்
3. ஈரான்
4. உஸ்பெகிஸ்தான்
5. தென் கொரியா
6. குவாம்
7. லாவோஸ்
8. பங்களாதேஷ்
9. நேபாளம்
10. இந்தியா

**போட்டி முடிவுகள்**

| **ஆண்கள் அணி** | **பெண்கள் அணி** |
|---|---|
| முதலிடம் – ஈரான் | முதலிடம் – உஸ்பெகிஸ்தான் |
| இரண்டாமிடம் – இந்தியா | இரண்டாமிடம் – இந்தியா |

இப்போட்டிகளை வெற்றிகரமாக நடத்துவதற்கு சிறப்பு மான்யத் தொகையாக ரூ.**1.00** கோடியினை தமிழக அரசு வழங்கியது.

## 5.8 முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டுப் போட்டிகள்

தமிழக அரசின் சிறந்த வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு வருடமும் முதலமைச்சர் கோப்பைக்கான மாநில விளையாட்டுக்கள் மூன்று அளவில், அதாவது மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படுகிறது. தடகளம், கூடைப்பந்து, கையுந்து பந்து, வளைகோல்பந்து, கால்பந்து, கபாடி, நீச்சல், டென்னிஸ், மேசைப்பந்து மற்றும் இறகுப்பந்து ஆகிய 10 விளையாட்டுக்களில் போட்டிகள் 25 வயதிற்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இருபாலருக்கும் நடத்தப்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து 2014–15ம் ஆண்டில் மாவட்ட மற்றும் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குழு விளையாட்டிலும் சிறந்த அணி தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மண்டலத்திலும் 8 மாவட்ட அணிகள் கொண்ட நான்கு மண்டலங்களில் நடைபெற்ற மண்டல அளவிலான போட்டிகளில் பங்கேற்றனர். மண்டல அளவிலான போட்டிகள் லீக் – கம் – நாக் அவுட் முறையில் நடத்தப்பட்டுள்ளன. மேலும், முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் லீக் – கம் –

நாக் அவுட் முறையில் தேசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு இணையாக நடத்தப்படவுள்ளது.

இந்த முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல், இரண்டாவது மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.1,000/–ம், ரூ.750/–ம், ரூ.500/–ம் மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு முறையே ரூ.5,000/–ம், ரூ.3,000/–ம் மற்றும் ரூ.2,000/–ம் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.1.00 லட்சமும் ரூ.75,000/–ம் மற்றும் ரூ.50,000/–ம் ரொக்கப் பரிசாக வழங்கப்படுகிறது. மேலும், இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்திடவும், பரிசுத் தொகை வழங்கிடவும், மொத்தம் ரூ.809.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## முதலமைச்சர் போட்டிகளின் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாவட்ட ஆண் மற்றும் பெண் அணிகள்

| வ. எண். | விளையாட்டு | முதலிடம் | 2 – ம் இடம் | 3 – ம் இடம் | 4 – ம் இடம் |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்கள் | | |
| 01 | இறகுப் பந்து | சென்னை | கோயம் புத்தூர் | காஞ்சிபுரம் | விருது நகர் |
| 02 | கூடைப் பந்து | சென்னை | மதுரை | திண்டுக்கல் | கோயம் புத்தூர் |
| 03 | கால்பந்து | காஞ்சிபுரம் | கன்னியாகுமரி | சென்னை | சிவகங்கை |
| 04 | வளைகோல்பந்து | சென்னை | திருச்சி | திருநெல்வேலி | காஞ்சிபுரம் |
| 05 | கபாடி | திருவாரூர் | தஞ்சாவூர் | மதுரை | சென்னை |
| 06 | மேசைப்பந்து | சென்னை | திருவள்ளூர் | ஈரோடு | மதுரை |
| 07 | டென்னிஸ் | சென்னை | கோயம்புத்தூர் | சேலம் | திருச்சி |
| 08 | கையுந்து பந்து | சென்னை | திருவாரூர் | கோயம்புத்தூர் | கன்னியாகுமரி |
| 09 | தடகளம் | சென்னை | திருச்சி | கோயம்புத்தூர் | நீலகிரி |
| 10 | நீச்சல் | சென்னை | திருநெல்வேலி | திருவள்ளூர் | திருநெல்வேலி |
| | | | பெண்கள் | | |
| 01 | இறகுப்பந்து | மதுரை | விருதுநகர் | சென்னை | திருச்சி |
| 02 | கூடைப்பந்து | சென்னை | கோயம்புத்தூர் | ஈரோடு | காஞ்சிபுரம் |
| 03 | கால்பந்து | கடலூர் | திண்டுக்கல் | சேலம் | ஈரோடு |
| 04 | வளைகோல்பந்து | திருநெல்வேலி | ஈரோடு | திருவண்ணாமலை | மதுரை |
| 05 | கபாடி | திண்டுக்கல் | சேலம் | மதுரை | தஞ்சாவூர் |
| 06 | மேசைப்பந்து | சென்னை | வேலூர் | ஈரோடு | மதுரை |
| 07 | டென்னிஸ் | சென்னை | கோயம்புத்தூர் | திருவள்ளூர் | தஞ்சாவூர் |
| 08 | கையுந்து பந்து | கோயம்புத்தூர் | சென்னை | ஈரோடு | திண்டுக்கல் |
| 09 | தடகளம் | சென்னை | திருச்சி | கோயம்புத்தூர் | மதுரை |
| 10 | நீச்சல் | சென்னை | திருவள்ளூர் | காஞ்சிபுரம் | தூத்துக்குடி |

## வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுத் தொகை விவரம்

| விளையாட்டுப் போட்டிகள் விவரம் | பரிசுத் தொகை | ரூ. |
|---|---|---|
| மாவட்ட அளவில் (ஒவ்வொரு மாவட்டத்திலும்) | முதல் பரிசு தலா ரூ.1,000/– வீதம் 204 வீரர்கள் | 2,04,000.00 |
| | 2 –ம் பரிசு தலா ரூ.750/– வீதம் 204 வீரர்கள் | 1,53,000.00 |
| | 3 – ம் பரிசு தலா ரூ.500/– வீதம் 204 வீரர்கள் | 1,02,000.00 |
| மண்டல அளவில் (ஒவ்வொரு மண்டலத்திலும்) | முதல் பரிசு தலா ரூ.5,000/– வீதம் 204 வீரர்கள் | 10,20,000.00 |
| | 2 –ம் பரிசு தலா ரூ.3,000/– வீதம் 204 வீரர்கள் | 6,12,000.00 |
| | 3 – ம் பரிசு தலா ரூ.2,000/– வீதம் 204 வீரர்கள் | 4,08,000.00 |
| மாநில அளவில் | முதல் பரிசு தலா ரூ.1.00 லட்சம் வீதம் 204 வீரர்கள் | 2,04,00,000.00 |

| | | |
|---|---|---|
| | 2 –ம் பரிசு தலா ரூ.0.75 லட்சம் வீதம் 204 வீரர்கள் | 1,53,00,000.00 |
| | 3 – ம் பரிசு தலா ரூ.0.50 லட்சம் வீதம் 204 வீரர்கள் | 1,02,00,000.00 |

## 5.9 படிவம் – 2 சான்றிதழ்கள் வழங்குதல்

தேசிய அளவிலான பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்கும் வெற்றி பெறுபவர்களுக்கும் வழங்கப்பட்ட அசல் சான்றிதழ்கள் சரிபார்த்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் அவர்கள் மூலமாக படிவம்–2 சான்றிதழ்கள் மத்திய, மாநில அரசு துறைகளில் வேலை வாய்ப்பு பெறுவதற்காக வழங்கப்பட்டு வருகின்றன. இந்த சான்றிதழ்களைக் கொண்டு தலைசிறந்த வீரர்கள், வீராங்கனைகள் விளையாட்டு ஒதுக்கீடு அடிப்படையில் தொழிற்கல்வி கல்லூரிகளில் இடம் பெற்றும் தங்களது மேல்படிப்பைத் தொடரவும் மிகவும் உதவியாக இருக்கும்.

**படிவம் – 2 சான்றிதழ்கள் வழங்கிய விவரம்**

| வ.எண். | பிரிவு | விளையாட்டு விவரம் | படிவம் – 2 பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | பிரிவு – 1 | கூடைப்பந்து | 12 |
| | | ஜிம்னாஸ்டிக்ஸ் | 7 |
| | | நீச்சல் | 12 |
| 02 | பிரிவு – 2 | கைப்பந்து | 12 |
| | | வளைகோல்பந்து | 16 |
| | | டென்னிஸ் | 4 |
| 03 | பிரிவு – 3 | தடகளம் | 20 |
| | | இறகுப்பந்து | 4 |
| | | மேசைப்பந்து | 4 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 04 | பிரிவு – 4 | கபடி | 10 |
| | | கோ – கோ | 12 |
| | | கையுந்து பந்து | 12 |
| மொத்தம் | | | 125 |

## 5.10 அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்.

அரசுப் பணியாளர்களின் ஆரோக்கியமான உடல் நலனைப் பேணும் பொருட்டும் உடல் நலத்தினை பாதுகாக்கும் வகையிலும் அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசுப் பணியாளர்களின் உடற்தகுதியினை உறுதிப்படுத்துவதோடு மட்டுமன்றி அவர்களின் திறமை மற்றும் ஒழுக்கத்தினை மேம்படுத்திடும் வகையில் மத்திய குடிமுறை அரசுப் பணிகள் கலை மற்றும் விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியம், புது டெல்லி ஆதரவுடன் சுழற்சி முறையில் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பிரிவுகளில் அகில இந்திய விளையாட்டுப் போட்டிகள் அரசுப் பணியாளர்களிடையே நடைபெற்று வருகிறது. அகில இந்திய குடிமுறை அரசுப் பணியாளர்களின் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணியும் கலந்து கொண்டுள்ளது. 2014 – 15ம் ஆண்டு அகில இந்திய அரசுப் பணியாளர்களுக்கான இறகுப்பந்து மற்றும் கால்பந்து விளையாட்டுப் போட்டிகள் தமிழகத்தில் தமிழ்நாடு

விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டது. இவ்விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் **10.02.2015** முதல் **14.02.2015** வரையிலும் மற்றும் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் **20.02.2015** முதல் **27.02.2015** வரையிலும் நடத்தப்பட்டன.

## கலந்து கொண்ட அணிகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் விவரம்

| வ.எண். | விளையாட்டுப் பிரிவு | முதலிடம் | 2 – ம் இடம் | 3 – ம் இடம் | கலந்து கொண்ட அணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | இறகுப்பந்து | | |
| 01 | ஆடவர் – குழுப் போட்டி | ஆர்.எஸ்.பி. ஹைதராபாத் | ஆர்.எஸ்.பி. சென்னை | ஆர்.எஸ்.பி. பெங்களூரு | 43 |
| | மகளிர் – குழுப் போட்டி | ஆர்.எஸ்.பி. அகமதாபாத் | புது டெல்லி, மத்திய தலைமைச் செயலகம் | ஆர்.எஸ்.பி. டேராடூன் | |
| | ஆடவர் – ஒற்றையர் | ஆர்.எஸ்.பி. சென்னை | உத்ரகாண்ட் | ஆர்.எஸ்.பி. சண்டிகர் | |
| | ஆடவர் – இரட்டையர் | ஆர்.எஸ்.பி. சென்னை | புதுடெல்லி, மத்திய தலைமைச் செயலகம் | ஆர்.எஸ்.பி. கொச்சின் | |
| | மகளிர் – ஒற்றையர் | ஆர்.எஸ்.பி. அகமதாபாத் | ஆர்.எஸ்.பி. ஹைதராபாத் | ஆர்.எஸ்.பி. ராஜஸ்தான் | |
| | மகளிர் – இரட்டையர் | ஆர்.எஸ்.பி. பெங்களூரு | ஆர்.எஸ்.பி. ஜெய்ப்பூர் | புவனேஸ்வர் | |
| | கலப்பு – இரட்டையர் | புவனேஸ்வர் | ஆர்.எஸ்.பி. டேராடூன் | ஆர்.எஸ்.பி. அகமதாபாத் | |
| | முதியோர் – ஆடவர் – ஒற்றையர் | புதுடெல்லி, தலைமைச் செயலகம் | ஹைதராபாத் | புதுடெல்லி, தலைமைச் செயலகம் | |
| | முதியோர் – ஆடவர் – இரட்டையர் | ஹைதராபாத் | புதுச்சேரி | புதுடெல்லி, தலைமைச் செயலகம் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முதியோர் – மகளிர் ஒற்றையர் | சத்தீஸ்கர் | ஆர்.எஸ்.பி. மும்பை | கர்நாடகா தலைமைச் செயலகம் | |
| | முதியோர் – மகளிர் – இரட்டையர் | உத்ரகாண்ட் | கோவா | உத்ரகாண்ட் | |
| | முதியோர் – கலப்பு இரட்டையர். | சத்தீஸ்கர் | ஆர்.எஸ்.பி. பெங்களூரு | புதுடெல்லி தலைமைச் செயலகம் | |
| 02 | கால்பந்து | ஆர்.எஸ்.பி. சென்னை | புதுடெல்லி மத்திய தலைமைச் செயலகம் | ஆர்.எஸ்.பி. கொல்கத்தா | 36 |

## 5.11 மாநில அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்.

தெளிந்த மனமே ஆரோக்கியமான உடல் நலத்திற்கு வழி வகுக்கும். தமிழக அரசுப் பணியாளர்களின் உடல் நலத்தினை மேம்படுத்தவும், ஆரோக்கிய வாழ்விற்காகவும் 2013–14ல் அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது. மாநில அளவிலான அரசுப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு மாவட்ட அளவில் தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, டென்னிஸ், கபாடி, மேசைப்பந்து, கையுந்துப்பந்து (இருபாலருக்கும்) மற்றும் கால்பந்து (ஆண்களுக்கு மட்டும்), ஆகிய விளையாட்டுக்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இந்த விளையாட்டுப் போட்டியினை நடத்திட ரூ.40.37 லட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 5.12 மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள்

கிழக்கத்திய நாடுகளில் ஆரம்பிக்கப்பட்ட கேரம் விளையாட்டுப் போட்டி அடித்து பையில் போடும் பில்லியர்ட்ஸ் போன்ற மேஜை விளையாட்டாகும். இப்போட்டிகள் நேபாளம், இந்தியா, பாகிஸ்தான், வங்க தேசம், இலங்கை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மத்திய கிழக்கு நாடுகளில் ஆடப்படும் பிரபலமான விளையாட்டாகும். தெற்காசிய நாடுகளில் இப்போட்டிகள் கிளப் மற்றும் கஃபேகளில் வழக்கமாக நடத்தப்படுகிறது. கேரம் பொதுவாக குடும்ப விழாக்களில் குழந்தைகள் முதல் அனைத்து தரப்பினராலும் விளையாடப்பட்டு வருகிறது. 2014–15ம் ஆண்டில் அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், ஊராட்சி / பேரூராட்சி / நகராட்சி பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கேரம் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட அரசு ஆணையிட்டுள்ளது. இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத் தொகையாக ரூ.6.45 லட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்விளையாட்டுப் போட்டியினை மிக இளையோர் மற்றும் இளையோர் என இரு பிரிவுகளாக பிரித்து நடத்தப்பட்டு வருகிறது (ஐந்தாம் வகுப்பு வரை பயிலும்

மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆறாம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள்).

**முடிவுகள்:**

| வ.எண். | பிரிவு | முதலிடம் | 2 – ம் இடம் | 3 – ம் இடம் | பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | மிக இளையோர் – மாணவர் – ஒற்றையர் | திருவாரூர் | கோயம்புத்தூர் | இராமநாதபுரம் | 8,750.00 |
| 02 | மிக இளையோர் – மாணவர் – இரட்டையர் | திருவாரூர் | மதுரை | திண்டுக்கல் | 17,500.00 |
| 03 | மிக இளையோர் – மாணவியர் – ஒற்றையர் | சென்னை | திருவாரூர் | மதுரை | 8,750.00 |
| 04 | மிக இளையோர் – மாணவியர் – இரட்டையர் | மதுரை | நீலகிரி | திருவாரூர் | 17,500.00 |
| 05 | இளையோர் – மாணவர் – ஒற்றையர் | இராமநாதபுரம் | திருவாரூர் | திருச்சி | 17,500.00 |
| 06 | இளையோர் – மாணவர் – இரட்டையர் | வேலூர் | சென்னை | திண்டுக்கல் | 35,000.00 |
| 07 | இளையோர் – மாணவியர் – ஒற்றையர் | சென்னை | மதுரை | புதுக்கோட்டை | 17,500.00 |
| 08 | இளையோர் – மாணவியர் – இரட்டையர் | மதுரை | திருவாரூர் | திண்டுக்கல் | 35,000.00 |

## 5.13 தடகள விளையாட்டுப் போட்டிகள்

மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு, ஊனமுற்றோர் விளையாட்டுப் போட்டிகள் அல்லது பாரா விளையாட்டுப் போட்டிகள் எனப் பெயரிட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு நடத்தப்பட்டு வருகிறது. அனைத்து விளையாட்டுகளும் மாற்றுத் திறனாளிகளின் தேவைகளுக்கு

ஏற்ப வடிவமைக்கப்படுகிறது. நமது சமுதாயத்தில் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமும், ஆதரவும் தேவைப்படுகிறது. மாற்றுத் திறனாளிகளின் நம்பிக்கையை பெருக்க அவர்களுக்கிடையே போட்டி மனப்பான்மையை மேம்படுத்தும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் கீழ்குறிப்பிட்ட போட்டிகள் நடத்தப்படுகின்றன.

**1. மாற்றுத் திறனாளிகள் (ஆண்கள் / பெண்கள்)**

அ. 50 மீ. ஓட்டம்
ஆ. 100 மீ. ஓட்டம்
இ. நீளம் தாண்டுதல்
ஈ. சிறிய கூடைப்பந்து எறிதல்
உ. 100 மீட்டர் சக்கர நாற்காலி ஓட்டம்.

**2. பார்வையற்றோர் (ஆண்கள் / பெண்கள்)**

அ. 50 மீ. ஓட்டம்
ஆ. 100 மீ. ஓட்டம்
இ. நின்றவாறு குதித்தல்
ஈ. குண்டு எறிதல்
உ. டென்னிஸ் பந்து எறிதல்

**3. மனவளர்ச்சி குன்றியோர் (ஆண்கள் / பெண்கள்)**

அ. **50 மீ. ஓட்டம்**

ஆ. **100 மீ. ஓட்டம்**

இ. மட்டைப் பந்து எறிதல்

ஈ. நின்றவாறு குதித்தல்

உ. குண்டு எறிதல்

**4. காது கேளாதோர் (ஆண்கள் / பெண்கள்)**

அ. **100 மீ. ஓட்டம்**

ஆ. **200 மீ. ஓட்டம்**

இ. நீளம் தாண்டுதல்

ஈ. குண்டு எறிதல்

உ. ஈட்டி எறிதல்

இந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.5,000/–ம், இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.3,000/–ம், மூன்றாம் இடம் பெறுபவர்களுக்கு தலா ரூ.2,000/–ம் பரிசுத் தொகையாக வழங்கப்படும். மேலும், இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்திட 2014–15ம் ஆண்டில் அரசு ரூ.15.01 லட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**5.14 மாற்றுத் திறனாளிகளுக்கான குழு விளையாட்டுப் போட்டிகள்**

மாற்றுத் திறனாளிகள் விளையாட்டில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும், குழு மனப்பாங்கினை மேம்படுத்தவும்,

நம்பிக்கையை ஏற்படுத்தவும் குழு விளையாட்டுப் போட்டிகள் மாநில அளவில் கீழ்கண்டவாறு நடத்தப்பட்டு வருகிறது.

**மாற்றுத் திறனாளிகள் (கை, கால் ஊனமுற்றோர்) ஆண்கள் / பெண்கள்**

1. இறகுப்பந்து (ஒற்றையர் மற்றும் இரட்டையர்) – ஒரு அணிக்கு **5** வீரர்கள்.
2. மேசைப்பந்து – ஒரு அணிக்கு இரு வீரர்கள்.

**பார்வை குன்றியோர் (முழுவதும் பார்வையற்றோர் மற்றும் ஓரளவு பார்வையுடையோர்) ஆண்கள் / பெண்கள்**

1. அடாப்டட் கையுந்து பந்து – ஒரு அணிக்கு 7 வீரர்கள்.

**மனவளர்ச்சி திறனாளிகள் (மனவளர்ச்சி குன்றியோர்) ஆண்கள் / பெண்கள்**

1. எறிபந்து – ஒரு அணிக்கு 7 வீரர்கள்.

**செவி திறன் குறைபாடு உடையோர் (காது கேளாதோர்) ஆண்கள் / பெண்கள்**

1. கபாடி – ஒரு அணிக்கு 7 வீரர்கள்.

**2014–15**ஆம் ஆண்டில் மேற்காணும் விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ரூ.**30.00** இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 5.15 கழைக்கூத்து மற்றும் நீர் விளையாட்டுப் போட்டிகள்

கழைக்கூத்து (Acrobatics) என்ற வார்த்தை கிரேக்க சொல்லாகும். இந்த விளையாட்டு வீரர்கள் கயிற்றின் மீது

நடப்பது, சுறுசுறுப்பு மற்றும் அசாதாரண சாதனைகளைப் படைத்தவர்களாக இருப்பார்கள். இத்திறமைகளை பல சாகச விளையாட்டு மற்றும் தற்காப்பு விளையாட்டுகளில் காணலாம். கழைக்கூத்து பெரும்பாலும் நீர் தாவல்கள் மற்றும் டைவிங் போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடையது. பொதுவாக கழைக்கூத்து மனித உடலில் செயல்திறன் தொடர்புடையதாக இருப்பினும் இதர வகை செயல்திறனான 'ஏரோபேடிக்ஸ்'க்கும் பொருந்தும்.

பாரம்பரியமாக கழைக்கூத்து மற்றும் நீர் சாகச விளையாட்டுகளில் ஈடுபட்டு வரும் சமுதாயத்தினரிடையே இவ்விளையாட்டுகளை ஊக்குவிக்க தமிழக அரசு ஆதரவு அளித்து வருகிறது.

தமிழக அரசு கழைக்கூத்து மற்றும் நீர் விளையாட்டுக்களில் பாரம்பரியமாக உள்ள சமுதாயத்திற்கும் உறுதுணை அளிக்கிறது. கழைக்கூத்தாடிகள் மற்றும் மீனவர் சமுதாயத்தினர் பாரம்பரியமாக இவ்விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருவதைக் கருத்திற்கொண்டு அவர்களின் குழந்தைகளுக்கு உரிய பயிற்சி, சத்தான உணவு, வெளியுலக தொடர்பு அளிக்கும்பட்சத்தில் அவர்களை பதக்கம் வாங்கக் கூடியவர்களாக செம்மைப்படுத்தவும் இத்தகைய விளையாட்டுகளை ஊக்குவிப்பது தமிழகத்தில்

கழைக்கூத்து மற்றும் நீர் விளையாட்டு செயல்பாடுகளை மேம்படுத்தி தொலைதூரத்திற்கு எடுத்துச் செல்ல வழி வகுக்கும். ஒரு நீர் விளையாட்டு மையம் நாகப்பட்டினம் மாவட்ட விளையாட்டு வளாகத்திலும், ஒரு கழைக்கூத்து விளையாட்டு மையம் ஈரோடு மாவட்டம் கரட்டுப்பாளையத்திலும் செயல்பட்டு வருகிறது.

## 5.16 கடற்கரை விளையாட்டுப் போட்டிகள்

கடற்கரை மணலில் விளையாடப்படும் விளையாட்டுகள் கடற்கரை விளையாட்டாகும். இந்த கடற்கரை விளையாட்டுக்களில் பல வகைகள் உள்ளன. அதாவது தொடர் விளையாட்டு, புல் விளையாட்டு அல்லது பிரிஸ்பீ போன்றவை. இவ்விளையாட்டுகள் கோடை காலத்தில் புத்துணர்ச்சிக்காகவும், பொழுது போக்காகவும் விளையாடப்படுகிறது. இவ்விளையாட்டு இயற்கை தளத்தில் விளையாட இயலாததால், இதனை விளையாடுவதற்கு சிறப்பு திறன்கள் தேவை. இவ்விளையாட்டு வீரர்களின் நலனுக்காக அரசானது அநேக விளையாட்டு நலத்திட்டங்களை துவங்கியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடற்கரை மாவட்டங்களான இராமநாதபுரம், நாகப்பட்டினம், கடலூர், கன்னியாகுமரி, தூத்துக்குடி, சென்னை, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களின் கடற்கரை பகுதிகளில் கடற்கரை கால்பந்து, கடற்கரை கபாடி மற்றும் கடற்கரை கையுந்து பந்து ஆகிய விளையாட்டுப் போட்டிகளை நடத்திட ஒப்புதல் அளித்துள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ரூ.2.00 இலட்சம் செலவில் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு இவ்வசதிகள் முறையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. கடற்கரை பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர்களிடையே போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கும் வகையில் கடற்கரை மாவட்டங்களிலிருந்து குழுக்கள் அமைத்து மாநில அளவிலான கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. விளையாட்டு மைதான வசதிகள் மேம்படுத்த ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் **10.01.2015** மற்றும் **11.01.2015** ஆகிய தினங்களில்

நடத்தப்பட்டன. இப்போட்டியில் 260 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

**முடிவுகள்**

| வ.எண் | விளையாட்டுப் பிரிவு | முதலிடம் | 2–ம் இடம் | 3 – ம் இடம் | மொத்த பரிசுத் தொகை – ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கபாடி – ஆண்கள் | நாகப்பட்டினம் | காஞ்சிபுரம் | கடலூார் | 1,56,000.00 |
| | கபாடி – பெண்கள் | தஞ்சாவூர் | நாகப்பட்டினம் | காஞ்சிபுரம் | |
| 2 | கையுந்து பந்து – ஆண்கள் | நாகப்பட்டினம் | இராமநாதபுரம் | காஞ்சிபுரம் | |
| | கையுந்து பந்து – பெண்கள் | தஞ்சாவூர் | கன்னியாகுமரி | சென்னை | |
| 3 | கால்பந்து – ஆண்கள் | கன்னியாகுமரி | நாகப்பட்டினம் | இராமநாதபுரம் | |
| | கால்பந்து – பெண்கள் | கடலூார் | சென்னை | திருவாரூர் | |

## 5.17 மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்.

கல்லூரிகளிடையே விளையாட்டுத்துவம் மற்றும் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவிப்பதற்காக, அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுக்களில் மண்டல அளவிலான மற்றும் மண்டலங்களுக்கு இடையேயான போட்டிகளுக்கு பல்கலைக் கழக அணியினை தேர்வு

செய்வதற்காக பல்கலைக்கழகங்களுக்கு இடையே / தேசிய / சர்வதேச போட்டிகளில் சாதனை புரிய விளையாட்டின் தரத்தை உயர்த்துதல், அனைத்து மாணாக்கர்களின் ஒட்டுமொத்த ஆளுமைத் திறனை மேம்படுத்தி சமுதாய முன்னேற்றத்திற்கு சேவை செய்ய தேசிய விளையாட்டு கழகங்கள் போட்டிகளை ஏற்பாடு செய்யவும், விளையாட்டு மேம்பாட்டு நோக்கம் மற்றும் குறிக்கோள்களுக்கு இயைந்த பிற நடவடிக்கைகளை உள்ளடக்கியும் மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகள் நடத்தப்படுகின்றன.

அரசாணை (நிலை) எண். 64 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ் – 2) துறை, நாள் 16.07.2013ல், 2013–14ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் பல்கலைக் கழகம் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்த ரூ.1.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான கீழ்க்காணும் விளையாட்டுப் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி, மேசைப்பந்து, டென்னிஸ் மற்றும் கையுந்து பந்து. மாநில

அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.10,000/–ம் இரண்டாம் பரிசாக தலா ரூ.7,500/–ம் மூன்றாம் பரிசாக தலா ரூ.5,000/–ம் வழங்கப்படுகிறது.

2014 – 15ம் ஆண்டில் மாநில அளவில் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் அனைத்து பல்கலைக்கழகம் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற குழுக்கள் பங்கேற்கும். இப்போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற பல்கலைக்கழகங்களின் பெயர் பட்டியல் கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

**2014–15 ம் ஆண்டிற்கான போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடம் பெற்ற பல்கலைக்கழகங்களின் பெயர்ப் பட்டியல் விபரம்**

| வ.எண். | விளையாட்டு | முதலிடம் | 2 – ம் இடம் |
|---|---|---|---|
| 1 | மேசைப்பந்து – ஆண்கள் | எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம் | சென்னை பல்கலைக் கழகம் |
| | மேசைப்பந்து – பெண்கள் | எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம் | சென்னை பல்கலைக் கழகம் |
| 2 | இறகுப்பந்து – ஆண்கள் | பாரதியார் பல்கலைக் கழகம் | அண்ணா பல்கலைக் கழகம் |
| | இறகுப்பந்து – பெண்கள் | அண்ணா பல்கலைக் கழகம் | காருண்யா பல்கலைக் கழகம் |
| 3 | கபாடி – ஆண்கள் | வேல்ஸ் பல்கலைக் கழகம் | சென்னை பல்கலைக் கழகம் |

| | | | |
|---|---|---|---|
| | கபாடி – பெண்கள் | பாரதியார் பல்கலைக் கழகம் | அன்னை தெரசா பல்கலைக் கழகம் |
| 4 | டென்னிஸ் – ஆண்கள் | சென்னை பல்கலைக் கழகம் | அண்ணா பல்கலைக் கழகம் |
| | டென்னிஸ் – பெண்கள் | சென்னை பல்கலைக் கழகம் | எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம் |
| 5 | கையுந்துபந்து – ஆண்கள் | எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம் | பாரதிதாசன் பல்கலைக் கழகம் |
| | கையுந்துபந்து – பெண்கள் | சென்னை பல்கலைக் கழகம் | இந்துஸ்தான் பல்கலைக் கழகம் |
| 6 | கால்பந்து – ஆண்கள் | பாரதிதாசன் பல்கலைக் கழகம் | சென்னை பல்கலைக் கழகம் |
| | கால்பந்து – பெண்கள் | சென்னை பல்கலைக் கழகம் | திருவள்ளுவர் பல்கலைக் கழகம் |
| 7 | கூடைப்பந்து – ஆண்கள் | எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம் | சென்னை பல்கலைக் கழகம் |
| | கூடைப்பந்து – பெண்கள் | சென்னை பல்கலைக் கழகம் | எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம் |
| 8 | வளைகோல்பந்து – ஆண்கள் | மதுரை காமராசர் பல்கலைக் கழகம் | எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகம் |
| | வளைகோல்பந்து – பெண்கள் | பாரதியார் பல்கலைக் கழகம் | மதுரை காமராசர் பல்கலைக் கழகம் |
| 9 | தடகளம் –ஆண்கள் | பாரதியார் பல்கலைக் கழகம் | சென்னை பல்கலைக் கழகம் |
| | தடகளம் – பெண்கள் | பாரதியார் பல்கலைக் கழகம் | சென்னை பல்கலைக் கழகம் |

## 5.18 தமிழகத்தில் தீவிரவாதம் கண்டறியப்படும் இடங்களில் உள்ள இளைஞர்களது ஆற்றலை ஒழுங்குபடுத்த மையங்களை நிறுவுதல்

தமிழ்நாட்டின் அளவுகோல்படி வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை பொறுத்தவரையில் தேசிய நிலவரப்படி நகர்ப்புறத்தை விட ஊரக பகுதிகளில் அதிக அளவில் இளைஞர்கள் வாழ்கிறார்கள். கல்வி விகிதம் ஒட்டுமொத்த கல்வியோடு ஒப்பிடும்போது இப்பிரிவினரிடையே குறைவாக உள்ளது.

இளைஞர்களது ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் நலன்களுக்காக அரசாணை (நிலை) எண். 47 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ் –2) துறை, நாள் 30.05.2013–ல் தமிழகத்தில் தீவிர வாதம் கண்டறியப்பட்ட இடங்களைச் சார்ந்த இளைஞர்களது ஆற்றலை ஒழுங்குப்படுத்தி சுய ஒழுக்கத்துடன் நல்வழிப்படுத்திடவும் நேர்மறை மனப்பாங்கு மற்றும் முன்னேற்ற சிந்தனை உள்ளவர்களாக்கி விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ரூ.17.20 லட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில் தீவிரவாதம் கண்டறியப்பட்ட தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி தடகளம், கால்பந்து மற்றும் கையுந்து பந்து ஆகிய விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கக் கூடிய வசதியுடன் 104 மையங்கள் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன.

**பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள்**

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தர்மபுரி | 35 |
| 2. | கிருஷ்ணகிரி | 48 |
| 3. | தேனி | 09 |

| | | |
|---|---|---|
| 4. | திண்டுக்கல் | 12 |
| மொத்தம் | | 104 |

மேற்கண்ட நான்கு மாவட்டங்களிலும், இளைஞர்களை விளையாட்டு செயல்பாடுகளில் தொடர்ச்சியாகப் பங்கேற்க ஊக்கப்படுத்தும் வகையில் கீழ்க்கண்டவாறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

| வ.எண். | மாவட்டத்தின் பெயர் | பயிற்சி முகாம் நடைபெற்ற தேதி | விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்ட நாள் | கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | திண்டுக்கல் | 28.06.2014<br>29.06.2014 | 29.06.2014 | 70 |
| 2 | தேனி | 08.07.2014<br>09.07.2014 | 09.07.2014 | 153 |
| 3 | கிருஷ்ணகிரி | 14.02.2015 | 14.03.2015 | 500 |
| 4 | தருமபுரி | 15.10.2014<br>16.10.2014 | 13.03.2015 | 585 |

## 5.19 பாரம்பரிய விளையாட்டுக்கள்

தமிழக அரசு விளையாட்டு மற்றும் போட்டி விளையாட்டுகளில் பேரார்வம் உடையது மற்றும் கடந்த நூறு ஆண்டுகளாக உள்ளூர் மக்களால் விளையாடப்பட்டு வரும் பாரம்பரிய விளையாட்டுகள் மீது கவரப்பட்டது. இருப்பினும் நவீன விளையாட்டுக்களான கிரிக்கெட், கால்பந்து, டென்னிஸ் ஆகிய விளையாட்டுக்களினால் பாரம்பரிய விளையாட்டுகள் தனது பெருமையை கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருவதோடு இத்தகைய பாரம்பரிய விளையாட்டுகள் முற்றிலுமாக அழிந்து வரக்கூடிய வாய்ப்பும்

உள்ளது. அவ்வாறாக இப்பாரம்பரிய விளையாட்டுகளை அழியாதவண்ணம் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் அவசியமான ஒன்றாகும். தமிழகத்தின் பாரம்பரிய விளையாட்டுக்களான சிலம்பம், உரியடி, தாயக்கட்டை, ஆடுபுலி ஆட்டம், கிளியாந்தட்டு, பல்லாங்குழி, கில்லி, நொண்டி, பம்பரம் மற்றும் கண்ணாம்மூச்சி ஆகிய விளையாட்டுக்கள் தற்பொழுதும் மாநிலத்தில் பல இடங்களில் விளையாடப்பட்டு வருகிறது. இந்த விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில் அரசாணை எண். 45 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்–2) துறை, நாள் 26.08.2014 –ல் 2014–15ம் ஆண்டிற்கு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவும், ஆவணப்படுத்தவும் ரூ.10.00 லட்சம் ஒப்பளிப்பு செய்யப் பட்டுள்ளது. இந்த பாரம்பரிய விளையாட்டுகளுக்கான விழா தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.

## படலம்– 6


## உதவித் தொகை, விருதுகள் மற்றும் உயரிய ஊக்கத் தொகை

மாணவர்கள் / மாணவியர்களின் கல்விக்கான நிதியுதவியாக உதவித் தொகை விளங்குகிறது. பல்வேறு பிரிவுகள் மற்றும் திறமைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை, விருதுகள் நோக்கத்தையும், மதிப்பினையும் பிரதிபலிக்கிறது. சில நேரங்களில் தேவைகளுக்கேற்பவும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு பிரிவுகளில், பல்வேறு நிலைகளில் சிறந்து விளக்கும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு உதவித் தொகை, விருதுகள் மற்றும் உயரிய ஊக்கத் தொகை தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

### 6.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உதவித் தொகைத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களில் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்பவரின் செயல்திறன்படி முறையே ரூ.10,000/– மற்றும் ரூ.13,000/– வீதம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2012–2013ஆம் ஆண்டில் 468 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ரூ.52,98,000/– உதவித் தொகையாக வழங்கப்பட்டது. அதே போல் 2013–2014ஆம் ஆண்டில் 714 தகுதிவாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு ரூ.79,11,000/– உதவித் தொகையாக வழங்கப்பட உள்ளது.




## 6.2 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகைத் திட்டம்

கல்வியில் சாதனை படைப்பது, விளையாட்டில் திறமை காட்டுவது மற்றும் ஆளுமைத் திறனை மேம்படுத்துவது ஆகியவற்றில் சமநிலையுடன் செயல்படுவது

என்பது நமது மாநிலத்தில் திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களிடையே ஒரு சவாலாக விளங்குகிறது. உயரிய திறன் கட்டமைப்பு மற்றும் முயற்சிகள் மூலம் தமிழக அரசு மாநிலத்தில் உள்ள இளம் விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளின் கல்வி மற்றும் விளையாட்டுகளில் தரத்தினை உயர்த்த கடமைப்பட்டுள்ளதோடு எதிர்கால தமிழ்நாட்டின் விளையாட்டில் நேர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. ஒலிம்பிக் போட்டியை குறிவைத்து **2011–2012**ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மான்யக் கோரிக்கையின் போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, புதிய திட்டமாக **“தலை சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகைத் திட்டம்”** செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. மேற்கண்ட அறிவிப்பின்படி இத்திட்டமானது, விளையாட்டுத் திறமைகளின் அடிப்படையில், ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லக் கூடிய **5** தலை சிறந்த ஆண் மற்றும் பெண் விளையாட்டு வீரர்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.**25.00** இலட்சம் வீதம் **5** ஆண்டுகளுக்கு **‘தேவைக்கேற்ப உதவிகள்’** செய்து,

அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி வாகை பெற வழி வகுக்கும்.

கீழ்க்காணும் 5 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இத்திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த 16.4.2013 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டதற்கான ஆணைகள் வழங்கப்பட்டன.

1. திரு. கே. பிரேம்குமார், தடகளம் (நீளம் தாண்டுதல்)
2. செல்வி. ஜி. காயத்ரி, தடகளம் (100மீ தடை ஓட்டம்)
3. செல்வி. ஏ. வி. ஜெயவீணா, நீச்சல்
4. திரு. ஜி. சத்தியன், மேசைப்பந்து
5. செல்வி. ஐஸ்வர்யா நெடுஞ்செழியன், பாய்மரப் படகோட்டுதல்

மேற்காணும் விளையாட்டு வீரர்களின் விளையாட்டு செயல்திறனை காலமுறையில் கண்காணித்து மதிப்பீடு செய்ய கண்காணிப்பு மற்றும் வழிநடத்தும் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் சம்மந்தப்பட்ட விளையாட்டு வல்லுநர்கள் மற்றும் விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள் உறுப்பினராக உள்ளனர்.

இந்த விளையாட்டு வல்லுநர்கள், விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள், ஊட்டச் சத்து மற்றும்

விளையாட்டு மருத்துவ நிபுணர் ஆகியோர்கள் பல்வேறு கூட்டங்கள் / விவாதங்களில் கலந்து கொண்டு தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு அவர்களின் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்தும் வகையில் தக்க ஆலோசனைகள் வழங்கி வருகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட தலைசிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனைகளது விளையாட்டுத் திறன் திருப்திகரமாக இல்லையெனக் கண்டறியப்பட்டால், அவர்களுக்குப் பதிலாக உயர்மட்ட குழுவினரால் வேறு ஒரு சிறந்த விளையாட்டு வீரர் / வீராங்கனையைக் கொண்டு மாற்றப்படுவர்.

**6.3 வளரும் திறனாளர்களுக்கான சிறப்பு ஊக்க உதவித் தொகை வழங்குதல்**

உலகத் திறனாய்வுத் திட்டத்தின்கீழ் வளரும் திறனாளர்கள் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ.500.00 வீதம் ஆண்டொன்றுக்கு தலா ரூ.6,000/– ஊக்க உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு 2014 – 15ம் ஆண்டில் ரூ.194.40 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**6.4 உயரிய ஊக்கத் தொகை**

ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்க உதவித் தொகை வழங்கியும் மற்றும் நிதி உதவி அளவினை உயர்த்தியும் அரசாணை எண்.5, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, நாள்.24.1.2002–ன் மூலம் அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மேலும் பல பதக்கங்களை வெல்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்திட உயரிய ஊக்கத் தொகையின் அளவினைத் திருத்தம் செய்து கீழ்க்கண்டவாறு அரசாணை (நிலை) எண்.38, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள்.19.12.2011 மூலம் அரசு ஆணையிட்டுள்ளது.

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண். | சர்வதேச / தேசிய போட்டிகள் | உயரிய ஊக்கத் தொகை | | |
|---|---|---|---|---|
| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
| 1 | ஒலிம்பிக் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) – தனிநபர் / குழுப் போட்டிகள் – ஒவ்வொரு வீரருக்கும் | 200.00 | 100.00 | 50.00 |
| 2 | ஆசிய போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) – தனி நபர் / குழுப் போட்டிகள் – ஒவ்வொரு வீரருக்கும் | 50.00 | 30.00 | 20.00 |
| 3 | காமன்வெல்த் போட்டிகள் | 50.00 | 30.00 | 20.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) – தனி நபர் / குழுப் போட்டிகள் – ஒவ்வொரு வீரருக்கும் | | | |
| 4 | தெற்காசிய போட்டிகள் – (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை) **தனிநபர் போட்டிகள்** | 5.00 | 3.00 | 2.00 |
| | **குழுப் போட்டிகள்** (ஒவ்வொரு வீரருக்கும்) | 5.00 | 3.00 | 2.00 |
| 5 | தேசிய போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒரு முறை) **தனிநபர் போட்டிகள்** | 5.00 | 3.00 | 2.00 |
| | **குழுப் போட்டிகள்** (ஒவ்வொரு வீரருக்கும்) | 5.00 | 3.00 | 2.00 |

உலக சதுரங்க போட்டிகளில் **5** முறை **(2000, 2007, 2008, 2010** மற்றும் **2012)** சாம்பியன் பட்டம் வென்ற திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களுக்கு ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு வழங்கப்படும் உயரிய ஊக்கத் தொகைக்கு இணையாக சிறப்பு விருதாக ரூ.**2.00** கோடி வழங்கப்பட்டது.

கடந்த **2014** ஜுலையில் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற **20–**வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு ரூ.**270.00** இலட்சம் உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது.

கடந்த **2014** செப்டம்பர் மாதம் தென் கொரியா, இன்சியானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு ரூ.**480.00**

இலட்சம் உயரிய ஊக்கத் தொகை வழங்கிட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு புதுதில்லியில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகள் மற்றும் சீனா, குவாங்ஷு நகரில் நடைபெற்ற 16வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களின் பயிற்றுநர்களுக்கு முறையே ரூ.16.50 இலட்சம் மற்றும் ரூ.13.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.21.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.


கடந்த 2010 டிசம்பர் மாதம் 8 முதல் 20 முடிய சீனா, குவாங்ஷு நகரில் நடைபெற்ற மாற்றுத் திறனாளர் களுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.10.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

### 6.5 நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்ற தகுதி வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்களை விளையாட்டுத் துறையில்

ஆற்றிய பங்கினை அங்கீகரிக்கும் பொருட்டும், அவர்களுக்கு தொடர்ந்து உறுதுணையாக இருக்கவும், அரசாணை எண்.42, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை, நாள்.21.12.2011–ன்படி, நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியத் தொகை மாதத்திற்கு ரூ.1000/–லிருந்து ரூ.3000/– ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், இன்றைய தேதியில், 85 நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியமும், 6 நலிந்த நிலையிலுள்ள முன்னாள் சிறந்த விளையாட்டு வீரர்களின் குடும்பங்களுக்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான செலவினம் மாதந்தோறும் தலா ரூ.3000/– வீதம் 91 நபர்களுக்கு ரூ.2,73,000/– ஆகும்.




## 6.6 விளையாட்டு வீரர்கள் நல நிதி

விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்போது, உயிரிழந்த அல்லது காயம் அடைந்த விளையாட்டு வீரர்களுக்கு அவர்கள் மறுவாழ்வு / சிகிச்சை பெறும் வகையில் தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர்கள் நல நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## 6.7 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு தொழிற் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு

தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் விளையாட்டுத் துறையில் ஆற்றிய சிறந்த பங்களிப்பினை அங்கீகரிக்கும்

வகையில் அவர்களது மேல்படிப்பினை தொடர விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் பொறியியல் கல்லூரிகளில் **500** இடங்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் **3** இடங்கள் ஒதுக்கீடு செய்ய அரசு முன்வந்துள்ளது. இத்திட்டம், கடந்த **03.07.2012** முதல் நடைமுறையில் உள்ளது.

**சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் இடஒதுக்கீட்டு விவரம்:–**

| வ. எண் | நிறுவனங்கள் விவரம் | இட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அண்ணா பல்கலைக் கழகம், சென்னை –25 | 12 இடங்கள் |
| 2 | அரசு / அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் | 13 இடங்கள் |
| 3 | அண்ணா தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் | 14 இடங்கள் |
| 4 | சுயநிதி பொறியியல் கல்லூரிகள் | 461 இடங்கள்<br>தலா ஒரு கல்லூரிக்கு<br>1 இடம் வீதம் |
| மொத்தம் இடங்கள் | | 500 இடங்கள் |

## 6.8 முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது

ஒவ்வொரு ஆண்டும், நான்கு சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள், **(2** ஆண்கள் மற்றும் **2** பெண்கள்**)**, **2** பயிற்றுநர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் **(1** ஆண் மற்றும் **1** பெண்**)** ஆகியோருக்கு விளையாட்டில் புரிந்த தன்னிகரற்ற பணியினை அங்கீகரிக்கும் வகையில் ரூ.**1.00**

இலட்சம் ரொக்கப் பரிசு, பாராட்டுப் பத்திரம், பதக்கம் முதலியவற்றை உள்ளடக்கிய முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டு வருகிறது.

## 6.9 முதலமைச்சர் மாநில இளைஞர் விருது

ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று, 15 முதல் 35 வயது முடிய உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது வழங்கப்படும். முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ரொக்கப் பரிசு ரூ.50,000/–ம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவை உள்ளடக்கியதாகும்.

2015–ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது திரு பி. மணிமாறன், திருவண்ணாமலை மாவட்டம், திரு எம். டெனித் ஆதித்யா, விருதுநகர் மாவட்டம் மற்றும் செல்வி எஸ். அன்ன காமு, திண்டுக்கல் மாவட்டம் ஆகியோருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சுதந்திர தின விழாவின் போது முதன் முறையாக வழங்கப்பட்டது.

## 6.10 பயிற்றுநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு நிர்வாகிகள் ஆகியோரின் அறிவாற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்துதல்

விளையாட்டுத் துறை, விளையாட்டுக் கலாச்சாரத்தின் பரந்த அடித்தளத்தை வலியுறுத்துவதோடு, சிறந்த விதத்தில் பயிற்றுநர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தவும், விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மேம்படுத்தப்பட்ட மற்றும் ஆரோக்கியமான விளையாட்டுடன் போட்டி சூழலையும் வழங்குகிறது.

திறமையான பயிற்சியாளர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வாய்ப்புகளை வழங்கும் பொருட்டு சர்வதேச அளவிலான குறுகிய கால வகுப்பு / சர்வதேச பயிற்சி ஆகியவற்றின் மூலம் அவர்களின் அறிவு மற்றும் திறன் அளவுகளை மேம்படுத்த ரூ.30.00 இலட்சம் 2013–14ம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 6.11 மாநில அளவிலான குடியரசு தின / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு ரொக்கப் பரிசு

மாநில அளவிலான பதக்கம் வெல்பவர்களின் செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில் அரசு, குடியரசு தின / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம், இரண்டாமிடம் மற்றும் மூன்றாமிடங்களில் பதக்கங்கள் வென்றவர்களுக்கு முறையே ரூ.1200/–ம், ரூ.800/–ம் மற்றும் ரூ.400/–ம் ஆக உயர்த்தி பரிசுத் தொகை வழங்கி வருகிறது.

கடந்த **2014–2015**–ஆம் ஆண்டில் **3,951** மாணாக்கர்களுக்கு ரூ.**30,36,000/–** பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## படலம்–7

## விளையாட்டுக் கட்டமைப்பு

தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு சர்வதேச தரத்திலான விளையாட்டு கட்டமைப்பு ஒரு இன்றியமையாத பகுதியாகும். கடந்த 1995–ஆம் ஆண்டு நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் போது, சென்னையில் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்புகளான பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகியவைகளை அமைத்த பெருமை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களையே சாரும். மேலும், தனி முத்திரை பதித்துள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் 1993–ஆம் ஆண்டில் 260 நாட்களிலேயே கட்டி முடிக்கப்பட்ட சாதனைக்குரியது. 2013 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் அருகில், உலகத்தரத்திலான பயிற்சி தடகள ஓடுதள பாதையுடன் கூடிய கால்பந்து மைதானம் நிறுவப்பட்டுள்ளது. தற்சமயம்

இவ்விளையாட்டு வசதிகள் யாவும் விளையாட்டு வீரர்கள் பெருமளவில் பயன்படுத்தி பல்வேறு நிலைகளில் வெற்றி வாகை சூடி சாதனை புரிந்திட உதவுகிறது. ஊரக மற்றும் நகர்புறங்களில் உள்ள விளையாட்டு வீரர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் சர்வதேச தரத்திலான விளையாட்டுக் கட்டமைப்புகளை மாவட்டங்களில் அரசு உருவாக்கி வருகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் இணைப்பில் பட்டியலிட்டுள்ளவாறு விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

## 7.1 மாநிலத்தில் உள்ள பெரிய விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

### 7.1.1 ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை

முத்திரைச் சின்னமாக திகழும் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் **1993**–ம் ஆண்டு ரூ.**44** கோடி செலவில் குறுகிய காலத்தில் **260** நாட்களுக்குள் கட்டி முடிக்கப்பட்டது. இவ்விளையாட்டரங்கம் **40,000** பார்வையாளர்கள் அமரக்கூடிய கொள்திறன் கொண்டது. **8** பாதை கொண்ட **400** மீட்டர் செயற்கை இழை தடகள ஓடுதளத்துடன், மையத்தில் இயற்கை புல் கால்பந்து மைதானம் கொண்டது.

இது தவிர, ஜுடோ, பளுதூக்குதல், மேசைப்பந்து, குத்துச்சண்டை, சதுரங்கம் மற்றும் கேரம் ஆகியவற்றிற்கான விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இரண்டு கடற்கரை கையுந்துபந்து திடல்கள், மூன்று களிமண் தரையிலான கையுந்துபந்து திடல்கள் (ஒளி வெள்ள வசதியுடன்), ஒரு எறிபந்து திடல், ஒரு கபாடி மைதானம் மற்றும் ஒரு கைப்பந்து திடல் ஆகிய வசதிகளும் இவ்விளையாட்டு வளாகத்தில் உள்ளன. மேலும், குளிர் சாதன வசதி கொண்ட உடற்பயிற்சிக் கூடம் மற்றும் கூட்ட அரங்கம் ஆகியவை இவ்விளையாட்டரங்கில் உள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, **2012–2013** ஆம் ஆண்டில் ரூ.**1780.63** இலட்சம் செலவில் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் சீரமைக்கப்பட்டு, அங்குள்ள செயற்கை இழை தடகள ஓடுதள பாதை, கால்பந்து மைதானம், மின்னொளி விளக்குகள் மாற்றி அமைத்தல், மேம்படுத்தப்பட்ட கூட்ட அரங்கம், அலுவலக அறைகள் மற்றும் இதர பணிகள் முதலான வசதிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

இந்த பெருமைமிக்க ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் சமீபத்தில் மிகவும் பிரம்மாண்டமாகவும், ஆடம்பரமாகவும் இந்திய சூப்பர் லீக் கால்பந்து போட்டிகள்

நடத்தப்பட்டன. இந்திய சூப்பர் லீக் கால்பந்து போட்டிகளின் போது, சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு சங்கத்தின் நிபுணர்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், 2017–ல் 17 வயதிற்குட்பட்ட ஆடவருக்கான உலக கோப்பை கால்பந்து போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவான அரங்கம் மற்றும் தள வசதிகள் திருப்திகரமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

### 7.1.2 நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை

1995–ஆம் ஆண்டு ரூ.20 கோடி செலவில் அமைக்கப்பட்ட நேரு உள்விளையாட்டரங்கம் 8,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய கொள்திறன் கொண்டது. இவ்விளையாட்டரங்கம் முழுமையாக குளிர் சாதன வசதி கொண்டது. ஒளி வெள்ள வசதியுடன் கூடிய மரத்தளம் அமையப் பெற்றது. இவ்விளையாட்டரங்கில் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, இறகுபந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், சதுரங்கம், கேரம், கைப்பந்து மற்றும் இதர விளையாட்டுக்கள் விளையாடலாம். மேலும், இவ்விளையாட்டு வளாகத்தில் ஒளி வெள்ள வசதி கொண்ட சறுக்கு விளையாட்டு தளம், ஒளி வெள்ள வசதி கொண்ட இரண்டு கான்கிரீட் கூடைப்பந்து திடல்கள், களிமண் கைப்பந்து திடல், ஒளி வெள்ள வசதி கொண்ட வாள்சண்டை

அரங்கம் மற்றும் திறந்த வெளி குத்துச்சண்டை திடல் ஆகிய வசதிகள் உள்ளன. 2012–2013–ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி செலவில் குளிர்சாதன வசதிகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், இவ்விளையாட்டு அரங்க வளாகத்தில் ரூ.283.35 இலட்சம் செலவில் மகளிருக்கான சிறப்பு விளையாட்டு விடுதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஃபிடே உலக வாகையர் சதுரங்க போட்டியின் கோலாகலமான துவக்க விழா நவம்பர் 2013–ஆம் ஆண்டு இவ்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

### 7.1.3 மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை

இந்த விளையாட்டரங்கம் 1995–ஆம் ஆண்டு ரூ.8.00 கோடி செலவில் 8,670 நபர்கள் அமரும் வசதியுடன் கட்டப்பட்டது. சர்வதேச தரத்திலான ஒளி வெள்ள வசதியுடன் கூடிய செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் இங்கு உள்ளது. இது தவிர, நான்கு டென்னிஸ் திடல்கள் (களிமண்), ஒளி வெள்ள வசதி கொண்ட மூன்று கையுந்துபந்து திடல்கள் மற்றும் ஒரு உடற்பயிற்சிக் கூடம் ஆகிய வசதிகள் உள்ளன. தற்பொழுது, செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டது.

**7.1.4 நீச்சல் குள வளாகம், வேளச்சேரி சாலை, சென்னை**

இந்த வளாகம் 1995–ஆம் ஆண்டு ரூ.11.32 கோடி செலவில் கட்டப்பட்டது. 4,000 பார்வையாளர்கள் கண்டுகளிக்கும் வகையில் உள்ள இவ்வளாகத்தில் சர்வதேசத் தரத்திலான 8 பாதையுடன் கூடிய 50மீ x 25மீ பந்தய நீச்சல் குளம், 18மீ x 25மீ குதித்தல் குளம் மற்றும் 25மீ x 25மீ பயிற்சி நீச்சல் குளம் உள்ளன. இவ்வசதிகள் மட்டுமல்லாமல், ஒரு உடற்பயிற்சிக் கூடம் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் விளையாட்டிற்கான உள்ளரங்கம் ஆகிய வசதிகளும் உள்ளன. மேலும் இவ்வளாகத்தில் ஒரு பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் ரூ.1.50 கோடி செலவில் தற்சமயம் நிறுவப்பட்டுள்ளது.

**7.1.5 டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை**

இந்த விளையாட்டரங்கம் 1995ஆம் ஆண்டு ரூ.7.50 கோடி செலவில் 7,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதிகளுடன் கட்டப்பட்டது. இவ்வளாகத்தில் முதன்மை விளையாட்டரங்கில் ஒரு மையத் திடலும், வெளியே 6 பயிற்சித் திடல்களும் ஒளி வெள்ள வசதியுடன் உள்ளன. அனைத்துத் திடல்களும் சர்வதேச தரத்திலான செயற்கை மேற்பரப்பு கொண்டவையாகும். உடற்பயிற்சிக் கூடம்

ஒன்றும் இவ்விளையாட்டரங்கில் உள்ளது. இவ்விளையாட்டரங்கம் முழுவதும் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு மற்றும் மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த பெருமைமிக்க விளையாட்டரங்கில், ஒவ்வொரு ஆண்டும் சென்னை ஓப்பன் டென்னிஸ் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், 05.01.2015 முதல் 11.01.2015 வரை சென்னை ஓப்பன் டென்னிஸ் விளையாட்டு போட்டிகள் மிகவும் பிரம்மாண்டமாக நடத்தப்பட்டன.

**7.1.6 ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம்**

ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் செயற்கை இழை ஓடுதள பாதை மற்றும் இயற்கை புல்தரை கால்பந்து மைதானம் ஆகியவற்றைக் கொண்டது. கூடுதலாக 2013–2014 ஆம் ஆண்டு சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் உள்ள பயிற்சி தடகள பாதையில் ஸ்குவாஷ், பேட்மின்டன், கையுந்துபந்து, கூடைப்பந்து ஆடுகளங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு நீச்சல் குளம் ஆகிய வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் அமைக்க ரூ.12.00 கோடி நிதி அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தற்பொழுது, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 7.1.7 செனாய் நகர் நீச்சல் குளம், சென்னை

இவ்வளாகத்தில் ஒரு நீச்சல் குளம் மற்றும் குழந்தைகளுக்கான ஒரு நீச்சல் குளம் உள்ளன. இது தவிர, 2012–ஆம் ஆண்டு மரத்தாலான ஆடுகளம் கொண்ட இறகுபந்து உள் விளையாட்டரங்கம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. மேலும், ரூ.50.00 இலட்சம் செலவில் மித தூரம் நீச்சல்குளம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### 7.1.8 மாவட்ட விளையாட்டு வளாகங்கள்

திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்து விளையாட்டு வளாகங்களிலும் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கபாடி மற்றும் கையுந்துபந்து போன்ற விளையாட்டுகளுக்கான ஆடுகள வசதிகள் உள்ளன. இதர விளையாட்டுகளுக்கான வசதிகள் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஒரு உள்விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் ஆகிய வசதிகளை அமைக்க உறுதி செய்ய மாவட்டங்களில் விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அரசு முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### 7.1.9 பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள்

சென்னை மட்டுமல்லாது, தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ரூ.14.30 கோடி செலவினத்தில் திருவாரூர், திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்விளையாட்டரங்கங்கள் இறகுப்பந்து, கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, டேக்வாண்டோ, கைப்பந்து, கபாடி, வாள்சண்டை ஆகிய விளையாட்டுக்களில் விளையாட்டு வீரர்கள் சர்வதேச தரத்தில் பயிற்சி பெற வழிவகை செய்யும். சென்னை நேரு பூங்கா விளையாட்டு வளாகம் மற்றும் வேளச்சேரி நீச்சல் குள வளாகம் ஆகியவற்றிலும் உள் விளையாட்டு அரங்கங்கள் உள்ளன. மேலும், ஸ்ரீரங்கம் (திருச்சி), அரியலூர், விழுப்புரம், காஞ்சிபுரம், திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் உள்விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இது தவிர, 2013–2014 ஆம் ஆண்டிற்கு நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்விளையாட்டரங்கங்கள் அமைக்க தலா

ரூ.1.50 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 2014–2015 ஆம் ஆண்டு முகப்பேரில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் அமைக்க கூடுதல் மான்யமாக ரூ.39.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது, கட்டுமான பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

### 7.1.10 செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் வளைகோல் பந்து புல் மைதானம்

செயற்கை இழை தடகள ஓடுபாதைகள் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்திலும் மற்றும் பயிற்சி ஓடுதள பாதை பகுதியிலும் உள்ளன. கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் இவ்வசதி உள்ளது. திருச்சிராப் பள்ளியில் ரூ.6.00 கோடி செலவில் மின்னொளி வசதியுடன் கூடிய செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. திருநெல்வேலியில் ரூ.3.50 கோடி செலவில் செயற்கை இழை தடகள ஓடுபாதை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செயற்கை புல் வளைகோல்பந்து மைதானங்கள் சென்னை மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கம், எழும்பூர் மற்றும் ஒய்.எம்.சி.ஏ வளாகம், சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன. இது மட்டுமல்லாமல், ரூ.6.00 கோடி செலவினத்தில்

மதுரையில் செயற்கை புல் வளைகோல்பந்து மைதானம் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. ரூ.7.00 கோடி செலவில் கோவில்பட்டியில் செயற்கை புல் வளைகோல்பந்து விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

### 7.1.11 நீச்சல் குளங்கள்

1995–ஆம் ஆண்டு தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் போது சென்னை வேளச்சேரியில் 4,000 பார்வையாளர்கள் அமரக் கூடிய கொள்திறன் கொண்ட பெருமைமிகு சர்வதேச தரத்திலான நீச்சல் குளம் ஒன்று அமைக்கப்பட்டது. வேளச்சேரியில் உள்ள இந்த நீச்சல் குள வளாகத்தில் 8 பாதையுடன் கூடிய 50 மீ x 25 மீ அளவுள்ள பந்தய நீச்சல் குளம், 18 மீ x 25 மீ அளவுள்ள குதித்தல் நீச்சல் குளம் மற்றும் 25 மீ x 25 மீ அளவுள்ள பயிற்சி நீச்சல் குளம் ஆகியவைகள் உள்ளன. இவைகள் அனைத்தும் சர்வதேச தரத்திலானவைகளாகும். 1995–ஆம் ஆண்டிலிருந்து இந்த வளாகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல்வேறு தேசிய அளவிலான நீச்சல் போட்டிகளை நடத்தி மாநில, தேசிய மற்றும் பன்னாட்டு நீச்சல் வீரர்களை உருவாக்கியுள்ளது.


இது தவிர, சென்னை மெரினாவில் **50** மீ x **25** மீ அளவும், **1.2** மீ. முதல் **4** மீ. வரை ஆழமும் கொண்ட அண்ணா நீச்சல் குளம் ஒன்றும் உள்ளது.

தற்போது, பல்வேறு மாவட்டங்களில் **25** மீ x **13** மீ அளவுள்ள **25** நீச்சல் குளங்கள் உள்ளன. இந்த நீச்சல் குளங்களில், மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. போட்டிகள் நடத்துவதற்கு மட்டுமல்லாமல், பயிற்சி முகாம்கள், நீச்சல் வீரர்களுக்கான தொடர் பயிற்சி மற்றும் புதியவர்களுக்கான நீச்சல் கற்றுக் கொடுப்பது போன்றவைகளை தொடர்ந்து நடத்திட இந்த நீச்சல் குளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தகுதி வாய்ந்த நீச்சல் பயிற்சியாளர், உயிர் காப்பாளர், குழாய் மற்றும் வடிகலன் இயக்குபவர் ஆகியோருடன் உயிர் காக்கும் கருவிகளும் இந்த நீச்சல் குளங்களில் உள்ளன.

## 7.2 கட்டமைப்புகள் பராமரித்தல்

**2014–2015** ஆம் ஆண்டு, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்களில் பராமரிப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகள் தலா **ரூ.80.00** இலட்சம் செலவிலும் மற்றும் இதர மாவட்ட விளையாட்டு

வளாகங்களில் அவசர பராமரிப்பு பணிக்காக ரூ.80.00 இலட்சம் செலவிலும் என மொத்தம் ரூ.4.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் என அரசு அறிவித்துள்ளது. மேலும், மாவட்டங்களிலுள்ள நீச்சல் குளங்களை ரூ.3.00 கோடி செலவில் சீரமைத்து புதுப்பிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது தவிர, சென்னை வேளச்சேரி நீச்சல்குள வளாகம், செனாய் நகர், மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள நீச்சல்குளங்களில் ரூ.75.00 இலட்சம் செலவில் ஓசோன் வசதியுடன் கூடிய வடிகலன் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.




## <u>படலம் – 8</u>

### "முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கிய" திட்டம்

தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடிமக்களும் உடல் ஆரோக்கியத்துடன் வாழ இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டம் குழந்தைகள், இளைஞர்கள், நடுத்தர வயதினர்கள், முதியோர்கள், குறைபாடு கொண்ட மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட அல்லது ஏற்றத்தாழ்வு கொண்ட சமூகத்தினர் உட்பட அனைத்து தரப்பு மக்களையும் இலக்காகக் கொண்டதாகும். இத்திட்டம் அனைத்து தர மக்களிடையே கணிசமான ஆர்வத்தினை ஏற்படுத்துவதோடு உடற்பயிற்சி, உடற்தகுதி, விளையாட்டில் ஈடுபடுதல் ஆகியவற்றின் நன்மை குறித்து விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது.

முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கிய திட்டத்தினை செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகள், ஊடகத் துறை, அனைத்துத் தரப்பு ஊழியர்கள், அனைத்து தரப்பு கல்வி நிறுவனங்கள், குடியுரிமை நலச் சங்கங்கள், விளையாட்டு இணையங்கள், சுய உதவிக் குழு கூட்டமைப்புகள் மற்றும் இதர அமைப்புகளின் பங்கேற்போடு செயல்படுத்தப்படும்.

முதலமைச்சரின் அனைவருக்கும் உடல் ஆரோக்கியம் என்ற திட்டத்தை ஒவ்வொரு பங்குதாரரும் செயல்படுத்தும் பொருட்டு வழிகாட்ட ஆங்கிலம் மற்றும்

தமிழில் கையேடுகள் ஒவ்வொரு பங்குதாரருக்காகவும் ஏற்படுத்தப்படும். இவை மாநில மற்றும் மாவட்ட நிலை பயிற்சி பெற்ற பின் வழங்கப்படும்.

இத்திட்டத்தை முன்னோக்கி செயல்படுத்தும் நோக்கில், அரசு மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு உடற்தகுதி குழுவினை அரசாணை (நிலை) எண்.12, நாள் 5.2.2015 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை வாயிலாக ஏற்படுத்தியுள்ளது.

**8.1 தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது**

தலைமைச் செயலகத்தில் சுமார் 6000 ஊழியர்கள் மற்றும் அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் அலுவலக நாட்களில் நீண்ட நேரம் பணிபுரிந்து வருவதுடன், விடுமுறை நாட்களிலும் அலுவலகத்திற்கு வந்து பணியாற்றுகிறார்கள். அவர்களில் பலர் விளையாட்டுகள் விளையாட வேண்டுமெனவும், உடற்பயிற்சி செய்ய வேண்டுமெனவும் எண்ணுகின்றனர். ஆனால், தலைமை செயலகத்தின் உள்ளே அல்லது சுற்றுப்புறத்தில் உடற்பயிற்சிக் கூட வசதி ஏதுமில்லை. உடற்பயிற்சி கூட

வசதியை அளிப்பது அவர்களது ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுவது மட்டுமல்லாமல் அவர்கள் செயல்திறனையும் அதிகரிக்கிறது. வேலைநாட்களில் சுறுசுறுப்பாக இருக்கும் பணியாளர்கள் ஆரோக்கியமாகவும் மற்றும் தங்கள் பணியில் மகிழ்ச்சியாகவும் இருக்க இயலும். உடற்பயிற்சியினால், ஆற்றல் நிலை, ஒழுக்கம் மற்றும் செயல்திறனை மேம்படுத்த இயலும். மேலும், உடல்தகுதியினால் பணியாளரின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, விடுப்பு எடுப்பதை குறைத்து, மருத்துவத்திற்கான செலவினை குறைத்து, ஒழுக்கத்தை அதிகரிக்கின்றது. எனவே, தலைமை செயலகப் பணியாளர்களுக்கென ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியே அனைத்து வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

### 8.2 17 மாவட்டங்களில் நவீன உடற்பயிற்சி மையம் அமைத்தல்

இன்றைய சமூகத்தில், தொடர்ந்து பல மணி நேரம் இருக்கையிலேயே அமர்ந்து பணிபுரிய வேண்டிய சூழ்நிலையில், இதயம் மற்றும் உடல் எடை இரண்டையும் பராமரிப்பது குறித்த தினசரி செயல்பாடு தரத்தை அதிகரிக்க முன் எப்போதையும் விட ஒரு தேவை அதிகமுள்ள

உடற்பயிற்சி, அறிவு திறன் ஊக்கியாக, திறமையுடன் மன அழுத்தத்தை சமாளிக்க உதவுதல், மன அழுத்தம் நிவர்த்தி செய்தல், மனக்கலக்கம், உடல் எடையை குறைத்தல், சுய மரியாதை மற்றும் நம்பிக்கை கூட்டுதல் ஆகியவற்றை அளிக்கிறது.

அனைவரது நலன் மற்றும் நல்ல ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் இளைஞர்கள், குழந்தைகள், ஆடவர் மற்றும் மகளிர் அனைவரும் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கிய மாகவும் உடற்திறனுடன் இருப்பதை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் நவீன உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும். இந்த உடற்பயிற்சிக் கூடங்கள் விளையாட்டு வீரர்களின் திறன் அளவை அதிகரிக்க பயன்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த நவீன உடற்பயிற்சி மையம் அமைக்க 1000 முதல் 1200 சதுர அடி கொண்ட கூடம் தேவைப்படும்.

17 மாவட்ட விளையாட்டு வளாகங்களில் இந்நவீன உடற்பயிற்சி மையங்கள் அமைக்க அரசு ரூ.4.00 கோடி (ரூ.2.55 கோடி உடற்பயிற்சி உபகரணங்கள் கொள்முதல் செய்யவும் ரூ.1.45 கோடி உடற்பயிற்சி கூடம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளவும்) ஒதுக்கப்பட்டுள்ளது.

## <u>படலம் – 9</u>

## <u>இளைஞர் நலத் திட்டங்கள்</u>

### 9.1 இளைஞர் நல இயக்குநரகம் அமைத்தல்

அரசாணை (நிலை) எண்.56, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (இந) துறை, நாள்.2.7.2013–ன்படி, இளைஞர்களை முறையாக நெறிப்படுத்தி செயல்படுத்தவும், அவர்களை கண்காணிப்பதற்காகவும் இளைஞர் நல இயக்குநரகம் அமைக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 40 விழுக்காடு 15 முதல் 35 வயதுடைய இளைஞர்கள் உள்ளனர். இப்பிரிவினர், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மிகவும் துடிப்பான, ஆற்றல் மிக்க பகுதியினராகவும் மாநிலத்தின் வளமான சக்தியாகவும் உள்ளனர். இளைஞர்களை ஒருங்கிணைத்து, வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் அவர்களின் முழு திறமைகளை வழிநடத்துவது சிறந்த வழியாகும்.

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள இளைஞர் நல இயக்குநரகம் மூலம் கீழ்க்காணும் இளைஞர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

அ. இளைஞர்கள், அவர்களது நலன்கள், பயிற்சிகள் மற்றும் வழிநடத்துதல் தொடர்பான அனைத்து பணிகள்.

ஆ. தேசிய மற்றும் மாநில வளர்ச்சித் திட்டங்களில் இளைஞர்களை ஒருங்கிணைத்து, மாநில மற்றும் தேசிய வளர்ச்சிக்கு தன்னார்வத்துடன் பங்கேற்கச் செய்தல்.

இ. இளைஞர்களிடையே ஆளுமைத் திறன் மற்றும் தலைமைப் பண்பை ஊக்குவிக்கும்வண்ணம் வீரதீரச் செயல்கள், பொறுப்புகள், நம்பிக்கை ஆகியவற்றை ஊக்குவித்தல்.

ஈ. பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இளைஞர் குணநலன்கள் மற்றும் இளைஞர் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்தல்.

உ. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்கும்வண்ணம் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் ஊக்குவித்தல்.

ஊ. இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளை நடத்தி ஊக்குவித்தல்.

எ. பல்வேறு நிலைகளில் மாநில இளைஞர் விருதுகள் வழங்குவதன் மூலம் அவர்களின் திறமைகளை அங்கீகரித்தல்.

ஏ. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறையின் மூலம் விழிப்புணர்விற்கான கையேடுகள் வெளியிடுதல்.

ஐ. நேரு இளையோர் மையம், தேசிய புனரமைப்புப் படைத் திட்டம் மற்றும் இதர திட்டங்கள் மூலம் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்துதல்.

ஒ. திறமை மிக்க இளைஞர்களை தேர்ந்தெடுத்து, அவர்களை தேசிய இளைஞர் விழாவில் பங்கேற்க அனுப்ப ஏதுவாக மாநில இளைஞர் விழா நடத்துதல்.

ஓ. இளைஞர் வருகையினை அதிகரிக்கும் வண்ணம் மாநிலம் முழுவதும் உள்ள இளைஞர் விடுதிகளில் வசதிகளை மேம்படுத்துதல்.

இளைஞர் நல இயக்குநரகமாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மைச் செயலர் மற்றும் உறுப்பினர் செயலர் இளைஞர் நல இயக்குநராகவும் செயல்படுவர்.

## 9.2 இளைஞர் விடுதிகள்

சரித்திரப் பிரசித்தி பெற்ற மற்றும் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் இடங்களை சாகசப் பயணம், கல்விச்

சுற்றுலாவின் மூலம் அதிகளவிலான இளைஞர்கள், கூடுதலாக செலவில்லாத வகையில் தங்கியிருந்து கண்டுகளிக்க ஏதுவாக இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் இணை திட்டமாக இளைஞர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றது. கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மத்திய அரசும், இலவசமாக நிலம் வழங்குதல் பணிகளை மாநில அரசும் ஏற்றுக் கொண்டுள்ளன.

தற்போது, தமிழ்நாட்டில் 5 இளைஞர் விடுதிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் 1. சென்னை, 2. மதுரை, 3. தஞ்சாவூர், 4. உதகமண்டலம் (நீலகிரி) மற்றும் 5. திருச்சி ஆகிய இடங்களில் உள்ளன. இந்த இளைஞர் விடுதிகளின் வசதிகளை ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

### 9.3. இளைஞர் எழுச்சி நாள்

மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின்படி, பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக அவரது பிறந்த நாளான அக்டோபர் 15ஆம் நாள் “ இளைஞர் எழுச்சி நாள்” ஆக

அறிவிக்கப்பட்டுள்ளது.

## படலம் – 10

## தகவல் மற்றும் ஆவணப்படுத்துதல்

**10.1** தற்போதைய நவீன உலக பார்வையில் சமூக ஊடகப் புரட்சிக்கு ஒரு மிகப்பெரிய பங்கு உண்டு. சமூக ஊடகம் என்பது தனிப்பட்ட மற்றும் உடனடி தகவல் தொடர்பு முறையாகும். பெரும்பாலான மக்கள், தகவல் தொடர்பான ஒளிபரப்பு, காட்சி மற்றும் அச்சு ஊடகத்தை விட சமூக ஊடகத்திற்கே முன்னுரிமை அளிக்கின்றனர்.

**10.2** சமூக ஊடகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தன்னுடைய திட்டங்கள் / நடவடிக்கைகள் / அறிவிப்புகள் / கொள்கைகள் மற்றும் இதர செயல்பாடுகள் குறித்த விவரங்களை விளையாட்டு ஆர்வலர்களுக்கு ஒரு விசையில் பெறுவதற்கு ஏதுவாக முகநூல் பக்கமான www.facebook.com./sdat.gov தற்போது துவக்கியுள்ளது. இதன்மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நடவடிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடன் விளங்கும். இம்முகநூல் பக்கங்களை காண்பவர்களின் விமர்சனங்கள் மற்றும் கருத்துக்கள் மூலம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தவறுகளைச் சரிபடுத்திக் கொள்ள உதவுவதுடன் தன்னுடைய

செயல்பாடுகளை தொழில் முறையாக மேற்கொள்ள உதவும். உலக அளவில் உள்ள பல்வேறு முகநூல் பயன்படுத்துபவரும் தங்களது விலைமதிப்பற்ற விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

**10.3** அனைத்து மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் விளையாட்டு தோழமைக்கான பல்வேறு விளையாட்டு தொடர்பான விவரங்களுடன் அறிவியல் பூர்வமான செய்திகள் பரப்பப்படவும், ஆவணப்படுத்தவும் செய்திக் கடிதம் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

## 2015–2016 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட இருக்கும் திட்டங்கள்

- நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, விருதுநகர் மற்றும் நாமக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் உள் விளையாட்டரங்கம் அமைத்தல்
- விழுப்புரம், நீலகிரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களிலும் விளையாட்டு விடுதி அமைத்தல்
- பல்வேறு விளையாட்டுகளில் பயிற்றுநர்களை நியமித்து ஈடுபடுத்துதல்
- மாநிலத்தில் உடற்தகுதி கலாச்சாரத்தை ஊக்குவித்து பரவச்செய்வதற்கு முதலமைச்சரின் “அனைவருக்கும் உடல் ஆரோக்கியம்” என்ற திட்டம் துவக்கப்பட்டு செயல்படுத்தப்படும்
- அனைத்து மத்திய மற்றும் மாநில விளையாட்டு திட்டங்களை செயல்படுத்துதல்
- முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது திட்டத்தைச் செயல்படுத்துதல்
- மாநிலத்தில் கட்டமைப்பு வசதிகளின் ஒட்டுமொத்த பராமரிப்புகள் மற்றும் போட்டிகளை மேம்படுத்துதல்.

## <u>படலம் – 11</u>

## <u>தேசிய மாணவர் படை</u>

### 11.1 முன்னுரை:

தேசிய மாணவர் படையானது பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஜுலை 16, 1948 அன்று உருவாக்கப்பட்டது. அதனது குறிக்கோள் ஒற்றுமை மற்றும் ஒழுக்கம் ஆகும். இதன் மூலம் தேசிய மாணவர் படையானது ஒழுக்கத்துடன் கூடிய சமூக பொறுப்பு நிறைந்த இளைஞர்களை உருவாக்கிட வழிவகை செய்கிறது.

மாறிவரும் கால சூழலுக்கு ஏற்ப தேசிய மாணவர் படையின் ஆரம்பகால இராணுவ நோக்கமானது சமூக சேவை மற்றும் சாகச பயிற்சி போன்ற பன்முகங்களுடன் விரிவடைந்துள்ளது.

தேசிய மாணவர் படையின் நோக்கமானது காலத்திற்கேற்ப நிலை நின்று நாட்டின் தற்போதய சமூக பொருளாதார சூழ்நிலையில் எதிர்பார்க்கப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதாகும். இதன் முக்கிய நோக்கங்கள், இளைஞர்களிடையே நற்பண்பு, தலைமைப்பண்பு, ஒழுக்கம், சமநோக்குப் பார்வை, சாகச சக்தி மற்றும் தன்னலமற்ற சேவைகளை வளர்த்தல் போன்றதாகும்.

நமது நாடு உயரிய வளர்ச்சிப் பாதையில் உள்ளது. நமது ஆற்றலை முழுமையாக உணர வேண்டுமானால் இளைஞர்களிடையே பலத்தை உட்புகுத்தி அவர்களது தன்னம்பிக்கையை வலுப்படுத்துவதுடன் நோக்குணர்வு, மதிப்பு மற்றும் நாட்டுப்பற்றை தக்க வைக்கும் பயிற்சிகளை மேம்படுத்த வேண்டும்.

**<u>தேசிய மாணவர் படையின் இலக்கு:</u>** இளைஞர்களின் ஆற்றலை மேம்படுத்துதல் மற்றும் ஆரோக்கியமான வளமையான மேலும் வலிமையான இந்தியாவை உருவாக்குவதற்கு கடமையாற்றுதல்.

## 11.2 அமைப்பு

தேசிய மாணவர் படை இயக்குநரகத்தின் கீழ் 05 தொகுதி தலைமையிடங்கள் மற்றும் 51 தேசிய மாணவர் படை அலகுகள் செயல்படுகின்றன. 02 தொகுதி தலைமையிடங்கள் சென்னையிலும் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் தலா ஒரு தொகுதி தலைமையிடங்களும் அமைந்துள்ளன. 51 தேசிய மாணவர் படை அலகுகள் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அமைந்துள்ளது.

## 11.3 தொலைநோக்கு பார்வை:

தமிழகத்தில் இளைஞர்களை நாட்டின் திறன் வாய்ந்த தலைவர்களாக மற்றும் நாட்டின் சிறந்த குடிமகன்களாக உருவாக்குதல். தேசிய மாணவர் படை மாணவர்கள் பேரிடர் நிகழும்போது எப்படி விழிப்புணர்வுடன் சூழ்நிலையைக் கையாளுவது, உடனடி முதுலுதவி அளிப்பது மற்றும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரிடர்களின் போது மக்களை காப்பாற்றுவதில் பங்கேற்றல் ஆகிய மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கிய பேரிடர் மேலாண்மையில் பயிற்சியளிக்கப்படுகிறது. வாழ்க்கையில் அனைத்து நிலையிலும் தலைமை பண்புகள் மற்றும் பயிற்சி பெற்ற இளைஞர்களை உருவாக்குதல். இதைத் தவிர இராணுவத்தில் சேர ஊக்குவிப்பது.

## 11.4 பணி:

தேசிய மாணவர் படையானது தலைமை பண்பு, நற்குணங்கள், ஒழுக்கம், சமூக ஒற்றுமை, சமூக ஒருமைப்பாடு போன்ற பண்புகளை இராணுவ சூழலில் நடைபெறும் பன்முக நிகழ்ச்சிகளின் மூலம் கற்றுத் தருகிறது. நம் நாட்டின் வளமான பண்பாட்டு பாரம்பரியம் மற்றும் சமூக ஒழுக்கத்தை பாதுகாக்கும் திறன் கொண்ட ஒரு மாதிரி குடிமகனை உருவாக்குகிறது.

## 11.5 பயிற்சியின் கரு:

பயிற்சியின் தத்துவம் கீழ்கண்ட முறைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

அ) சரியான தலைமைப்பண்பை எய்திட ஒருங்கிணைந்த இளைஞர் மேம்பாட்டுப் பயிற்சி

ஆ) தொகுதி அடிப்படையிலான பயிற்சி கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது.

(i) நற்பண்பினை தோற்றுவித்தல் மற்றும் ஈடுசெய்யும் வளர்ச்சி

(ii) அடிப்படை இராணுவ பயிற்சி

(iii) சமூக விழிப்புணர்வு மற்றும் சேவை

**11.6 பயிற்சியின் வழிமுறைகள்:**

எந்தவொரு பயிற்சி தத்துவத்திற்கும் அதன் வழிமுறைகள் அடிப்படையானதாகும். புதிய பயிற்சி தத்துவத்தை சுமுகமாகவும் திறமையாகவும் செயல் படுத்துவதை கட்டுப்படுத்தும் பரந்த அளவுகோல்கள் கீழ்காணும் பன்முக பயிற்சி வழிமுறைகளில் வரையறுக்கப்பட்டுள்ளது.

**11.6.1 மையப் பயிற்சி:**

ஒரு புதுமையான முற்போக்கு மற்றும் சுவராசியமான முறையில் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் பயிற்சி திட்டமிடப்படுகிறது. கல்லூரி மற்றும் பள்ளிகளில்

மாணவர்களுக்கு ஆயுதத்தை கையாளுவது, தடைதாண்டும் பயிற்சி, அணிவகுப்பு பயிற்சி, துப்பாக்கி சுடுதல், குறுக்குச் சாலை ஓட்டம் போன்ற தீவிர பயிற்சிகள் அளிப்பதற்கு நிரந்தர பயிற்சியாளர்கள் இராணுவத்திலிருந்து அனுப்பப்படுகிறார்கள். தேசிய மாணவர் படையின் குறிக்கோளினை அடைவதற்காக தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வழக்கமான பயிற்சியைத் தவிர தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு கீழ்கண்ட பயிற்சிகள் கற்றுத் தரப்படுகிறது.

- ஆளுமைத்திறன்
- சகிப்புத்தன்மை
- பொறுமை
- தைரியம்
- முடிவெடுக்கும் தன்மை
- ஆர்வம்
- பேச்சுத்திறன்
- தன்னம்பிக்கை
- விசுவாசம்
- சமயோசிதம்
- சுயநலமின்மை
- பொது பேச்சுத்திறமை

### 11.6.2 முகாம் பயிற்சி:

மாணவர்களுக்கு அவர்களின் நிஜ வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் முகாம் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. கூடாரம் அமைத்தல், கயிறு முடிச்சு போடுதல் போன்ற சாகச அடிப்படை பயிற்சிகள் அளிக்கப்படுகின்றது. நாட்டின் பல்வேறு இடங்களில் கீழ்கண்ட முகாம்கள் பத்து நாட்கள் முதல் இருபத்தோரு நாட்கள் வரை நடை பெறுகிறது :–

- தரைப்படை முகாம்கள்
- மேம்பட்ட தலைமை முகாம்கள்
- விமானப்படை முகாம்கள்
- கடற் படை முகாம்கள்
- கடற் படை தளம் கொண்ட மேம்பட்ட தலைமை முகாம்கள்
- தேசிய ஒருமைப்பாட்டு முகாம்கள்
- சிறப்பு தேசிய ஒருமைப்பாட்டு முகாம்கள்
- மலையேற்றப் பயிற்சி முகாம்கள்
- பாரா பயிற்சி
- என்.சி.சி.யின் தலைமையிட மலையேற்ற முகாம்கள்
- இராணுவ இணைப்பு முகாம்கள்
- ஒருங்கிணைந்த வருடாந்திர பயிற்சி முகாம்கள்
- குடியரசு தின விழா முகாம், தில்லி

### 11.6.3 சமூக சேவை மற்றும் சமூக வளர்ச்சி:

சமூக சேவை செயல்பாடுகள் நமது நாட்டின் வேற்றுமையில் ஒற்றுமை கொண்டாடும் நோக்கத்துடன்

நடத்தப்படுகிறது. அதுமட்டுமின்றி ஒவ்வொரு மாணவரிடமும் சமத்துவத்திறன் மதிப்புகளை உண்டாக்க தூண்டுகோலாக உள்ளது. அனைத்து தேசிய மாணவர் படை மாணவர்களும் இரத்ததான முகாம், மரம் நடுதல், கண் தானம், முதியோர் கல்வி, சாலைகளை சுத்தப்படுத்துதல், அநாதை இல்லங்களை பார்வையிடுதல், போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல், வரதட்சணையை எதிர்த்து உறுதி மொழி எடுத்தல், தொழு நோய் எதிர்ப்பு போன்ற சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

### 11.6.4 இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சி:

வெளிநாடுகளில் இந்திய நாட்டின் சமூக பொருளாதார கலாச்சார யதார்த்தங்களின் பிம்பத்தை உருவாக்க மற்றும் பன்னாட்டு கலாச்சாரங்களை ஒருவருக்கொருவர் புரிந்து பாராட்டிக்கொள்ள இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சிகள் மேலும் அதிக நாடுகளுக்கு விரிவாக்கப்படுகிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் ரஷ்யா, நேபாளம் / பூடான், சிங்கப்பூர், இங்கிலாந்து, வங்க தேசம், இலங்கை, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாட்டு

கடற்பயணங்களில் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சிகளுக்கு தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### 11.6.5 வீர சாகச அடிப்படை பயிற்சி மற்றும் விளையாட்டு :

மாணவர்களின் மனதில் ஒளிந்திருக்கும் எண்ணற்ற சாகச திறன்களை வெளிக்கொணரும் வகையில் பல்வேறு சாகசப்பயிற்சிகள் நடத்தப்படுகிறது. மாணவர்கள் இதன்மூலம் ஒவ்வொரு சாகச நடவடிக்கையின் உட்கூறினையும் அனுபவித்து மகிழ இயலும். இதைத் தவிர கடற் பயணம், பறக்கும் மற்றும் மிதவை பயிற்சி, படகு இழுத்தல், தலைகீழாக குதித்தல், படகு போட்டி, காற்றில் அலையாடல், கப்பல் மாடலிங், ஏரோ மாடலிங், படகோட்டுதல், சைக்கிள் / மோட்டார் சைக்கிள் பயணம், மலையேறும் கலை, சிலிதரிங் போன்ற பிரிவுகளில் பொதுவான மற்றும் சாகசம் சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

### 11.6.6 ஆளுமை வளர்ச்சி:

ஏற்கனவே உள்ள பாடத்திட்டங்களில் ஆளுமை வளர்ச்சி / வாழ்க்கை / தகவல் பரிமாற்ற திறன் குறித்த பிரிவுகளும் அறிமுகப்படுத்தப்படும். ஒரு குடிமகனை

முழுமையான மனிதனாக மாற்றும் வகையில் வாழ்வியல் திறன்கள் மேலும் வலுவூட்டப்படும்.

### 11.6.7 ஈடுசெய் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் தேர்வு:

மாணவர்கள் தேர்வுகளில் தங்களது செயலாக்கத் திறனை மேம்படுத்த அனைத்து இயக்ககங்களிலும் முயற்சிகள் எடுக்கப்படும். சான்றிதழ் தேர்வில் பங்கேற்பதற்கு தகுதி பெற்றிட தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்கள், வருடாந்திர பயிற்சி முகாம்கள் அல்லது வரையறுக்கப்பட்ட ஏதேனும் ஒரு முகாம்களில் கலந்து கொள்வது அவசியம். தேசிய மாணவர் படை மாணவர்கள் தங்கள் தகுதிக்கு ஏற்றவாறு இளநிலை மாணவ மாணவியர்கள் சான்றிதழ் '**அ**' மற்றும் முதுநிலை மாணவ மாணவியர்கள் சான்றிதழ் '**ஆ**' / சான்றிதழ் '**இ**' தேர்வில் பங்கேற்பார்கள்.

### 11.6.8 பயிற்சியாளருக்கு பயிற்சி அளித்தல்:

பயிற்சியாளருக்கு குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பயிற்சி நிலையை மேம்படுத்த புதுமுறையிலான காலமுறை புத்தாக்க பயிற்சிகள் வழங்கப்படும். கல்லூாரி மற்றும் பள்ளி ஆசிரியர்கள் பயிற்சியாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆண் பயிற்சியாளர்களுக்கு அலுவலக பயிற்சி மையம்,

காம்ப்டியிலும் பெண் பயிற்சியாளர்களுக்கு மகளிர் அலுவலர் பயிற்சி பள்ளி குவாலியரிலும் ஆற்றல்மிகு பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 11.6.9 உள்கட்டமைப்பு:

முறையான பயிற்சி வசதிகளை உருவாக்கிடும் பொருட்டு அனைத்து மாநிலங்களிலும் தேசிய மாணவர் படை பயிற்சி அகாடமி அமைத்திட தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறைந்தபட்சம் ஒரு தலைமையிடத்துக்கு ஒரு பயிற்சி அகாடமி தேவைப் படுகிறது. அதுமட்டுமின்றி அனைத்து அகாடமிகளிலும் அதிகாரி மற்றும் மாணவர்களுக்கு அதிநவீன வசதிகள் கொண்ட தங்குமிடங்கள் அமைக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையின் அகாடமியை ரூ.12.00 கோடியில் அமைக்க மதுரை மாவட்டத்தில் இடையபட்டி கிராமத்தில் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது..

### 11.7 தேசிய மாணவர் படையின் பரவல்

இன்று நமது தேசிய மாணவர் படை இயக்குநரகம் 793 பள்ளிகள் மற்றும் 374 கல்லூரிகளில் 1,05,084 மாணவர்களைக் கொண்டு செயல்படுகிறது.

## 11.8 முக்கிய நிகழ்வுகள்

### 11.8.1 தேசிய மாணவர் படை தினம்:

ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் நான்காம் ஞாயிற்றுகிழமை தேசிய மாணவர் படை தினம் கொண்டாடப்படுகிறது.

### 11.8.2 மத்திய அளவில் எற்பாடு செய்யபட்ட முகாம்கள்:

தரைப்படை, விமானப்படை, கடற் படை முகாம்கள் மற்றும் விளையாட்டுகள் தேசிய அளவில் நடைபெற்று வருகிறது. இதைத் தவிர பல்வேறு தேசிய ஒருமைப்பாட்டு முகாம்கள், மலையேறும் பயிற்சி முகாம் மற்றும் சாகச முகாம்கள் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

### 11.8.3 குடியரசு தின விழா முகாம் :

ஒவ்வொரு வருடமும் இந்த முகாம் ஜனவரி ஒன்று முதல் இருபத்தி ஒன்பது வரை தில்லி கண்டோன்மென்டில் உள்ள, கேரிசன் அணிவகுப்பு மைதானத்தில் நடைபெறுகிறது. இம்முகாமில் நாடு முழுவதிலுமிருந்து 17 தேசிய மாணவர் படை இயக்ககங்கள் சார்ந்த 1,700 தேசிய மாணவர் படை மாணவர்கள் பங்கேற்பதோடு, மாணவர்கள் குடியரசு தின அணிவகுப்பு மற்றும் பிரதமரின் திரளணியில் பங்கேற்கிறார்கள். சில மாணவர்கள் நட்பு நாடுகளிலிருந்து

பங்கேற்கிறார்கள். இளைஞர்களிடையே தேசிய ஒருமைப் பாட்டு உணர்வுகளை கொண்டுவரும் வகையில் பல்வேறு தேசிய மாணவர் படை நடவடிக்கைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கூடுதலாக அவர்கள் இயக்ககங்களுக்கிடையே நடைபெறும் போட்டிகளிலும் பங்கேற்கிறார்கள். இறுதியாக 28 ஜனவரி அன்று பிரதமர் மற்றும் குடியரசு தலைவருடன் நடைபெறும் தேநீர் விருந்துடன் இம்முகாம் நிறைவு பெறுகிறது. ஒவ்வொரு வருடமும் ஜனவரி திங்களில் நடைபெறும் குடியரசு தின விழா முகாமில் பங்குபெற நமது தேசிய மாணவர் படையிலிருந்து 116 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தியாவிலேயே நமது தேசிய மாணவர் படை குழு தான் மிகப் பெரிய குழு ஆகும். குடியரசு தின முகாமில் பிரதமரின் திரளணிக்காக இயக்ககங்களுக்கிடையே போட்டிகள் தில்லியில் நடத்தப்படுகின்றன. 1962, 1968, 1971, 1974, 1975, 1976, 1978, 1980, 1987, 1995, 2000 மற்றும் 2003 ஆகிய 12 வருடங்களில் நமது தேசிய மாணவர் படையினர் ''அகில இந்திய பதாகையை'' பெற்று வாகை சூடி பெருமை சேர்த்துள்ளனர் .

**11.8.4 மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரளணி :**

ஆண்டு தோறும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரளணி நடை பெறும். குடியரசு தின விழா முகாமில் பங்கேற்ற தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்களுக்கு பாராட்டு விழா மற்றும் தமிழகத்தில் சிறந்த தொகுதி தலைமையிட அலுவலகத்திற்கு முதலமைச்சர் பதாகை வழங்கப்படும்.

**11.8.5 மத்திய ஆலோசனை குழு :**

தேசிய மாணவர் படை விதி பிரிவு **12**ன் கீழ் அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை குழுவின் ஒட்டுமொத்த மேற்பார்வையின் கீழ் தேசிய மாணவர் படை செயல்படுகிறது. மத்திய இராணுவ அமைச்சகத்தின் மாநில அதிகாரம் கொண்ட அமைச்சர் இந்த குழுவின் தலைவர் ஆவார். இந்த குழு பொதுவாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடி தேசிய மாணவர் படையின் அரசியல் மற்றும் நிர்வாகத் திறன் குறித்து இந்திய அரசிற்கு தக்க ஆலோசனை வழங்கி வருகிறது.

**11.8.6 மாநில ஆலோசனை குழு :**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில ஆலோசனை குழு செயல்படுகிறது.

**11.9** <u>**நிதி நிலை:**</u> தமிழக அரசு **2015– 2016–**ம் ஆண்டில் தேசிய மாணவர் படைத்துறைக்கு ரூ.**45,10,90,000/–** நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

**11.10 மே 2011 முதல் தேசிய மாணவர் படை இயக்ககத்தின் சாதனைகள்:**

**இத்துறைக்கு அரசு கீழ்கண்ட ஆணைகளை வெளியிட்டுள்ளது :–**

<u>**2011–12**</u>

- தலைசிறந்த தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்களுக்கு தமிழக அரசு ஊக்கத்தொகையினை உயர்த்தி **100** முதுநிலை மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.**200/–** வீதம் பத்து மாதங்களுக்கும், **100** இளநிலை மாணவ மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.**100/–** வீதம் பத்து மாதங்களுக்கும் மொத்தம் ரூ.**3,00,000/–** செலவினத்தில் ஒப்பளித்து ஆணை வெளியிட்டுள்ளது.
- தேசிய மாணவர் படை கப்பற்படை அலகு மிதவைப் பயணப் போட்டிக்கான உச்சவரம்பினை ரூ.**1,00,000/–**ல் இருந்து ரூ. **2,00,000/–** ஆக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.
- தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு வழங்கப்படும் சிற்றுண்டிப் படியினை ஒரு மாணவருக்கு ஒரு மணி நேரத்திற்கு ரூ.**3/–**லிருந்து

ரூ.10/– ஆக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது. இதற்கான கூடுதல் செலவு ரூ.5 கோடி ஆகும்.

- குடியரசு தின முகாமிற்கான செலவினத்தினை ரூ.31.50 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரளணிக்கான செலவினத் தொகையை ரூ.3.00 இலட்சத்திலிருந்து ரூ.5.00 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.

**2012–13**

- தேசிய மாணவர் படை பயிற்சி அலுவலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சிறப்பு தேசிய ஒருமைப்பாட்டு முகாமில் வழங்கப்படும் உணவு படியினை தலா நாள் ஒன்றுக்கு ரூ.100/– லிருந்து ரூ.120/– ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.
- குடியரசு தின விழா முகாம் மற்றும் அதைச்சார்ந்த முகாமில் பங்கேற்கும் தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் ஊக்க தொகையினை ரூ.3,17,200/– லிருந்து ரூ.5,80,400/– ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

- ஐந்து தொகுதி தலைமையிட அலுவலகங்களில் உள்ள ஐந்து கண்காணிப்பாளர் பணியிடங்களை உதவி இயக்குநர் பதவியாக மேம்படுத்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

- தேசிய மாணவர் படை இயக்குநரகம் மற்றும் தொகுதி தலைமையிட அலுவலகங்களில் ரூ.47,574/– செலவில் அகண்ட அலை வரிசை இணைப்பு அளிப்பதற்காக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.
- தேசிய மாணவர் படை பயிற்சி அலுவலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு முறையே ரூ.35/– மற்றும் ரூ.30/– என வழங்கப்பட்டு வந்த தினப்படியினை ரூ.100/– ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**2013–14**

- கடற் படை என்.சி.சி. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கல்லூரி ஒன்றிற்கு வழங்கப்பட்டு வந்த கப்பல் மாதிரி வடிவமைப்பு மான்யத்தினை ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– ஆகவும் பள்ளி ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தினை ரூ.5,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இதற்கான கூடுதல் செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.3,20,000/– ஆகும்.
- விமானப் படை என்.சி.சி. கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கல்லூரி ஒன்றிற்கு வழங்கப்பட்டு வந்த வானூர்தி மாதிரி வடிவமைப்பு மான்யத்தினை ரூ.10,000/– லிருந்து ரூ.20,000/– பள்ளி ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த மான்யத்தினை ரூ.5,000/– லிருந்து ரூ.10,000/– ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இதற்கான கூடுதல் செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,45,000/– ஆகும்.
- ஜவஹர் மலையேறுதல் பயிற்சி நிறுவனம் மற்றும் குளிர்கால விளையாட்டு நுண்வான்–பஹலகம், ஜம்மு–காஷ்மீரில் நடைபெறும் மலையேறும்

பயிற்சியில் கலந்து கொள்ள மத்திய அரசின் பங்குத் தொகையைச் சேர்த்து ரூ.59,000/— ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. பின்னர் மைய அரசிடமிருந்து 75% தொகையான ரூ.44,250/— மீள பெறப்படும்.

**2014–15**

- பயிற்சி மற்றும் புத்தாக்க பயிற்சி வகுப்புகளில் பயிற்சிபெறும் தேசிய மாணவர் படை பயிற்சி அலுவலர்கள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப் படியினை தலா நாள் ஒன்றுக்கு ரூ.95/— லிருந்து ரூ.213/— ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.
- முகாம்களில் பங்கேற்கும் தேசிய மாணவர் படை பயிற்சி அலுவலர்களுக்கு தலா நாள் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப் படியினை ரூ.80/— லிருந்து ரூ.100/— ஆகவும் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு ரூ.75/— லிருந்து ரூ.95/— ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

- தேசிய மாணவர் படை தினம் கொண்டாட, செலவினத்தினை ரூ. 1.00 இலட்சத்திலிருந்து ரூ.1.50 இலட்சமாக உயர்த்தி ஆணை வெளியிட்டுள்ளது.

## 11.11 2014–15ம் ஆண்டில் தேசிய மாணவர் படை துறையின் சாதனைகள்

- தமிழ்நாட்டிலுள்ள தேசிய மாணவர் படை மிகவும் ஒழுக்கமான மற்றும் பயிற்சி பெற்ற இளைஞர்களை கொண்டு தொடர்ச்சியாக தமிழகத்திற்கு

பெருமளவில் வெற்றியை தனது பங்களிப்பாக அளித்து வருகிறது.

- அக்டோபர் **2014** ஆம் ஆண்டில் பெங்களூரில் நடைபெற்ற விமானப்படை முகாமில் விமானப்படை மாணவர்கள் தொடர்ந்து மூன்றாவது வருடமாக முதலிடத்தைப் பெற்றுள்ளனர். மாணவர்கள் தனிப்பட்ட மற்றும் குழுப்போட்டிகளில் **07** தங்கப்பதக்கங்களும், **03** வெள்ளிப் பதக்கங்களும் மற்றும் **03** வெண்கலப் பதக்கங்களும் பெற்றுள்ளனர். விமானப்படை மாணவர்கள் வானூர்தி அணிவகுப்பு, வானூர்தி மாதிரி வடிவமைப்பு, சிறந்த விமானப்படை மாணவர் அணி மற்றும் சிறந்த தொழில்நுட்ப வானூர்தி அணி (டேக் ஸ்குவாடரன்) என ஐந்து போட்டிகளில் முதலிடம் பெற்றுள்ளனர்.
- டிசம்பர் **2014** ஆம் ஆண்டில் கர்நாடகத்தில் உள்ள கார்வார் என்ற இடத்தில் நடைபெற்ற கடற்படை முகாமில் நமது இயக்ககத்தைச் சேர்ந்த கடற்படை தேசிய மாணவர் படை மாணவர்கள் **முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.** அம்முகாமில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் கடற்படை மாணவர்கள் **22** தங்கப்பதக்கங்களும், **13** வெள்ளிப் பதக்கங்களும் மற்றும் **02** வெண்கலப் பதக்கங்களும் பெற்றுள்ளனர்.
- செப்டம்பர் **2014–ல்** புதுதில்லியில் நடைபெற்ற மாணவர்களுக்கான தரைப்படை முகாமில் (TSC Boys) நமது இயக்ககத்தைச் சேர்ந்த மாணவர்கள் **மூன்றாம்** இடத்தை பெற்றுள்ளனர்.
- தில்லியில் **17** இயக்ககங்களுக்கிடையே நடைபெற்ற குடியரசு தின விழா முகாம் போட்டிகளில் நமது இயக்ககத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் நான்கு போட்டிகளில் **முதலிடத்தையும்,** ஐந்து போட்டிகளில்

**மூன்றாம்** இடத்தையும் பெற்றுள்ளனர். மொத்தமுள்ள 17 இயக்ககங்களில் நமது இயக்ககம் சிறந்த கடற்படை மற்றும் விமானப்படை இயக்குநரகம் என 28–01–2015 ம் அன்று மாண்புமிகு பிரதமரிடம் நேரடியாக விருது பெற்றுள்ளது.

- அகில இந்திய அளவில் நடைபெற்ற போட்டிகளில் நமது மாணவி E.ஜெசி ஜெனிப்பர் முதுநிலை மாணவி பிரிவில் சிறந்த மாணவியர் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். மாணவர் கோகுல் மற்றும் சுஜித் கூடாரம் அமைக்கும் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றனர். மாணவர் சுஜித் நடைக் கட்டுப்பாடுகளில் குதிரைக்கு அளிக்கப்படும் பயிற்சி (Dressage) போட்டியில் வெண்கலம் வென்றுள்ளார். குதிரை தடை தாண்டும் போட்டிகளில் 16 வருடங்கள் கழித்து நமது இயக்ககத்தைச் சேர்ந்த ரூப் ஜோதி சர்மா என்பவர் விருது பெற்றது பெருமைக்குரிய விஷயமாகும். நமது மாணவர்கள் இயக்ககங்களுக்கிடையே நடைபெற்ற கப்பல் மாதிரி வடிவமைப்பு போட்டியில் 03 தங்கப்பதக்கங்களையும், 01 வெள்ளிப்பதக்கத்தையும் விமான மாதிரி வடிவமைப்பு போட்டியில் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

## 11.12 2015–16ம் ஆண்டிற்கான திட்டங்கள்

- சிறந்த முறையில் மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக பயிற்சி தத்துவத்தின் அடிப்படையில் கீழ்கண்ட பிரிவுகளில் தன்னிறைவு அடைதல்:–
  - பெருமளவில் அதிகபட்ச மாணவர்களை இராணுவத்தில் சேர தூண்டுதல்

- ❖ பாதுகாப்பான முறையில் பயிற்சி வழங்குதல்
- ❖ வாழ்வியல் ஆலோசனை மற்றும் ஆளுமைத் திறன் பயிற்சி
- ❖ அறிவு மெருகேற்றுதல் மற்றும் தகவல் தொடர்பு திறனை வளர்த்தல்
- ❖ விளையாட்டு மற்றும் சாகச செயல்களில் ஈடுபடுதல்

- ➢ சமூகக் கொடுமைகளை வேரறுக்கும் பொருட்டு தேசிய மாணவர் படை பயிற்சி அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கீழ்கண்ட நிகழ்ச்சிகளில் தீவிரமாக பங்கேற்பர்.
- ➢ பெண்குழந்தை சிசுவதைக்கு எதிராக பிரச்சாரம்
- ➢ எய்ட்ஸ்/எச்.ஐ.வி விழிப்புணர்வு பிரச்சாரம்
- ➢ தீண்டாமைக்கு எதிராக பிரச்சாரம்
- ➢ புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி
- ➢ வரதட்சணையை எதிர்த்து வாக்குறுதி
- ➢ இரத்ததான முகாம்
- ➢ மரம் நடுதல்
- ➢ புகையிலைக்கு எதிரான பிரச்சாரம்
- ➢ பிளாஸ்டிக்கிற்கு எதிரான பிரச்சாரம்
- ➢ தூய்மை இந்தியா திட்டம்
- ➢ சேமிப்பு குறித்த விழிப்புணர்வு
- ➢ யோகா பற்றிய விழிப்புணர்வு

- தீர மிக்க பிரதம மந்திரியின் ஜனவரி **2016**ஆம் ஆண்டிற்கான குடியரசு தின பதாகையை வெல்ல உறுதி பூண்டுள்ளது.
- **பயிற்சி அகாடமி –** மதுரை மாவட்டம் இடையபட்டி கிராமத்தில் தேசிய மாணவர் படைப் பயிற்சி அகாடமி அமைக்கும் வேலைகள் பொதுப்பணித்துறையால் மிக வேகமாக நடைபெற்று வருகிறது.

# படலம் – 12

## நாட்டு நலப்பணித் திட்டம்

### 12.1 முன்னுரை:

டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையிலான பல்கலைக்கழக மான்யக்குழு, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இடையே ஆரோக்கியமான தொடர்பை ஏற்படுத்தவும், கல்வி நிறுவனம் மற்றும் சமூகத்தின் இடையே ஆக்கப்பூர்வமான தொடர்பை ஏற்படுத்தும் வகையிலும் நாட்டு நலப்பணித் திட்டத்தை தன்னார்வ அடிப்படையில் கல்வி நிறுவனங்களில் அறிமுகப்படுத்த பரிந்துரைத்தது.

செப்டம்பர் 24, 1969ஆம் ஆண்டு மத்திய கல்வித்துறை அமைச்சர் முனைவர் வி.கே.ஆர்.வி.ராவ் அவர்கள் நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள 37 பல்கலைக்கழகங்களில் நாட்டு நலப்பணித் திட்டத்தை அறிமுகம் செய்து அதே நேரத்தில் இத்திட்டத்திற்கான ஒத்துழைப்பையும், உதவியையும் மாநில முதலமைச்சர்களிடம் கோரினார். நாட்டின் சுதந்திர இயக்கத்தில் இளைஞர்கள் பங்கேற்பதற்கு எழுச்சியூட்டிய, நாட்டின் ஒடுக்கப்பட்ட

கீழ்தட்டு மக்களின் சமூக மேம்பாட்டிற்காகவும் உழைத்த தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்களின் நூற்றாண்டில் நாட்டு நலப்பணித்திட்டம் தொடங்கப்பட்டது மிகவும் பொருத்தமான ஒன்றாகும்.

நாட்டு நலப்பணித்திட்டம் அது துவங்கப்பட்ட நாளான செப்டம்பர் 1969 முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென ஒரு மாணவத் தொண்டருக்கு முதலில் ரூ.120/– வீதம் செலவினம் வழங்கப்பட்டு அத்தொகையை மைய அரசும், மாநில அரசும் 7:5 என்ற விகிதத்தில், அதாவது மைய அரசு ரூ.70/– மாநில அரசு ரூ.50/– என்ற விகிதத்தில் முறையே பகிர்ந்து வழங்கி வந்தது. இந்த சரிசம விகிதமான நாட்டு நலப்பணித்திட்ட மானியத் தொகை, 2010–11ஆம் நிதியாண்டில், தொடர்பணிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூ. 160/–லிருந்து ரூ. 250/– ஆகவும், சிறப்பு முகாம் பணிகளுக்கு ஒரு மாணவருக்கு ரூ. 300/–லிருந்து ரூ. 450/–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. பணவீக்க விகிதத்தை கருத்தில் கொண்டு தற்போது தொடர்பணிகளுக்கும் சிறப்பு முகாம்களுக்கான தொகையில் திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 12.2 குறிக்கோள்

நாட்டு நலப்பணித் திட்டத்தின் குறிக்கோள் வாசகம் "Not Me But You" என்பதாகும். இவ்வாசகம் ஜனநாயக வாழ்க்கை சாராம்சத்தையும், தன்னலமற்ற சேவையின் தேவையை உயர்த்தியும் பிற மனிதரின் கருத்தினை பாராட்டியும், சக மனிதர்களுக்குள் பரிவினை காண்பித்தலையும், பிரதிபலிக்கும் விதமாக உள்ளதாகும். மேலும் இக்குறிக்கோள் ஒரு தனிமனிதனின் நலன் முற்றிலுமாக சமூக நலத்தையே சார்ந்தது என்பதையும் அடிக்கோடிட்டு காட்டுகிறது. எனவே, நாட்டு நலப்பணித் திட்டத்தின் அன்றாட நிகழ்ச்சிகளில் இக்குறிக்கோளை செயல்படுத்துவது நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கமாக உள்ளது.

## 12.3 தேசிய நாட்டு நலப்பணித்திட்ட தினம்

நாட்டு நலப்பணித்திட்டம் **1969**ஆம் ஆண்டு செப்டம்பர் **24**ஆம் நாள் நமது தேசத்தந்தையின் நூற்றாண்டில் முறையாக துவங்கப்பட்டது. எனவே, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் **24**ஆம் நாள் பொருத்தமான நிகழ்ச்சிகள் மற்றும் செயல்களுடன் நாட்டு நலப்பணித்திட்ட தினமாக கொண்டாடப்படுகிறது.

**12.4 நாட்டு நலப்பணித்திட்ட நிகழ்ச்சிகளின் வகைபாடுகள்:**

நாட்டு நலப்பணித்திட்ட நிகழ்ச்சிகள் இருபிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன (i) தொடர்பணி செயல்பாடுகள் (ii) சிறப்பு முகாம் பணிகள்.

**12.4.1 தொடர் பணிகள் செயல்பாடுகள்:**

இத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில், பள்ளி / கல்லூரி வளாகங்களில், நகர்புற குடிசை பகுதிகளில் வார இறுதி நாட்களில் அல்லது பள்ளி / கல்லூரி நேரம் முடிந்த பின்னர் பல்வேறு வகையான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**12.4.2 சிறப்பு முகாம் பணிகள்:**

இத்திட்டத்தின் கீழ் தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில், நகர்புற குடிசை பகுதிகளில் உள்ளூர் மக்களை ஈடுபடுத்தி சில குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள விடுமுறை நாட்களில் 7 நாட்கள் முகாம் நடத்தப்படுகின்றன.

**12.5 <u>நாட்டு நலப்பணித் திட்டத்தின் செயல்பாடுகள்:</u>**

நாட்டு நலப்பணித் திட்டத்தின் செயல்பாடுகள் தன்னார்வ மாணவர்களின் ஆளுமைப் பண்பை வளர்ப்பது நோக்கமாகும். இதற்கு எடுத்துக்காட்டாக, தலைமைப் பண்பு

வளர்த்தல், யோகா மற்றும் தியானம், வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல், மென்திறன் வளர்த்தல், பேரிடர் மேலாண்மை, முதலுதவிப் பயிற்சி, சுற்றுச்சூழல் மேம்பாடு, சாலைப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பாக வாகனம் ஓட்டுதல், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கு மீண்டும் படிப்பைத் தொடர உதவி செய்தல், குருதிக் கொடை, குருதி வகைப்படுத்தல், குருதிக் கொடையாளர் பட்டியல் தயாரிக்கும் பணி ஆகிய செயல்பாடுகள் தேவை மற்றும் முன்னுரிமைக்கேற்றபடி நாட்டு நலப்பணித் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சுகாதார மருத்துவ முகாம்கள், தொழுநோய் ஒழித்தல், கண் தானம், பல் பராமரித்தல், மார்பகப் புற்றுநோய் ஒழிப்பு, இதயம் பராமரிப்பு, தாய்சேய் நலன், எய்ட்ஸ் விழிப்புணர்வு மற்றும் பொது மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. குடிமை உணர்வினை ஏற்படுத்தி சாலை விதிகளை கடைபிடிப்பதற்கான சிறப்பு திட்டங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

ஓசோன் படலத்தைப் பாதுகாத்திட, இயற்கை சூழ்நிலையை மேம்படுத்தும் வகையில் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இது தவிர சமூக காடுகள் திட்டத்தின் கீழ் மாதிரி காடுகள் மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் மரக்கன்று

நடுதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிளாஸ்டிக் மற்றும் பாலித்தீன் ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பைத் தோற்றுவித்தல் ஆகியவை இதர திட்டங்களாகும்.

சிறப்பு முகாம்களின்போது, மாணவத் தொண்டர்கள் தத்தெடுத்த கிராமங்களில் உள்ளூர் இளைஞர்களுடன் இணைந்து நிரந்தர சொத்துக்களை உருவாக்க பொது சேவை தேவைகளான கழிப்பிடம் கட்டுதல், தண்ணீர் தொட்டிகள், சமூகக் கூடங்கள், சுற்றுச்சுவர் கட்டுதல், விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல் மற்றும் சாலை அமைத்தல் போன்ற பணிகளை மாணவத் தொண்டர்கள் செய்து வருகின்றனர்.

**12.6 சுழல் நிதி:**

முதலாமாண்டு கல்லூரியில் சேரும் அனைத்து மாணவர்களிடமிருந்து சுழல் நிதியாக ரூ.10/– வசூலிக்கப்படுகிறது. இத்தொகையில் ரூ.5/– அந்தந்த கல்லூரி நிறுவனத்திற்கும், ரூ.3/– அது சார்ந்த பல்கலைக்கழகத்திற்கும், ரூ.2/– மாநில நாட்டு நலப்பணித்திட்ட குழுமத்திற்கும் வழங்கப்படுகிறது. நாட்டு நலப்பணித்திட்டக் குழுமத்தின் சுழல் நிதி கணக்கில் 31.03.2015 அன்று வரை ரூ.40,94,859/– இருப்பில் உள்ளது.

இத்தொகையிலிருந்து நாட்டு நலப்பணித் திட்டம் தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்துதல், நினைவுப்பரிசு வாங்குதல், நாட்டு நலப்பணித்திட்ட மாநில குழுமத்தில் உள்ள வாகனம் பராமரித்தல், அலுவலகப் பராமரிப்பு, இதர செலவினங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

## 12.7 மே 2011ஆம் ஆண்டிலிருந்து நாட்டு நலப்பணித் திட்டம் மூலமாக நிறைவேற்றப்பட்ட சாதனைகள்

### 12.7.1 குடியரசுதின அணிவகுப்பு :

புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் கலந்து கொள்ள பல்கலைக்கழக அளவிலும், மாநில அளவிலும் விருப்பார்வத் தொண்டர்கள் தேர்வு மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல் முறை. மாநில அளவில் 60 விருப்பார்வத் தொண்டர்கள் தேர்வு செய்யப்பட்டு கேரள மாநிலம், திருச்சூரில் நடைபெற்ற பயிற்சி அணிவகுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டனர். மேற்காண் 60 விருப்பார்வ தொண்டர்களில் 12 விருப்பார்வத் தொண்டர்கள் தேர்வு செய்யப்பட்டு உரிய சீருடை வழங்கப்பட்டு புதுதில்லியில் நடைபெற்ற குடியரசுதின அணிவகுப்பில் கலந்துக்கொள்ள அனுப்பப்பட்டனர்.

**26–01–2015** அன்று சென்னை மெரினாவில் நடைபெற்ற குடியரசு தினவிழா கொண்டாட்ட அணிவகுப்பில் நாட்டு நலப்பணித்திட்ட படைபிரிவினர் கலந்து கொண்டனர். 60 விருப்பார்வத் தொண்டர்களுடன் மாநில குடியரசு தினவிழா கொண்டாட்ட அணிவகுப்பில் நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் பங்கு பெற்றது தமிழ்நாடு நாட்டு நலப்பணித்திட்ட சரித்திரத்தில் இதுவே முதன்முறையாகும்.

சென்னையில் குடியரசுதினவிழா கொண்டாட்ட அணிவகுப்பில் கலந்துக் கொள்வதற்கான தேர்வு இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக் கழக அளவில் முதற்கட்டமாகவும், மாநில அளவில் இரண்டாம் கட்டமாகவும் நடைபெற்றது. இத்தேர்வுகள் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. பின்னர் முறையான பயிற்சிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் 4 பயிற்றுநர்கள் மூலம் 10 நாட்கள் மாணவத் தொண்டர்களுக்கு அளிக்கப்பட்டது.

**12.7.2 இந்திராகாந்தி நாட்டு நலப்பணித்திட்ட விருது :**

**2011–12, 2012–13, 2013–14** ஆம் ஆண்டிற்கான நாட்டு நலப்பணித் திட்டத்திற்கான இந்திராகாந்தி நாட்டு

நலப்பணித்திட்ட விருது தமிழகத்தை சார்ந்த முறையே 4, 4 மற்றும் 3 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

### 12.7.3 மாநில நாட்டு நலப்பணித் திட்ட விருது

தமிழ்நாடு அரசு நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், திட்ட அலுவலர் மற்றும் மாணவத் தொண்டர்களின் சிறந்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள் 1991ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன.

2010–11, 2011–12 மற்றும் 2012–13ஆம் ஆண்டுகளுக்கான மாநில நாட்டு நலப்பணித்திட்ட விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. அவ்விழாவில் 43 சிறந்த நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்களுக்கும், 77 சிறந்த விருப்பார்வத் தொண்டர்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விருது திட்ட அலுவலர்களுக்கு ரூ.3,000/– ரொக்கப்பரிசும், சிறந்த விருப்பார்வத் தொண்டர்களுக்கு ரூ.2,000/– ரொக்கப்பரிசு வீதமும் மற்றும் சான்றிதழ், நினைவுப்பரிசு ஆகியவை வழங்கப்பட்டன. இதற்கான செலவினம் நாட்டு நலப்பணித்திட்ட சுழல் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட 43 சிறந்த திட்ட அலுவலர்களில் 2010–11, 2011–12 மற்றும் 2012–13ஆம் கல்வியாண்டுகளில் முறையே 13, 15 மற்றும் 15 சிறந்த திட்ட அலுவலர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட 77 சிறந்த விருப்பார்வத் தொண்டர்களில் 2010–11, 2011–12 மற்றும் 2012–13ஆம் கல்வியாண்டுகளில் முறையே 35, 17 மற்றும் 25 சிறந்த விருப்பார்வத் தொண்டர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

### 12.7.4 தேசிய ஒருமைப்பாட்டு முகாம்

தேசிய ஒருமைப்பாட்டு முகாம் கர்நாடக மாநிலம் மங்களூர் பல்கலைக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இம்முகாமில் தமிழ்நாடு நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் 10 விருப்பார்வத் தொண்டர்களும், 1 நாட்டு நலப்பணித்திட்ட அலுவலரும் பங்கு பெற அனுமதிக்கப்பட்டனர்.

## 12.8 2015–16 ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்:

நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அளவிலான நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்களுக்கான (1) விளையாட்டு

போட்டிகள் (2) கலைநிகழ்ச்சிகள் (3) தலைமை பண்பினை வளர்த்தல் (4) சாகச நிகழ்ச்சிகள் (5) உணவு திருவிழா போன்றவை இந்த கல்வியாண்டு முதல் (2015–16) நடத்தப்படவுள்ளன.

# படலம் – 13

# தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

## 13.1 முன்னுரை

இந்தியாவிலேயே உடற்கல்வி மற்றும் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் விளையாட்டுக்கென முதன்முதலாக தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் மேலான எண்ணத்தால் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் மேலக்கோட்டையூர் கிராமத்தில் 125 ஏக்கர் பரந்த நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் ஏரி மற்றும் சிறிய குன்றினால் சூழப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்தில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் கட்டப்பட்டுள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் கல்விப்பணிகள் 2006 - 2007 ம் கல்வியாண்டில் தொடங்கப்பட்டது. தற்பொழுது 56 ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் இப்பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார்கள்.

## 13.2 தொலை நோக்குப்பார்வை

ஒன்று சேர்ந்த உடல், மனம் மற்றும் ஆன்மாவின் மூலம் மனித வளத்தை முழுமையாக ஒருங்கிணைத்து கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி, அளப்பரிய செயல்முறை மற்றும் புதிய திட்டங்கள் மூலம் உடற்கல்வி மற்றும் விளையாட்டில் செம்மை நிலையினை அடைவதற்கான செயல்களில் ஈடுபடுவதாகும்.

## 13.3 குறிக்கோள்

1. நவீன ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்தி, ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் வெளியீடுகள் மூலமாக அறிவுசார் செயல்களுக்குப் பங்களித்து, கண்டுபிடிப்புகளை ஆசிரியர்கள், வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்குக் கொண்டு செல்லுதல்.
2. பொதுவான நோக்கம் மற்றும் விருப்பம் உடைய பொருளில் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் உள்ள பயிற்சி உத்திகளை மறுசீரமைத்து கூர்மைபடுத்த ஆராய்ச்சி முடிவுகளைச் செயல்படுத்த உதவுதல்.
3. தேசிய மற்றும் சர்வதேச அளவிலான சிறப்பு முகமைகள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்பு மற்றும் இணைப்புகளை ஏற்படுத்தி உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் ஏற்பட்டுள்ள சமீபத்திய முன்னேற்றங்களுடன் இணையாகச் செல்லுதல்.
4. தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளுக்காக பல்வேறு விளையாட்டுகளில் மாநில மற்றும் தேசிய அளவில் பயிற்சி முகாம்கள்

நடத்த உறுதுணையாக இருந்து உதவி செய்து திறனாளர்களைக் கண்டறிந்து, வளர்த்து ஆயத்தப்படுத்துதல்.

## 13.4 கல்வித்திட்டங்கள்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஐந்து துறைகள் முறையே உடற்கல்வித் துறை, யோகா துறை, பயிற்சி உடற்செயலியல் மற்றும் உயிர் இயந்திரவியல் துறை, விளையாட்டு நிர்வாகவியல், உளவியல் மற்றும் சமூகவியல் துறை, மற்றும் நவீன விளையாட்டுப்பயிற்சி மற்றும் தொழில் நுட்பத் துறை இயங்குகின்றன. இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 11 உறுப்புக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் இரண்டு தன்னாட்சி கல்லூரிகள், ஒரு அரசு உதவிப்பெறும் கல்லூரி மற்றும் ஏனைய கல்லூரிகள் சுயநிதிக் கல்லூரிகள் ஆகும். இப்பல்கலைக்கழக துறைகள் மற்றும் உறுப்புக் கல்லூரிகள் பி.ப்பி.இ, பி.ப்பி.எட், எம்.பி.எட், பி.எஸ்ஸி, எம். எஸ்ஸி, எம்.பி.ஏ, எம்.டெக், எம்.பில் மற்றும் முனைவர் பட்டப் படிப்புகள் போன்ற இளங்கலை, முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் ஆகியவைகளை வழங்குகின்றன.

இப்பல்கலைக்கழகம் 240 முனைவர் மற்றும் 81 நிறைஞர்களை தனது பதிவேட்டில் கொண்டுள்ளது. மேலும் இப்பல்கலைக்கழகத் துறையில் 355 மாணவர்கள் பல்வேறு

இளங்கலை மற்றும் முதுகலை படிப்புகளில் பயின்று வருகின்றனர். இதைத்தவிர, 1691 மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தின் 11 உறுப்புக் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர்.

இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் 2007 – 2008 ஆம் கல்வியாண்டு துவங்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் தொலைதூரக்கல்வி மூலம் 102 புதுமையான மற்றும் வேலை வாய்ப்புக்கான பாடத் திட்டங்களை வழங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தில் உள்ள 141 படிப்பு மையங்களின் மூலம் பல்வேறு படிப்புகளுக்காக 1852 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர்.

## 13.5 விருப்பம் சார்ந்த 'கிரெடிட்' முறை மற்றும் சீரான பாடத்திட்டம்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஐந்து துறைகளும் மூன்று துணைத்துறைகளும் மற்றும் 11 உறுப்புக்கல்லூரிகளும் இளங்கலை, முதுகலை, எம்.பில், பி.எச்.டி மற்றும் முதுநிலை பட்டய படிப்புகளை வழங்குகின்றன. மேற்கண்ட துறைகள்

மற்றும் கல்லூரிகளில் பல்வேறு படிப்புகளுக்கு சீரான பாடத்திட்டம் மற்றும் விருப்பம் சார்ந்த ‘கிரெடிட்’ முறை பின்பற்றப்பட்டு வருகின்றன.

### 13.5.1 கிராமப்புற பயிற்சி முகாம் திட்டம்

கிராமப்புற பயிற்சி முகாம் திட்டம் இப்பல்கலைக்கழகத்தில் நேரடி சேர்க்கையின் மூலம் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கிராமப்புற பயிற்சி முகாம் திட்டத்தின் ஒரு பகுதியாக நேரடி சேர்க்கையின் மூலம் பயிலும் ஒவ்வொரு மாணவரும் ஒரு கிராமத்தில் நான்கு நாட்கள் முகாமிட்டு ஊரக வளர்ச்சிக்காக சுகாதார விழிப்புணர்வு பிரச்சாரம், எழுத்தறிவு திட்டங்கள், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் பாதுகாப்பான குடிநீர் தொடர்பான விழிப்புணர்வு திட்டங்கள், விளையாட்டு பொழுதுபோக்கு போன்ற சேவைச் செயல்பாடுகளைச் செய்ய வேண்டும். அனைத்து படிப்புகளுக்கும், விருப்பம் சார்ந்த ‘கிரெடிட்’ முறையின் கீழ் இரண்டு புள்ளிகள் கிராமப்புற பயிற்சி முகாம் திட்டத்திற்கு வழங்கப்படுகிறது.

### 13.5.2 பல்கலைக்கழகம் மற்றும் உறுப்புக்கல்லூரிகளில் நாட்டு நலப்பணித்திட்டஅலகுகள்

இப்பல்கலைக்கழகம் மற்றும் இதன் உறுப்புக்கல்லூரிகளில் நாட்டுநலப்பணித்திட்ட அலகுகள்

துவங்கப்பட்டுள்ளன. நாட்டு நலப்பணித் திட்ட அலகுகள் மூலமாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 13.5.3 வேலைவாய்ப்பு சேவைகள்

இப்பல்கலைக்கழகம் மற்றும் உறுப்புக்கல்லூரி களிலிருந்து பட்டம் பெற்று வரும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும், பொருத்தமான வேலையை வழங்கவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், நட்சத்திர உணவு விடுதிகள், மருத்துவமனைகள், உடற்பயிற்சி மையங்கள் மற்றும் தேவையுள்ள பன்னாட்டு நிறுவனங்கள், மாணவர்கள் பட்டம் பெற்றவுடன் வேலைவாய்ப்பு வழங்கும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பல பெருநிறுவனங்கள் பொருத்தமான தகுதியுடைய மாணவர்களை அவர்களது நிறுவனங்களுக்காக வளாக நேர்முக தேர்வு நடத்தி தேர்வு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இப்பல்கலைக்கழகம் மற்றும் உறுப்புக்கல்லூரிகளின் நவீன செயல் திட்டம் பெரு நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.

## 13.6 உள்கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்திலுள்ள உள்கட்டமைப்பு வசதிகளாவன: நிர்வாகக் கட்டிடம், கல்வி வளாகம், கனிணி மையம், மாணவ மாணவியர்களுக்கான தங்கும் விடுதிகள், பல்நோக்குக்கூடம், ஊழியர்களுக்கான குடியிருப்புகள், சுற்றுச்சுவர், உயர்மின்னழுத்த மின்மாற்றி, தெரு விளக்குகள். மேலும் கால்பந்து, வளைகோல்பந்து, மட்டைப்பந்து, கைப்பந்து, கையுந்துப்பந்து போன்றவற்றிற்கான விளையாட்டு மைதான வசதிகள் மற்றும் 400 மீட்டர் ஓடுதளம் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தில் உள்ளன. ஏனைய விளையாட்டு மைதானங்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

### 13.7 பல்கலைக்கழக சுகாதாரமையம்

மனித இனத்திற்கு சுகாதாரம் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஆரோக்கியமானது மாணவர்கள் மற்றும் தடகள வீரர்கள் தங்கள் குறிக்கோளை அடைவதற்கு அவர்களது செயல்திறனை உடல், மன மற்றும் செயல்களில் சிறப்பாகச் செயல்படுத்தி மேம்படுத்த வைக்கிறது. விளையாட்டு இயன்முறை மருத்துவம் என்பது தடகள பயிற்சியில் ஏற்படும் காயங்களைத் தவிர்த்தல், கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தல் போன்றவை

உள்ளடக்கிய விளையாட்டு மருத்துவத்தின் ஒரு பகுதியாகும். மாணவர்கள் மற்றும் தடகள வீரர்களுக்கு விளையாட்டு இயன்முறை மருத்துவத்தின் மூலம் சிறப்பு மருத்துவப் பராமரிப்பு அளிப்பதே இம்மையத்தின் நோக்கமாகும். கல்வி, மருத்துவம் சார்ந்த அறிவு மற்றும் உடற்கல்வியியல் மற்றும் இயன்முறை மருத்துவ வல்லுனர்களுக்கு தேவையான திறன்களை மேம்படுத்தவும் சான்றாதார அடிப்படையில் பிரச்சனைகளைத் தீர்த்தல் மற்றும் விளையாட்டு இயன்முறை மருத்துவத்தில் மருத்துவம் சார்ந்த அணுகுமுறையை அளிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு இம்மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையமானது பல்வேறு பிரிவுகளில் பயிற்சி, இயன்முறை மேலாண்மையில் சிறப்பு நிலை மற்றும் அனைத்து வயது மற்றும் தகுதிக்கு உட்பட்ட தடகள வீரர்களின் செயல்திறனை உயர்த்துவதற்கு தொடர்ந்து வலியுறுத்துகிறது.

### 13.8 பல்கலைக்கழக நூலகம்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக நூலகமானது பல்வேறு துறைகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குகிறது. இம்மைய நூலகமானது சம்பந்தப்பட்டதுறைகளில் நவீனமான சமீபத்திய தகவல்களை

அளித்து உதவும் பொருட்டு அநேக எண்ணிக்கையிலான புத்தகங்கள் வாங்குவதற்கு திட்டமிட்டுள்ளது. புத்தகங்கள், மேற்கோள் புத்தகங்கள், ஆராய்ச்சி கட்டுரைகள், பருவ இதழ்கள், கலைக்களஞ்சியம், இதழ்கள் மற்றும் கல்விசார்ந்த குறுந்தகடுகள் போன்ற நூலகப் புத்தகங்களின் தொகுதிகள் உள்ளன.

## 13.9 தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை நிறுவுதலில் 2011 முதல் தமிழக அரசின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள்

**தமிழக அரசு கீழ்கண்டவைகளை ஒப்பளிப்பு செய்துள்ளது.**

- உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்காக ஒரு தொகுப்பு நிதிக்கான முதல் தவணைத் தொகையாக ரூ. **2.49** கோடி
- விளையாட்டு அறிவியல் மையம் அமைப்பதற்காக ரூ.**2.20** கோடி
- பல்நோக்கு ஊடக வகுப்பறை அமைப்பதற்கும், உடல் செயல்பாடு மற்றும் உயிர் இயந்திரவியல் சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கும் ரூ. **36.88** இலட்சம். கட்டுமானப் பணிகள் முடிவு பெற்று **10.02.2014** ம் நாளன்று திறந்து வைக்கப்பட்டது.
- பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் அமைப்பதற்காக ரூ.**40.00** இலட்சம் மற்றும் தற்போதுள்ள விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்காக ரூ.**35.00** இலட்சம்


- பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம், நூலகம், ஆய்வுக்கூடம், கூட்ட அரங்கம் மற்றும் தியானக்கூடம் ஆகியவற்றை ஒரே கட்டிடத்தில் அமைப்பதற்காக ரூ.**16.03** கோடி
- காணொலி, செயல்திறன் மதிப்பீடு மற்றும் உடற்பயிற்சி கூடத்தில் உடற்பயிற்சி செய்ய உதவும் பல்நோக்கு ஊடகம் அடங்கிய விளையாட்டு தொழில்நுட்ப ஆராய்ச்சி ஆய்வுக்கூடம் நிறுவிட ரூ.**48.00** இலட்சம்
- முகாம் மையம் அமைத்திட ரூ. **43.00** இலட்சம்
- தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திலிருந்து அறைகலன்கள் வாங்குவதற்காக ரூ. **45.00** இலட்சம்
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் இணைப்புச்சாலைகள் அமைப்பதற்காக ரூ. **191.10** இலட்சம்

**2006 முதல் 2015 வரையிலான கல்வியாண்டுகளுக்கான மாணவர்கள் சேர்க்கை விவரம்**

| வரிசை எண் | கல்வியாண்டு | மாணவர்கள் சேர்க்கை | | |
|---|---|---|---|---|
| | | பல்கலைக்கழகத் துறைகள் | உறுப்புக் கல்லூரிகள் | மொத்தம் |
| 1 | 2006- 2007 | 10 | 623 | 633 |
| 2 | 2007-2008 | 66 | 732 | 798 |
| 3 | 2008-2009 | 149 | 1040 | 1189 |
| 4 | 2009-2010 | 158 | 975 | 1133 |
| 5 | 2010-2011 | 194 | 966 | 1160 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 2011-2012 | 203 | 1314 | 1517 |
| 7 | 2012-2013 | 179 | 1406 | 1585 |
| 8 | 2013-2014 | 202 | 1554 | 1756 |
| 9 | 2014-2015 | 355 | 1691 | 2046 |

**2006 முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான கல்வியாண்டுகளுக்கான மாணவர் சேர்க்கை விவரம்**




## 13.10 2015–2016 ஆம் ஆண்டில செயல்படுத்தப்பட இருக்கும் திட்டம்

- செயற்கை இழையிலான 400 மீட்டர் ஓடு தளம் அமைத்தல்.
- பல்கலைக்கழக துறைகள் மற்றும் அதன் உறுப்புக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் காப்பீட்டுத் திட்டம் அறிமுகம் செய்தல்.
- பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் உடல் மற்றும் உடலியல் சோதனை மூலம் சுகாதார அட்டை அறிமுகம் செய்தல்.
- பல்கலைக்கழகத்தில் மின் ஆளுமைக்காக மைய சேவை மையம் மற்றும் தகவல் சேமிப்பு முறை ஆகியவை நிறுவ முன்மொழிதல்.
- சுற்றுச் சூழலுக்கு உகந்த தாவரங்களை நடுவதன் மூலம் நாற்றுப்பண்ணையை ஏற்படுத்துதல்.
- பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் விளையாட்டு வீரர்களுக்கான ஊக்க மருந்து விழிப்புணர்வு திட்டம்.
- பல்கலைக்கழக வளாகத்தில் கம்பியில்லா தொடர்பு (Wi-fi) வசதி அளித்தல்.
- விளையாட்டு செயல்திறன் பகுப்பு ஆய்வகம் அமைத்தல்.
- விளையாட்டு அறிவியல் மையத்திற்காக உபகரணங்களை வாங்குதல்.
- பல்வேறு துறைகளில் தேசிய அளவிலான பயிற்சிபட்டறை / கருத்தரங்கு/ மாநாடு / வினாடி வினா போட்டிகளை நடத்துதல்.

மருத்துவர் எஸ். சுந்தரராஜ்,
விளையாட்டுகள் மற்றும்
இளைஞர் நலத்துறை
அமைச்சர்.

## பின் இணைப்பு

## தமிழ்நாட்டில் தற்போதுள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

| வ. எண். | மாவட்டம் | விளையாட்டு வசதிகள் |
|---|---|---|
| 1 | அரியலூர் | ➢ 400 மீ. தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ வளைகோல்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1<br>➢ டென்னிஸ் ஆடுகளம் 1 (செயற்கை இழை மின்னொளி வசதியுடன்)<br>➢ உடற்பயிற்சி கூடம் 1<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ ஸ்கேட்டிங் வளையம்<br>➢ விளையாட்டு விடுதி (மாணவர்)<br><br>**சிறு விளையாட்டரங்கம், ஜெயங்கொண்டம் வட்டம்:**<br>➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 |
| 2 | சென்னை | **ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு:**<br><br>➢ 40,000 இருக்கை வசதி<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ 400 மீ 8–வரிசை செயற்கை இழை தடகள ஓடுபாதை (மின்னொளி வசதியுடன்)<br>➢ 600 மீ. உள்ளரங்க பயிற்சி ஓடுதளம் (குளிர்சாதன வசதி)<br>➢ ஜுடோ அரங்கம்<br>➢ செஸ் அரங்கம்<br>➢ கேரம் அரங்கம்<br>➢ பளுதூக்கும் அரங்கம்<br>➢ மேசைப்பந்து அரங்கம் |

| | | |
|---|---|---|
| | | ➢ குத்துச்சண்டை அரங்கம்<br>➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் 2<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 3 (களிமண் தரை) ( 1 மின்னொளி வசதியுடன்)<br>➢ எறிபந்து ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ 100 மீ. செயற்கை இழை பயிற்சி ஓடுதளம்<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1<br>➢ குளிர்சாதன உடற்பயிற்சிக் கூடம்<br>➢ இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டு விடுதிகள்<br>➢ கல்லூரி மாணவர்களுக்கான சிறப்புநிலை விளையாட்டு விடுதி<br>➢ மாணவர்களுக்கான முதன்மை நிலை மையம்<br>➢ ஊடக அரங்கம்<br>➢ மாநில விளையாட்டு உதவும் மையம்<br>➢ தங்கும் விடுதி மையம்<br><br>**பயிற்சி ஓடுதள பகுதி:**<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ 400 மீ. 8 பாதை செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்) |
| | | **பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், பெரியமேடு.**<br><br>➢ மரத்தாலான குளிர்சாதன வசதி கொண்ட 8000 இருக்கை வசதி கொண்ட உள்ளரங்கம் (கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, இறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல், செஸ், கேரம், கைப்பந்து மற்றும் விளையாட்டு அல்லாத நிகழ்வுகள்)<br>➢ ஸ்கேட்டிங் வளையம் (மின்னொளியுடன்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட் தரை, மின்னொளியுடன்)<br>➢ கைப்பந்து ஆடுகளம்<br>➢ வாள்சண்டை அரங்கம் (மின்னொளியுடன்)<br>➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்<br>➢ மாணவியருக்கான விளையாட்டு விடுதி<br>➢ மாணவியருக்கான சிறப்புநிலை விளையாட்டு மையம் |

| | | |
|---|---|---|
| | | ➢ மாணவியருக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் |
| | | **மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல் பந்து விளையாட்டரங்கம், எழும்பூர்:**<br><br>➢ 8670 இருக்கை வசதி<br>➢ செயற்கை இழை வளைகோல்பந்து மைதானம்<br>➢ 30x15 மீ. செயற்கை இழை பயிற்சி ஆடுகளம்<br>➢ வண்ணத் தொலைக்காட்சி ஒளிபரப்பிற்கேற்ற மின்னொளி அமைப்பு<br>➢ உடற்பயிற்சி கூடம்<br>➢ டென்னிஸ் ஆடுகளம் 4(களிமண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 3 (மின்னொளி வசதியுடன்)<br>➢ பல்நோக்கு கலந்தாய்வு அரங்கம்<br>➢ தங்குமிட வசதிகள்<br>➢ தங்குமிட மையம்<br><br>**நீச்சல்குள வளாகம், வேளச்சேரி சாலை, கிண்டி.**<br><br>➢ 4000 இருக்கை வசதி<br>➢ 8–வரிசை பன்னாட்டு பந்தய நீச்சல்குளம் (50மீx25மீ)<br>➢ குதித்தல் நீச்சல்குளம் (18மீx25மீ)<br>➢ பயிற்சி நீச்சல்குளம் (25மீx25மீ)<br>➢ உடற்பயிற்சி கூடம்<br>➢ கூட்ட அரங்கம் (50 நபர்கள்)<br>➢ ஜிம்னாஸ்டிக் உள்ளரங்கம்<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் |
| | | **டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம்.**<br><br>➢ 7000 இருக்கை வசதி<br>➢ ஒரு மைய செயற்கை இழை ஆடுகளம்<br>➢ டென்னிஸ் செயற்கை இழை ஆடுகளம் 6<br>➢ மின்னொளி வசதி (1 மைய ஆடுகளம் மற்றும் 6 பயிற்சி ஆடுகளம்)<br>➢ உடற்பயிற்சி கூடம்<br>➢ தங்குமிட வசதிகள்<br>➢ கூட்ட அரங்கம் (100 நபர்கள்) |

| | | |
|---|---|---|
| | | **நேரு பூங்கா விளையாட்டு வளாகம்**<br><br>➢ உலகத்தர ஸ்குவாஷ் ஆடுகளம் 8 (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகம்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகம்)<br>➢ 400மீ தடகள ஓடுதளம்<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ டென்னிஸ் ஆடுகளம் 2 (செயற்கைஇழை)<br>➢ இறகுப்பந்து உள்ளரங்க ஆடுகளம் 3 (மரத்தளம்)<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம்<br>➢ தங்கும் விடுதி மையம் |
| | | **அண்ணா நீச்சல்குளம், மெரினா.**<br><br>➢ நீச்சல்குளம் (50மீ x25மீ)<br>➢ நீச்சல்குளம் (25மீx15மீ) |
| | | **ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி மைதானம்**<br><br>➢ வளைகோல் பந்து மைதானம் (செயற்கை இழை ) (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ. புரிந்துணர்வுடன்)<br>➢ விளையாட்டு வீரர்கள் உடைமாற்றும் அறை.<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர் விளையாட்டு விடுதி |
| | | **சென்னை மாவட்டப் பிரிவு, செனாய் நகர், சென்னை–600 030**<br><br>➢ குறுந்தூர நீச்சல் குளம்<br>➢ நீச்சல் குளம் (36மீx18மீ)<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மரத்தளம்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மின்னொளி வசதியுடன்) |
| 3 | கோயம்புத்தூர் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (செயற்கை இழை)<br>➢ கால்பந்து மைதானம் 1 (உயர் கோபுர மின்னொளி வசதியுடன்) (புல்தரை)<br>➢ உடற்பயிற்சி கூடம் 1 |

| | | |
|---|---|---|
| | | ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர் விளையாட்டு விடுதி |
| 4 | கடலூர் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (கரித்தூள்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ வளைகோல்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்)<br>➢ கபாடி ஆடுகளம் 2 (களிமண்)<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ சிமெண்ட் நடைபாதை 1200 மீ<br>➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் 1<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 2<br>➢ கிரிக்கெட் ஆடுகளம்<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 3 (மரத்தரை)<br>➢ ஸ்குவாஷ் ஆடுகளம் 1<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர் விளையாட்டு விடுதி |
| | | **சிறு விளையாட்டரங்கம், விருத்தாச்சலம் தாலுகா**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (மண்)<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1<br>➢ எறிபந்து ஆடுகளம் |

| | | |
|---|---|---|
| 5 | தருமபுரி | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (களி மண்)<br>➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ குத்துச்சண்டை வளையம் 1 (சிமண்ட்)<br>➢ உடற்பயிற்சி கூடம் 1<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 1 (மரத்தரை மின்னொளியுடன்)<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 4 (மரத்தரை மின்னொளியுடன்)<br>➢ ரோலர் ஸ்கேட்டிங் வளையம் (சிமெண்ட்)<br>➢ கபாடி ஆடுகளம் (களிமண்)<br>➢ கோ கோ ஆடுகளம் (களிமண்)<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி<br><br>**சிறு விளையாட்டரங்கம், அரூர்:**<br><br>➢ கூடைப்பந்து ஆடுகளம் (சிமெண்ட்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம்(களிமண்) |
| 6 | திண்டுக்கல் | ➢ 400மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மற்றும் மின்னொளி)<br>➢ பூப்பந்து ஆடுகளம் 2<br>➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் 5 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கோ கோ ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கபாடி ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ கால்பந்து / வளைகோல்பந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி<br>**SDAT மலைக்கோட்டை மாரியம்மன்கோவில் மைதானம்,** |

| | | |
|---|---|---|
| | | **திண்டுக்கல்:**<br><br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (மின்னொளி)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் 4<br><br>**SDAT என்.ஜி.ஓ. காலனி மைதானம், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்:**<br><br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ இறகுப்பந்து ஆடுகளம்<br>➢ சிறு உடற்பயிற்சி கூடம் |
| | | **சிறு விளையாட்டரங்கம், நிலக்கோட்டை தாலுகா:**<br><br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br><br>**சிறு விளையாட்டரங்கம், நத்தம்:**<br><br>➢ 200 மீ. தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 |
| 7 | ஈரோடு | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (மண்) (1 மின்னொளி)<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ உடற்பயிற்சி கூடம் 1<br>➢ ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் கரட்டுப்பாளையம் 1 |

| | | |
|---|---|---|
| | | ➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி பாரதி வித்யா பவன், திண்டல்<br>➢ மாணவியருக்கான சிறப்புநிலை விளையாட்டு மையம் |
| 8 | காஞ்சிபு ரம் | ➢ 400மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் (புல்தரை)<br>➢ வளைகோல் பந்து மைதானம் (மண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 3 (மண்) (1 மின்னொளி)<br>➢ குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்)<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 2 (மின்னொளியுடன்)<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1<br>➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் 3 (மண்)<br>➢ மேசைப்பந்து ஆடுகளம்<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம்<br>➢ வாள்சண்டை கூடம்<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம்<br>➢ வளைப்பந்து ஆடுகளம் 1 |
| 9 | கன்னி யாகுமரி | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் (புல்தரை)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (மின்னொளியுடன்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ குத்துச்சண்டை வளையம் 1<br>➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி |
| 10 | கரூர் | ➢ 400மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் (புல்தரை)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்) |

| | | |
|---|---|---|
| | | ➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ கபாடி ஆடுகளம் 1 (மண்)<br>➢ கோ கோ ஆடுகளம் 1 (மண்) |
| 11 | கிருஷ்ணகிரி | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ வளைகோல்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்)<br>➢ கைப்பந்து ஆடுகளம் 2 (களிமண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 3 (களிமண்)<br>➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்<br>➢ குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்)<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 2<br>➢ கபாடி ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கோ கோ ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம் 2 (5 ஆடுகளங்கள்)<br>➢ டேக்வாண்டோ உள்ளரங்கம் 1<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ சிமெண்ட் நடைபாதை 1,300 மீ<br>➢ நீச்சல்குளம் 1<br>➢ குழந்தைகளுக்கான நீச்சல் குளம் 1<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி<br><br>**சிறு விளையாட்டரங்கம், ஓசூர்:**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கபாடி ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கிரிக்கெட் மைதானம்<br><br>**சிறு விளையாட்டரங்கம், ஊத்தங்கரை தாலுகா :**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்) |

| | | |
|---|---|---|
| | | ➢ கபாடி ஆடுகளம் 1 (களிமண்) |
| 12 | மதுரை | ➢ 400 மீ செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ செயற்கை இழை வளைகோல் பந்து மைதானம் 1 (மின்னொளி வசதியுடன்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 3 (மண்) (1 மின்னொளி )<br>➢ கபாடி ஆடுகளம் 2 (மின்னொளியுடன்) (1 விரிப்பு வசதியுடன்)<br>➢ கோ கோ ஆடுகளம் 2<br>➢ இறகுப்பந்து உள்ளரங்க ஆடுகளம் 2<br>➢ செயற்கை இழை கூடைப்பந்து ஆடுகளம் 2 (1 மின்னொளி வசதியுடன்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 2<br>➢ டென்னிஸ் ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கிரிக்கெட் பயிற்சி வலை 2<br>➢ குத்துச்சண்டை வளையம் 1<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1<br>➢ டென்னிகாய்ட் ஆடுகளம் 4 (சிமெண்ட்)<br>➢ டென்னிகாய்ட் ஆடுகளம் 3 (மண்)<br>➢ ஜிம்னாஸ்டிக் அரங்கம் 1<br>➢ உடற்பயிற்சி கூடம் 1<br>➢ இறகுப்பந்து உள்விளையாட்டு ஆடுகளம் 4 (மரதரை மின்னொளியுடன்)<br>➢ நீச்சல் குளம் 25மீx13மீ<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 2<br>➢ மேசைப்பந்து கூடம் 1<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி |
| | | **எல்லீஸ் நகர், மதுரை:**<br>➢ வளைகோல்பந்து மைதானம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்) |
| 13 | நாகப்பட் டினம் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (மண்) (1 மின்னொளியுடன்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்) |

| | | |
|---|---|---|
| | | ➢ டென்னிஸ் ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் 1<br>➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மரத்தரை மின்னொளியுடன்)<br>➢ மேசைப்பந்து 1<br>➢ பளுதுக்குதல் 1<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி அரங்கம் 1<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br><br>**சிறு விளையாட்டரங்கம், தரங்கம்பாடி தாலுகா, நாகப்பட்டினம்:**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1 |
| | | **சிறு விளையாட்டரங்கம், திட்டச்சேரி:**<br><br>➢ 200 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்துமைதானம் (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2<br>➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் 1<br><br>**சிறு விளையாட்டரங்கம், ஆயக்காரன்புலம்:**<br><br>➢ 200 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ–கோ ஆடுகளம் 1 |

| | | |
|---|---|---|
| | | **சிறு விளையாட்டரங்கம், திட்டச்சேரி:**<br><br>➢ 200 மீ தடகள ஒடுபாதை (மண்)<br>➢ கால்பந்துமைதானம் (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2<br>➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் 1<br><br>**சிறு விளையாட்டரங்கம், ஆயக்காரன்புலம்:**<br><br>➢ 200 மீ தடகள ஒடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ–கோ ஆடுகளம் 1 |
| 14 | நாமக்கல் | ➢ 400 மீ தடகள ஒடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ வளைகோல்பந்து மைதானம் 1<br>➢ கையுந்துபந்து ஆடுகளம்<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1<br>➢ நீச்சல்குளம்<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி<br>➢ நாமக்கல் செல்வம் மேல்நிலைப் பள்ளியில் ஆணையத்தின் ஆண் மற்றும் பெண் இருபாலருக்கான விளையாட்டு விடுதி.<br><br>**சிறு விளையாட்டரங்கம், திருச்செங்கோடு.**<br><br>➢ 400 மீ. தடகள ஒடுபாதை<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1<br>➢ இறகுப்பந்து ஆடுகளம் 1 |

| | | |
|---|---|---|
| 15 | பெரம்ப லூர் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் (மண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ கையுந்துபந்து மண் தரை ஆடுகளம் 2<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ கபாடி ஆடுகளம்<br>➢ கோ கோ ஆடுகளம்<br>➢ நீச்சல்குளம் 25x13 மீ.<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 2 மரத்தரை ஆடுகளங்கள்<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி<br><br>**சிறு விளையாட்டரங்கம், வேப்பந்தட்டை:**<br><br>➢ 200 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து சிறு மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து மண் தரை ஆடுகளம் 2<br>➢ கபாடி ஆடுகளம் 1 |
| 16 | புதுக்கோ ட்டை | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ வளைகோல்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ கபாடி ஆடுகளம் 1 (மண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ உடற்பயிற்சிக் கூடம் 1<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மின்னொளியுடன்) (புதுக்கோட்டை இறகுப்பந்து கிளப்–ஆல் கட்டப்பட்டு பராமரிக்கப்படுகிறது)<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ குத்துச்சண்டை வளையம் 1 (மரத்தரை)<br>➢ பயிற்சி நடைபாதை<br>➢ மேசைப்பந்து கூடம் 1<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி |

| | | |
|---|---|---|
| 17 | இராமநாதபுரம் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மின்னொளி)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1<br>➢ கால்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ வளைகோல் பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கபாடி ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கோ கோ ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்)<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 2 (மின்னொளியுடன்)<br>➢ கிரிக்கெட் பயிற்சி வலை 2<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் (மின்னொளியுடன்) 3 ஆடுகளங்கள்<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி<br><br>**சிறு விளையாட்டரங்கம், பரமக்குடி:**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ கையுந்துபந்து ஆடுகளம்<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ–கோ ஆடுகளம் 1<br>➢ இறகுப்பந்து (சிமெண்ட்) 1 |
| 18 | சேலம் | ➢ 400 மீ தடகளம் ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் (மண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 3 (மண்) (1 மின்னொளியுடன்)<br>➢ கபாடி ஆடுகளம் 1 (மண்)<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ குத்துச்சண்டை வளையம் 1 (சிமெண்ட்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ கிரிக்கெட் பயிற்சி வலை 1 (மண்)<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 1 |

| | | |
|---|---|---|
| | | ➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 4 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ இந்திய விளையாட்டு ஆணைய பயிற்சி மையம் |
| 19 | சிவ கங்கை | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண்)<br>➢ வளைகோல்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ கோ கோ ஆடுகளம் (களிமண்)<br>➢ கபாடி ஆடுகளம் 2 (களிமண்)<br>➢ நீச்சல்குளம் (25மீx13மீ) 1<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 3 (1 மரத்தரை (காஞ்சிரங்கால்), 2 செயற்கை இழை)<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி |
| 20 | தஞ்சா வூர் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ வளைகோல் பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 4 (களிமண்)<br>➢ கால்பந்து புல்தரை மைதானம் 1<br>➢ வளைகோல்பந்து செயற்கை இழை பயிற்சி மைதானம் 1<br>➢ குத்துச்சண்டை ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1<br>➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் 1<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1<br>➢ கடற்கரை கையுந்துபந்துஆடுகளம் 1<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம்<br>➢ டென்னிஸ் சிமெண்ட் ஆடுகளம் 1<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ பயிற்சி நடைபாதை<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி |

| | | |
|---|---|---|
| | | **சிறு விளையாட்டரங்கம், பட்டுக்கோட்டை.**<br><br>➢ 200 மீ. தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1 |
| 21 | தேனி | ➢ கபாடி ஆடுகளம் 2<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 2 (மரத்தளம்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1<br>➢ மேசைப்பந்து அரங்கம் 1 (உள்ளரங்கம்)<br>➢ டென்னிஸ் ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ ஸ்குவாஷ் உள்ளரங்க ஆடுகளம் 1<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ நீச்சல்குளம் 1<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவ மாணவியருக்கான விளையாட்டு விடுதி |
| 22 | நீலகிரி | ➢ 400 மீ 6 வரிசை தடகள ஓடுபாதை (கரித்தூள்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் தளம் கூரையுடன்)<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 1<br>➢ கிரிக்கெட் பயிற்சி வலை 2<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி<br><br>**அண்ணா உள்விளையாட்டரங்கம், ஸ்டோன் ஹவுஸ் ஹில் போஸ்ட், ஊட்டி.**<br><br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 3 (மரத்தரை மின்னொளியுடன்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் 1<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி<br><br>**சிறு விளையாட்டரங்கம், காந்தி மைதானம், கோத்தகிரி:**<br><br>➢ கால்பந்து மைதானம் |

| | | |
|---|---|---|
| | | ➢ 200 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமென்ட்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br><br>**பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், குன்னூர்:**<br><br>➢ மரத்தரை இறகுப்பந்து ஆடுகளம் 2<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>**பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், கூடலூர்:**<br><br>➢ மரத்தரை இறகுப்பந்து ஆடுகளம் 2<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1 |
| 23 | திருவள்ளூர் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 2 (சிமெண்ட்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ–கோ ஆடுகளம் 1<br>**முகப்பேர் விளையாட்டு வளாகம்:**<br><br>➢ டென்னிஸ் ஆடுகளம் 4 (2 செயற்கை இழை, 2 களிமண்)<br>➢ செயற்கை இழை கூடைப்பந்து ஆடுகளம் 2<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் டால்பின் அகாடமிக்கிடையே பொது தனியார் பங்களிப்பின் கீழ்)<br>**வீராபுரம் துப்பாக்கிச் சுடும் தளம்** |
| 24 | தூத்துக்குடி | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல் தரை)<br>➢ வளைகோல் பந்து மைதானம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (மின்னொளியுடன்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மின்னொளியுடன்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம்<br>➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்<br>➢ ஸ்குவாஷ் ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம்<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ |

| | | |
|---|---|---|
| | | ➢ சிறு நீச்சல்குளம்<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி |
| 25 | திருச்சிராப்பள்ளி | ➢ 400 மீ 8–வரிசை செயற்கை இழை தடகள ஓடுதளம்<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ வளைகோல் பந்து மைதானம் 2 (1 செயற்கை இழை)<br>➢ வலைப்பந்து 1 (களிமண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 4 (1 மின்னொளியுடன், 1 மின்னொளி இல்லாமல், 1 கால்வால்யும் கூரையுடன் மின்னொளி மற்றும் 1 கடற்கரை கையுந்துபந்து )<br>➢ கூடைப்பந்து கான்கிரீட் ஆடுகளம் 2 (1 மின்னொளியுடன்)<br>➢ கபாடி ஆடுகளம் 2 (களிமண்) (விரிப்பு வசதி 1–க்கு உள்ளது)<br>➢ கோ கோ ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் 1 (குளிர்சாதன வசதி)<br>➢ டென்னிஸ் ஆடுகளம் 2 (மண்)<br>➢ நவீன பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் 1 (மின்னொளி)<br>➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் 1<br>➢ நீச்சல்குளம் 25மீx21மீ<br>➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி<br>➢ மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் |
| 26 | திருநெல்வேலி | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (களிமண்)<br>➢ வளைகோல் பந்து மைதானம் 1 (செயற்கை இழை)<br>➢ வளைகோல்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ கபாடி ஆடுகளம் 1 (மண்)<br>➢ கோ கோ ஆடுகளம் 1 (மண்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ ஜிம்னாசியம் அரங்கம் 1<br>➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் 1<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 1 (மின்னொளியுடன்) |

| | | |
|---|---|---|
| | | ➢ சறுக்கு வளையம் 1 (சிமெண்ட்)<br>➢ இறகுப்பந்து உள்ளரங்கம் (மரத்தரை)<br>➢ கால்வால்யும் கூரையுடன் கூடிய கையுந்துபந்து ஆடுகளம்<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம், வ.உ.சி.மைதானம் 1<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம், (ஜின்னாதிடல்) 1<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி<br>➢ மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம்<br><br>**சிறு விளையாட்டரங்கம், ஆலங்குளம் தாலுகா:**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம்<br>➢ கையுந்துபந்து ஆடுகளம்<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1<br>➢ கபாடி மற்றும் கோ–கோ ஆடுகளம் |
| | | **சிறு விளையாட்டரங்கம், கல்லிடைக்குறிச்சி:**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம்<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1<br>➢ டென்னிகாய்ட் ஆடுகளம் 1<br>**சிறு விளையாட்டரங்கம், மேலப்பாளையம்:**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம்<br>➢ கூடைப்பந்து ஆடுகளம்<br>➢ கையுந்துபந்து ஆடுகளம்<br>➢ கபாடி மற்றும் கோ–கோ ஆடுகளம்<br>**சிறு விளையாட்டரங்கம், சங்கரன்கோவில்:**<br><br>➢ 200 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் |

| | | |
|---|---|---|
| | | ➢ கையுந்துபந்து ஆடுகளம்<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் |
| 27 | திருவண்ணா மலை | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (புல்தரை)<br>➢ வளைகோல் பந்து மைதானம் (களிமண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட் மின்னொளியுடன்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (களிமண், மின்னொளியுடன்)<br>➢ குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்)<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் 2 (மின்னொளியுடன்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி உள்ளரங்கம் மற்றும் மேசைப்பந்து அரங்கம் 1<br>➢ நீச்சல்குளம் 25மீx16மீ<br>➢ குழந்தைகள் நீச்சல்குளம்<br>➢ கால்வால்யும் கூரையுடன் கூடிய கூடைப்பந்து ஆடுகளம்<br>➢ மித துார அகாடமி விடுதி<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி |
| | | **சிறு விளையாட்டரங்கம், ஆரணி:**<br>➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமென்ட்)<br>➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் 1<br>**சிறு விளையாட்டரங்கம், தண்டராம்பட்டு தாலுகா**<br>➢ 400 மீ தடகள ஓடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1<br>➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் 1 |

| | | |
|---|---|---|
| 28 | திருவா ரூர் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (களிமண்)<br>➢ கால்பந்து / வளைகோல் பந்து மைதானம்<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (களிமண்)<br>➢ நீச்சல்குளம் 25மீx13மீ<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1 |
| 29 | வேலூர் | ➢ 200 மீ. தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து / வளைகோல்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 1 (மண்)<br><br>**சிறு விளையாட்டரங்கம், ஜோலார்பேட்டை:**<br><br>➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து / வளைகோல் பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 (மண்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br>➢ கபாடி ஆடுகளம் 1 (மண்)<br>➢ கோ–கோ ஆடுகளம் 1<br>➢ உடற்பயிற்சி மையம் (ஆண் மற்றும் பெண்) 1<br><br>**சத்துவாச்சாரி பளுதூக்கும் மையம்** |
| 30 | விழுப் புரம் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2<br>➢ கூடைப்பந்து சிமெண்ட் ஆடுகளம் 2<br>➢ கபாடி ஆடுகளம் 1<br>➢ கோ கோ ஆடுகளம் 1<br>➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி |
| 31 | விருது நகர் | ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)<br>➢ கால்பந்து மைதானம் 1 (மண்)<br>➢ வளைகோல் பந்து மைதானம் 1 (மண்)<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2 ( மின்னொளியுடன்)<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (மின்னொளியுடன்)<br>➢ பல்நோக்கு உடற்பயிற்சி கூடம் 1<br>➢ குத்துச்சண்டை வளையம் 1<br>➢ ஸ்குவாஷ் ஆடுகளம் 1<br>➢ கபாடி ஆடுகளம் 1 |

| | | |
|---|---|---|
| | | ➢ கோ கோ ஆடுகளம் 1<br>➢ பூப்பந்து ஆடுகளம் 1<br>➢ கைப்பந்து ஆடுகளம் 1<br>➢ டென்னிகாய்ட் ஆடுகளம் 2<br>➢ டென்னிஸ் ஆடுகளம் 1 (மண்)<br>➢ மேசைப்பந்து பலகை1<br>➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் 1<br><br>**சிறு விளையாட்டரங்கம், சிவகாசி தாலுகா:**<br>➢ 400 மீ தடகள ஒடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1<br>➢ கையுந்துபந்து ஆடுகளம் 2<br>➢ கூடைப்பந்து ஆடுகளம் 1 (சிமெண்ட்)<br><br>**சிறு விளையாட்டரங்கம், நென்மேனிமேட்டுப்பட்டி:**<br>➢ 400 மீ தடகள ஒடுபாதை<br>➢ கால்பந்து மைதானம் 1 |

## சென்னை – ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம்





பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், சென்னை



நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை



டென்னிஸ் விளையாட்டரங்கம், சென்னை



மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், சென்னை






மாவட்ட விளையாட்டு வளாகம், திருவள்ளூர்



மாவட்ட நீச்சல் குளம், திருவாரூர்



உள்விளையாட்டரங்கம், தர்மபுரி



மாவட்ட விளையாட்டு வளாகம், உதகை



மாவட்ட விளையாட்டு வளாகம், கோயம்புத்தூர்




மாவட்ட விளையாட்டு வளாகம், நாகப்பட்டினம்



மாவட்ட நீச்சல் குளம், விழுப்புரம்



மாவட்ட நீச்சல் குளம், திருச்சி



**WBTSS – இருப்பிட பயிற்சி முகாம்**





பாரம்பரிய விளையாட்டுகள்






மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்





தலைமைச் செயலக பணியாளர்களுக்கான
நவீன உடற்பயிற்சி கூடம்



